வீலை ரூபா: 20.00

தமிழ்நாதம்

Thamil Naatham



இராகம் 01 | தாளம் 72 | வள்ளுவர் ஆண்டு 2043 புரட்டாதி 11 வியாழக்கிழமை (27.09.2012) | பக்கங்கள்: பதினாறு



வண்ணை. ஸ்ரீவேங்கடேஸ்வர பெருமாள் தீர்த்தோற்சவம் நேற்று வெகு சிறப்பாக ஆலயத் தீர்த்தக் கேணியில் நடைபெற்றது. பெருமாள் ஸ்ரீ தேவி, பூமி தேவி சகிதம் எழுந்தருளுவதை படத்தில் காணலாம்.

சூரிபுரத்தில் தங்கவைக்கப்பட்டிருக்கும் மக்களுக்கு அடிப்படை வசதிகள்

முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர்

(கொழும்பு)

வவுனியா மெனிக்பாம் நலன்புரி நிலையத்திலிருந்து மீள்குடியேற்றத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு முல்லைத்தீவு சூரிபுரம் பிரதேசத்தில் தங்க வைக்கப்பட்டிருக்கும் மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் யாவும் செய்து கொடுக்கப்பட்டிருப்பதாக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

இங்குள்ள மக்களுக்குத் தற்காலிகமான வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருப்பதுடன், இவர்களுக்கான நிரந்தர வீடுகளை அமைப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

மெனிக்பாம் நலன்புரி நிலையத்திலிருந்து அழைத்துச் செல்லப்பட்டவர்கள் சூரிபுரம் காட்டுப் பகுதியில் எந்தவித அடிப்படை வசதிகளும் இல்லாத நிலையில் நடுத்தெருவில் விடப்பட்டிருப்பதாக ஊடகங்களில் வெளியாகியிருக்கும் குற்றச்சாட்டுக்களை மறுத்திருக்கும் முல்லைத்தீவு அரசாங்க அதிபர், தேவையான அடிப்படை வசதிகளுடனேயே அவர்கள் தங்க வைக்கப்பட்டிருப்பதாகவும், மேலதிகமான 02

தமிழகத்துக்கான பயணத் தடையை இலங்கை இன்னும் தளர்த்தவில்லை

(கொழும்பு)

தமிழகத்திற்கான பயண எச்சரிக்கையை தளர்த்துவது தொடர்பில் இதுவரையில் தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை என வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

தமிழகத்திற்கான பயணங்கள் தொடர்பில் இலங்கை தொடர்ந்தும் தமிழக நிலைமையைக் கண்காணித்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளது.

பயண எச்சரிக்கையை தளர்த்துவது குறித்து இதுவரையில் இறுதித் தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை என்று வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக்க அமுனுகம தெரிவித்தார்.

தமிழகம் செல்லும் இலங்கையர்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டதனைத் தொடர்ந்து வெளிவிவகார அமைச்சு பயண எச்சரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

பயண எச்சரிக்கை விடுக்கப்பட்டதனைத் தொடர்ந்து தமிழகத்திற்கு விஜயம் செய்யும் இலங்கையர்களின் எண்ணிக்கையில் பாரிய அளவு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழகத்தில் பூண்டி மாதா கோவில் தரிசனத்துக்குச் சென்ற சிங்கள யாத்திரிகள் தாக்கப்பட்டனர். அத்துடன் இலங்கையிலிருந்து சென்ற உதைபந்தாட்டக் கோஷ்டி ஒன்றும் விரட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

நெளருவிலிருந்து சிலர் நாடு திரும்ப விருப்பம்

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவில் குடியேறுவதற்காக சட்டவிரோதமாக கடல் வழியாக படகுகளில் பயணித்த சில இலங்கையர்கள் நெளரு தீவில் தங்கவைக்கப்பட்டதை விரும்பவில்லை. இதனால் அவர்களுள் சிலர் நாடு திரும்ப விருப்பம் கொண்டுள்ளனர்.

ஆனாலும் நெளரு தீவுகளில் உள்ளவர்களுக்கு பொழுதுபோக்கு வசதிகளை அரசு ஏற்படுத்திக் கொடுத்துள்ளதாகவும் தெரிய வந்துள்ளது.

தொலைக்காட்சி, திரைப்படங்கள், கணினி விளையாட்டுக்கள், இணையத் தொடர்பு, தொலை பேசி அழைப்பு வசதிகள் மற்றும் கிரிக்கெட் உபகரணங்கள் போன்ற வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

இவர்களுக்கு கையடக்கத் தொலை பேசிகள் வழங்கப்படவுள்ளதாக செஞ் சிலுவைச் சங்க உத்தியோகஸ்தர் ஒருவர் குறிப்பிட்டார். 02

கிணற்றில் வீழ்ந்து குடும்பஸ்தர் பலி: வட்டுக்கோட்டையில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

கிணற்றில் தவறி வீழ்ந்து குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக வட்டுக்கோட்டைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று அதிகாலை 4 மணியளவில் இச்சம்பவம் நடைபெற்றுள்ளதாக பொலிஸாரின் விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

சித்தங்கேணி கீரிமலை வீதியைச் சேர்ந்த 5 பிள்ளைகளின் தந்தையான கதிரவேலு இராசேந்திரம் (வயது 54) என்பவரே கிணற்றில் தவறி வீழ்ந்து உயிரிழந்தவராவர்.

இவரது சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் 02

கிராமிய பாதைகளுக்கு நிதியுண்டு ஆனால் அபிவிருத்திதான் இல்லை

அமைச்சர் பஷில் கண்டனம்

(கொழும்பு)

வடக்கின் பல பிரதேசங்களின் கிராமிய பாதைகளைப் புனரமைப்பதற்கென பொருளாதார அபிவிருத்தி அமைச்சு பெருமளவு நிதியை வழங்கியுள்ள போதும் அந்தப் பணம் செலவு செய்யப்படவில்லையென அமைச்சர் பஷில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான விசேட அபிவிருத்திக் கூட்டத்தில் இது தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அண்மையில் 77 கிலோ மீற்றர் கிராமிய பாதைகளைப் புனரமைக்க பணம் வழங்கப்பட்டது என தெரிவித்த அமைச்சர் பணத்தைப் பெற்றுக்கொள்பவர்கள் பாதைகளைப் புனரமைப்பதில் மந்தப் போக்கையே கடைப்பிடிப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நடைபெற்ற இந்த 02

கத்திக் குத்தில் ஒருவர் பலி: கொலையாளி சடலமாக மீட்பு

(நுவரெலியா)

நுவரெலியா, ராகலை, அல்மாலியன்வல தோட்டப்பகுதியில் இடம் பெற்ற கத்திக்குத்துச் சம்பவமொன்றில் 50 வயதான தந்தையொருவர் கொல்லப்பட்டதுடன் அவரது 30 வயது மகள் படுகாயங்களுக்கு உள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் ராசமணி என்பவரே கொல்லப்பட்டவராவார்.

அவரது மகள் மஞ்சுளா காயங்களுக்கு உள்ளான 02

பதில் அதிபர்களை அதிபர்களாக நியமனம் செய்ய முடியாது

ஆசிரியர் சங்கம் எதிர்ப்பு

(கொழும்பு)

சேவை அமைப்பு யாப்பை மீறி பதில் அதிபர்களை இணைத்துக் கொள்ளும் திட்டத்தை ஏற்றுக் கொள்ள முடியாதென இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பிரதான செயலாளர் ஜோசப் ஸ்டாலின் விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

பாடசாலையில் சிரேஷ்ட ஆசிரியர்கள் இருக்கையில் 02

மெனிக்பாம் முகாம் விவகாரம்: இது மீள்குடியேற்ற அமைச்சின் தகவல்

(கொழும்பு)

மெனிக்பாம் முகாமை மூடி விட்டு அங்கு எஞ்சியிருந்த இடம் பெயர்ந்த மக்களை முல்லைத்தீவிலுள்ள காட்டுப் பகுதியில் எதுவித அடிப்படை வசதிகளுமின்றி ஆதரவாக விடப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டை மீள்குடியேற்ற அமைச்சு முற்றாக நிராகரித்துள்ளது. சில ஊடகங்களும் அரசியல் கட்சிகளுமே இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ள போதும், மீள் குடியேற்றப்பட்ட எவரும் இது தொடர்பில் முறையிடவில்லை எனவும் மக்கள் சொந்த விருப்பத்துடனே மீள் குடியேறியுள்ளதாகவும் 02

சங்கானையில் 180 பேருக்கு எதிராக வழக்கு பதிவு

சங்கானை மதுவரி நிலையத் திற்குட்பட்ட பகுதிகளில் 180 மது வரி குற்ற வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக சங்கானை மதுவரி நிலய பொறுப்பதிகாரி த.நந்தகுமார் கூறினார்.

அந்தவகையில், ஓகஸ்ட் மாதம் காலப்பகுதியில் காரைநகர் மற் றும் சண்டிலிப்பாய், மாதகல் போன்ற பகுதிகளில் சட்டவிரோத மதுபான விற்பனை மற்றும் 21 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு சிகரெட் விற்பனை செய்த 180 பேருக்கு எதிராக வழக்குகள் தொடரப் பட்டுள்ளன என்றார். இவர்களுக்கு எதிராக ஊர்காவற்துறை மற்றம் மல்லாகம் நீதி மன்றங்களில் வழக் குகள் தாக்கல் செய்யப்பட்டுள் ளன என்றும் இவர்களிடமிருந்து ஒரு இலட்சத்து 51 ஆயிரம் ரூபா தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ள தாகவும் அவர் மேலும் கூறினார்.

ஆரையம்பதியில் இரு சிறுமியர் கடத்தப்பட்டதாக முறைப்பாடு

மட்டக்களப்பு, காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஆரை யம்பதி கோயில்குளத்தில் பாட சாலை சிறுமிகள் இருவர் நேற்று புதன்கிழமை பிற்பகல் கடத்தி செல்லப்பட்டதாக காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் முறைப் பாடு செய்யப்பட்டுள்ளது.

சுமார் ஆறு மற்றும் ஏழு வயது நிரம்பிய இந்த சிறுமிகள் பாட சாலையிலிருந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த போது இனந்தெரி யாத நபர்களால் கடத்தி செல் லப்பட்டதாக பொலிஸில் முறைப் பாடு செய்யப்பட்டுள்ளது.

எனினும், மேற்படி சிறுமிகளில் ஒருவர் தாழங்குடா கடற்கரையி லிருந்து பொலிஸாரினால் மீட்கப் பட்டு வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டுள்ளார். மற்றொரு சிறுமியை பொலிஸார் தேடி வரு கின்றார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வரு கின்றனர்.

சைவப்புலவர் சங்கக் கூட்டம்

மருதனார்மடம்

அகில இலங்கைச் சைவப் புல வர் சங்க நிர்வாக சபைக் கூட்டம் நாளை மறுதினம் (சனிக்கிழமை) காலை 9.00 மணிக்கு வண்ணார் பண்ணை நாவலர் மகாவித்தியா லயத்தில் நடைபெறவுள்ளது.

இந்த வருடம் நடைபெறும் பட் டமளிப்பு விழா சங்கத்தின் பொதுக்கூட்டம் மற்றும் அபிவிருத் திப் பணிகள் சம்பந்தமான விட யங்கள் பற்றிக் கலந்துரையாடலி ருப்பதால் சைவப்புலவர்கள் எல் லோரையும் மேற்படி கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளும்படி சங்கத்தின் செயலாளர் சைவப் புலவர் செ. கந்த சத்தியதாசன் வேண்டுகோள் விடுத்துள்ளார். (01)

தேசிய வீடமைப்பு அதிகார சபை: யாழ்.குருநகரில் வீடு கையளிப்பு

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையி னால் மேற்கொள்ளப்பட்டு வரும் ஒரு வீடு ஒரு கிரா மம் என்ற வீட்டுத் திட்டத்தில் தெரிவாகிய வீட்டுப் பயனாளிக்கான வீடு கையளிக்கப்பட்டது.

யாழ். குருநகர் கடற்கரை வீதியில் அமைக்கப் பட்ட புதிய வீட்டினை யாழ். மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா நேற்று நாடா வெட்டி திறந்து வைத்தார்.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அமைச்சர் விமல் வீரவன்சவினால் ஒதுக்கப்பட்ட நிதியில் இருந்து தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் யாழ். மாவட்ட முகாமையாளர் தலைமையில் சுமார் 129 புதிய வீடுகள் கட்டுவ தற்கான கடனுதவிகள் வழங்கப்பட்டன.

மாற்றுத்திறனாளிகளுக்கு பயன் தரும் சட்டங்கள் பாராளுமன்றத்தில்

மாற்றுத்திறனாளிகளுக்கு நன்மை ஏற்படக்கூடிய வகையிலான சட்டமூலம் விரைவில் பாராளுமன்றத் தில் முன்வைக்கப்படவிருப்பதாக

சமூக சேவைகள் அமைச்சின் மாற்றுத் திறனாளி களுக்கான தேசிய செயலகத்தின் பணிப்பாளர் எம்.டி.சி.ஜயமான தெரிவித்தார்.

புதிய சட்டமூலம் தொடர்பில் சட்டவரைஞர் திணைக்களத்தின் உதவியைப் பெறவிருப்பதுடன், நீதிச் சபையுடன் கலந்துரையாடல்களை நடத்த விருப்பதாக அவர் குறிப்பிட்டார். இந்தச் சட்டமூல மானது மாற்றுத்திறனாளிகளுக்கு மேலும் நன்மை ஏற்படக்கூடிய வகையில் அமையும் என்றார்.

பார்வையிழந்தவர்களின் சம்மேளனம் ஏற்பாடு செய்திருந்த விசேட ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர், மாற் றுத் திறனாளிகளுக்கு அரசாங்கம் தொடர்ந்தும் பல் வேறு உதவிகளை மேற்கொண்டு வருகிறது. 2014 ஆம் ஆண்டில் அனைத்து அரசாங்க மற்றும் பொதுக் கட்டடங்கள் மாற்றுத் திறனாளிகள் இலகுவில் சென்று வரக்கூடிய வகையில் மாற்றப்பட்டிருக்கும்.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் 2006ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது.

இந்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டி ருப்பது போன்று மாற்றுத்திறனாளிகள் இலகுவில் சென்று வரக்கூடிய வகையில் புதிய பொதுக் கட்ட டங்கள் அமைக்கப்படாவிட்டால் அவற்றுக்கு அனு மதி வழங்கப்பட மாட்டாது. இது குறித்து பிரதேச செயலகங்கள், மாநகர சபைகள், நகரசபைகளுக்கு தேசிய சபை அறிவித்துள்ளது.

அதேநேரம், மாற்றுத் திறனாளிகள் 1000 பேருக்கு வீடுகளை அமைத்துக் கொடுக்கும் திட்டத்தின் கீழ் 600 வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன.

அடுத்தவருடம் இந்த எண்ணிக்கையை மேலும் அதிகரிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

மாற்றுத்திறனாளிகள் வீடுகளை அமைப்பதற்கு 250,000 ரூபா உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

மாற்றுத்திறனாளிகள் இந்த உதவித் தொகைை யப் பெற்றுக் கொள்வதற்கு மருத்துவரின் மருத்துவ சான்றிதழ், பிரதேச சபையினால் வழங்கப்படும் விசேட அடையாள அட்டை ஆகியவற்றுடன் அமைச்சிற்குவந்து விண்ணப்பிக்க முடியும்.

ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவிலும் தெரிவுசெய்யப்பட்ட 36 மாற்றுத்திறனாளிகளின் குடும்பங்களுக்கு மாதாந்தம் 3 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டு வருகிறது. இதற்கமைய நாடு முழுவதிலும் 11 ஆயிரத்து 216 பேருக்கு இக் கொடுப்பனவு வழங்கப்படுகிறது. இந்த எண்ணிக் கையை 16,500 ஆக அதிகரிப்பதற்கும் அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இவற்றுக்கு மேலதிகமாக மாற்றுத்திறனாளி களுக்கு ஒசுசல ஊடாக மருந்துகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு உதவிகளை நாம் வழங்கி வருகின் றோம் என்றார்.

அரச கல்வித்துறை அதிகாரிகளுக்கு மத்தியஸ்த பயிற்சி

மருதனார்மடம்

நிதி அமைச்சு அரச கல்வித் துறை அதிகாரிகளுக்காக சன சமூக மத்தியஸ்தம் சம்பந்தமான பயிற்சி செயலமர்வை ஏற்பாடு செய்துள்ளது.

பாடசாலை சமூகங்களுக்கிடையே முரண்பாட்டைத் தீர்த்துக் கொள் ளக்கூடிய வகையில் வலயங் களில் கடமையாற்றும் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், கோட் டக் கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோருக்கான இந்த செயல மர்வு மருதனார்மடத்திலுள்ள வட மாகாண கல்வித்திணைக்களக் கேட்போர் கூட்டத்தில் நேற்று (புதன்கிழமை) ஆரம்பமாகி நடை-பெற்றது.

இன்றும் நாளையும் காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணிவரை இந்த பயிற்சி செயல மர்வு தொடர்ந்து நடைபெறும்.

நீதி அமைச்சின் உத்தியோகத் தர்களான எஸ் சனாதனசர்மா, வி. சவரி நாயகம் ஆகியோர் இப் பயிற்சிகளை வழங்கிவருகின்றார் கள்.

வானொலியில் நேரடி அஞ்சல்

வல்லிபுரம் ஆழ்வார் தேவஸ் தான இரதோற்சவ நிகழ்ச்சி நாளை வெள்ளிக்கிழமை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன யாழ். சேவையில் நேரடியாக அஞ்சல் செய்யப்பட்டு வருகின்றது.

நாளை காலை 8.00 மணியி விலிருந்து 102, 92.2 அலைவ சைகள் ஊடாக ஒலிபரப்பவிருக் கும் இரதோற்சவ நிகழ்வுகளை மதுரகவி காரை எம்.பி. அருளா னந்தன் நேர்முக வர்ணனையாக தொகுத்து வழங்குவார்.

கத்திக்கு குத்தில் ஒருவர்... (தொடர்)

நிலையில் நுவரெலியா பொது வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளார்.

இதேவேளை, மேற்படி கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய பிர-தான சந்தேகநபர் அல்மா லியன் வல தோட்டத்திலிருந்து சுமார் 10 கிலோமீற்றர் தொலைவில் அமைந் துள்ள

ஐபொரஸ்ட் பகுதியில் மர்ம மான முறையில் உயிரிழந்த நிலை யில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பத்மநாதன் (30 வயது) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவ ராவார். இவரது மரணம் தற்கொ லையா? அல்லது கொலையா? என்பது தொடர்பில் ராகலை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை 7 மணியளவில் ராசமண-ியின் வீட்டுக்குச் சென்றுள்ள பத்ம நாதன், தனது மனைவிக்கு ஏற் பட்டுள்ள கள்ளத் தொடர்புக்கு ராசமணியின் மகள் மஞ்சுளாவே உதவி வருவதாகக் கூறி மஞ்சு ளாவை கத்தியால் குத்தியுள் ளார்.

இதனைத் தடுக்கச் சென்ற ராச மணியும் கத்திக்குத்துக்கு உள் ளாகி சம்பவ இடத்திலேயே உயி ரிழந்துள்ளார்.

சம்பவத்தை அடுத்து பத்ம நாதன் என்பவர் அங்கிருந்து தப் பிச் சென்றுள்ள நிலையில் இன்று காலை ஐபொரஸ்ட் பகுதியில் வைத்து சடலமாக மீட்கப்பட்டுள் ளார் என ராகலை பொலிஸார் தெரிவித்தனர்.

கிராமிய பாதைகளுக்கு நிதியுண்டு... (தொடர்)

அபிவிருத்திக் கூட்டத்தின் போது கிராமிய பாதைகள் புனர மைப்பு தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்.

பிரதேச சபைகளுக்கு இதற் கான பொறுப்புக்கள் ஒப்படைக் கப்பட்ட போதும் அதன் செயற் பாடுகள் திருப்திகரமாக இல்லை என்பதைச் சுட்டிக்காட்டிய அவர், அரசாங்கம் இதற்கு வேறு வகை யில் நடவடிக்கைகளை முன் னெடுப்பது சிறந்தது எனவும் ஜனாதிபதியிடம் கேட்டுக்கொண்டார்.

இதுபற்றித் தெளிவுபடுத்துகை யிலேயே அமைச்சர் பஷில் ராஜ பக்ஷ மேற்கண்டவாறு தெரிவித் தார்.

இதுபற்றி சம்பந்தப்பட்ட பிரதேச சபைத் தலைவர்களிடம் ஜனாதி பதி கேட்டபோது, தொழில் நுட்ப உத்தியோகத்தர்களின் பற்றாக் குறையும் இதற்கானதொரு கார ணமாக உள்ளதென அவர்கள் தெரிவித்தனர்.

இப்பிரச்சினையை கிளிநொச்சி மாவட்டச் செயலாளரின் கவனத் துக்குக் கொண்டுவந்த ஜனாதி பதி, ஒப்பந்த அடிப்படையிலாவது தொழில் நுட்ப உத்தியோகத் தர்களை நியமித்து இந்த செயற் திட்டங்களை நிறைவு செய்ய நட வடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொண்டார்.

அத்துடன் இச்செயற்பாடுகளில் உதவுமாறு முருகேசு சந்திரகுமார் எம்.பி. யையும் ஜனாதிபதி கேட்டுக்கொண்டார்.

கிணற்றில்... (தொடர்)

ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இவரது மரணம் தொடர்பாக வட்டுக் கோட்டைப் பொலிஸார் விசார ணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பதில்... (தொடர்)

அதிபருக்காக பதில் கடமையாற்றியவர்களை அதிபர் சேவை யாப் புக்கு மாறாக இணைத்துக் கொள்ள நாளை 27ஆம் திகதி கல்வி அமைச்சால் நேர்முகப் பரீட்சை நடத்தப்படவுள ளது.

கல்வி அமைச்சு விடுத்த சுற்ற நிக்கையின் பிரகாரம் அதிபர் களை இணைத்துக் கொள்ள முடியாது.

இதனை மீறி கல்வி அமைச்சு செயற்படுகிறது என்று அவர் குற்றஞ்சாட்டினார்.

மெனிக் பாம்... (தொடர்)

மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் ஜனக சுகததாஸ தெரிவித் தார்.

இறுதிக்கட்ட யுத்தத்தின்போது இடம்பெயர்ந்த சுமார் 3 இலட்சம் மக்களில் இறுதியாக எஞ்சியிருந்த 400க்கும் அதிகமான குடும்பங்கள் நேற்று முன்தினம் மீள்குடியேற்றப்பட்டனர்.

இதனையடுத்து மெனிக் பாம் நலன்புரி முகாம் மூடப்பட்டது.

மக்களுக்கு வசதிகள் எதுவும் வழங்காமலே அவர்கள் மீள்குடியேற்றப்பட்டதாக சில தரப்பினர் குற் றஞ்சாட்டியுள்ளது குறித்து கருத்துத் தெரிவித்த மீள்குடியேற்ற அமைச்சின் செயலா ளர்.

சூரிபுரத்தில்... (தொடர்)

வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் பணிகள் துரித கதியில் முன் னெடுக்கப்பட்டிருப்பதாகவும் கூறினார்.

சூரிபுரம் பகுதியில் தங்க வைக்கப்பட்டிருப்பவர்களுக்கு தற்காலிக மலசல கூடங்கள் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ளன.

இவர்களுக்குத் தேவையான நீர் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

நீர்த் தாங்கிகள் மூலம் நீர் விநியோகம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட் டிருக்கும் அதேநேரம், 10 குழாய் கிணறுகளும், 3 கிணறுகளும் அமைப்பதற்கு மீள் குடியேற்ற அமைச்சு நிதி ஒதுக்கியுள் ளது.

எதிர்வரும் சில தினங்களில் இப்பணிகளைப் பூர்த்திசெய்ய எதிர் பார்த்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நெளுவிலிருந்து... (தொடர்)

இருப்பினும் புகலிடம் கோரிய சிலரை அவர்களது சுயவிருப்பின் பேரில் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர் எனவும் அவ்வதி காரி கூறினார்.

இவர்களது மன உறுதி மோசமாக இல்லை எனவும், புதிய சூழ லுக்கு பழக்கப்பட கொஞ்ச காலம் தேவைப்படும் எனவும் அவ்வதிகாரி குறிப்பிட்டார்.

புகலிடக் கோரிக்கையாளர்களுக்கு நௌருவில் பொழுதுபோக்கு வசதிகள்

அவுஸ்திரேலியாவுக்கு அகதி அந்தஸ்து கோரி சென்று நௌரு தீவுகளுக்கு மாற்றப்படும் அகதிகளுக்கு பொழுதுபோக்கு வசதிகளை செய்து கொடுக்க அவுஸ்திரேலிய அரசு தீர்மானித்துள்ளது.

இதன்படி நௌரு தீவுக்குச் செல்வோருக்கு தொலைக்காட்சி, திரைப்படம், கணினி விளையாட்டுகள், இணைய வசதி, வெளி நாட்டு தொலைபேசி அழைப்புகள் மற்றும் கிரிக்கெட் உபகரணங்கள் என்பவற்றை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் முகாம்களில் உள்ள வர்களுக்கு இசை பயிற்சி வகுப்பு, ஆங்கில பயிற்சி வகுப்பு, கலை வகுப்பு போன்றவை நடாத்தப்படுவதாக நௌரு முகாமில் உள்ள இராணுவ அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

நௌரு முகாம் அகதிகளின் நாளாந்த வேலை, உணவு உண்பது நித்திரை கொள்வது, வகுப்புக்களுக்குச் செல்வது, கிரிக்கெட், கரப்பந்தாட்டம் விளையாடுவது, இலங்கை - ஈரான் அகதிகள் ஒன்றாக கூடி கலந்து மகிழ்வது போன்றவை என அவர் தெரிவித்துள்ளார்.

நௌரு தீவில் உள்ள அகதிகளுக்கு 10 தொலைபேசிகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் இலங்கை, ஈரானுக்கு அழைப்புகளை ஏற்படுத்துவதாகவும் தேவைப்படின் சிலருக்கு கையடக்கத் தொலைபேசி பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

மாலினி பொன்சேகா மீண்டும் சத்தியப்பிரமாணம்

மாலினி பொன்சேகா எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 9 ஆம் திகதி நாடாளுமன்ற உறுப்பினராக மீண்டும் சத்தியப்பிரமாணம் செய்யவுள்ளார்.

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 9ஆம் திகதி நடைபெறவுள்ள அடுத்த நாடாளுமன்ற அமர்வின் போது மாலினி பொன்சேகா சத்தியப்பிரமாணம் செய்யவுள்ளதாக பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்



மாலினி பொன்சேகா தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இராஜினாமாச் செய்தமை குறிப்பிடத்தக்கது.

கண்டி நகரில் ஆடு, மாடுகளை அறுக்கத் தடை

கண்டி நகருக்குள் இறைச்சிக்காக மாடு மற்றும் ஆடுகளை அறுப்பதனை தடை செய்ய கண்டி மாநகர சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

மாநகரசபை மாதாந்த கூட்டத்தில் முன்வைக்கப்பட்ட யோசனை ஒன்றை அடுத்து இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கண்டி மாநகர சபையின் எதிர்கட்சித் தலைவர் நெரஞ்சன் விஜேரத்ன குறித்த யோசனையை முன்வைத்த நிலையில் அதற்கு ஆளும், எதிர்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

பொலிஸ் சார்ஜன் கைது

இரண்டு மதுபான போத்தல்களை இலஞ்சமாகப் பெற்றுக் கொண்ட பொலிஸ் சார்ஜன் ஒருவர் இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சார்ஜன் நேற்றுமுன்தினம் மாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சார்ஜன் முந்தல் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வருகிறார். சந்தேக நபர் புத்தளம் மாவட்ட நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

இரத்தோட்ட பைனஸ் காட்டில் தீ

மாத்தளை இரத்தோட்ட பொலிஸ் பிரிவிலுள்ள மாவுஸ் ஸாகந்த பகுதி பைனஸ் காடொன்றில் திடீர் தீ பரவியுள்ளது.

நேற்று அதிகாலை 1.30 தொடக்கம் இத்தீ பரவ ஆரம்பித்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

பொதுமக்களுடன் இணைந்து இரத்தோட்ட பொலிஸார் தீயை அணைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். தீயினால் எவருக்கும் காயங்கள், சேதங்கள் ஏற்படவில்லை.

கைது

அழகுசாதனப் பொருட்களை சட்ட விரோதமாகக் கொண்டு வந்த நபர் ஒருவர் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் கடந்த24 ம் திகதி பி.ப. 1 மணியளவில் கைது செய்யப்பட்டார்.

சென்னையிலிருந்து வந்த 35 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட நபரிடமிருந்து ஐந்து இலட்சம் பெறுமதியான அழகு சாதனப் பொருட்கள் கைப் பற்றப்பட்டன.

ஏ-9 நெடுஞ்சாலையில் நேற்று பௌஸர் விபத்து: சாரதி பலி

வவுனியா, நொச்சிமோட்டை பகுதியில் நேற்றுப் புதன்கிழமை அதிகாலை இடம்பெற்ற விபத்தொன்றில் எண்ணெய்த் தாங்கி வாகனத்தின் சாரதி பலியாகியுள்ளார்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான இந்த எண்ணெய்த் தாங்கி வாகனம் ஏ-9 வீதியூடாக ஓமந்தையிலிருந்து வவுனியா நோக்கி வந்து கொண்டிருந்தபோது, மரமொன்றுடன் மோதி விபத்திற்குள்ளானதாக ஓமந்தை போக்கு வரத்துப் பொலிஸார் தெரிவித்தனர்.

அதிவேகமாக வாகனத்தை சாரதி செலுத்தியமையா அல்லது சாரதி உறக்கத்திலிருந்ததால் இந்த விபத்து சம்பவித்ததா என்பது தொடர்பில் எதுவும் தெரியவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.



இனிப்புத் தருவதாக கூறி அழைத்து சிறுமி மீது பாலியல் துஷ்பிரயோகம்

முதியவர் ஒருவர் கைது

ஹட்டன், பொகவந்தலாவை பொலிஸ் பிரிவிற்குற்பட்ட கர்க்கஸ்வோல்ட் மத்திய பிரிவில் வசித்த ஆறு வயது சிறுமி ஒரு வரை அதே தோட்டத்தில் வசிக்கும் 51 வயதுடைய முதியவர் ஒருவர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியுள்ளார்.

இந்த சம்பவம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை (25) மாலை நான்கு மணியளவில் இடம்பெற்றுள்ளதாக பொகவந்தலாவை பொலிஸார் தெரிவித்தனர்.

சிறுமிக்கு இனிப்புகள் தருவதாகக் கூறி அழைத்துச் சென்றுள்ள மேற்படி முதியவர், அவரை வல்லுறவுக்கு உட்படுத்தியதாக சிறுமி தெரிவித்துள்ளார்.

சந்தேகநபரை கைது செய்துள்ள பொகவந்தலாவை பொலிஸார், சம்பவத்தில் பாதிக்கப்பட்ட சிறுமியை வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

புதையல் தோண்டிய இருவருக்கு நீதிமன்றம் அபராதம் விதித்தது

புராதன தொல்பொருள் இடமாகக் கருதப்படும் பிரதேசத்தில் புதையல் தோண்டிய குற்றத்தை ஒப்புக் கொண்ட இருவருக்கு பலாங்கொட நீதவான் அபராதம் விதித்துள்ளார்.

அதன்படி ஒருவருக்கு மூன்று இலட்சம் ரூபா அபராதமும் மற்றைய நபருக்கு இரண்டு இலட்சம் ரூபாவும் அபராதத்தையும் பலாங்கொட நீதவான் அருணி ஆட்டிகல விதித்துள்ளார்.

பலாங்கொட - கல்கொல - பதுகல பிரதேச புராதன இடத்தில் புதையல் தோண்டியதாக 2011ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் கல்தொட்ட பொலிஸாரால் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, நாட்டின் புராதன முக்கியத்துவம் வாய்ந்த பல இடங்களில் புதையல் இருப்பதாக தெரிவிக்கப்படும் கதைகளை நம்பி பலர் புதையல் வேட்டைகளில் ஈடுபட்டிருந்த வேளை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நீதிமன்றம் அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஹக்கீமுடன் ரஷ்ய மனித உரிமை ஆணைக்குழு தூதுவர் பேச்சு

ரஷ்யாவின் மனித உரிமை ஆணைக்குழுவின் தூதுவர் கொன்ஸ்ரன்ரின் டொன்கோவ் தமது தூதுக்குழுவினருடன் நீதியமைச்சரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீமை அண்மையில் பாராளுமன்றத்தில் அவரது அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இக் கலந்துரையாடலின் போது சிறையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விவகாரம் தொடர்பான சட்ட ரீதியான அணுகு முறை, உள்ளக இடம்பெயர்ந்தோர் குறிப்பாக வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்டு மீண்டும் தமது முன்னைய வாழ்விடங்களில் மீள்குடியேறும் முஸ்லிம்களின் பிரச்சினைகள் என்பன பற்றி விரிவாக ஆராயப்பட்டது.

இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக மேற்கத்தேய நாடுகளின் ஒத்துழைப்புடன் அமெரிக்கா ஜெனீவாவில் முன்மொழிந்த பிரேரணைக்கு எதிரான நிலைப்பாட்டைக் கடைப்பிடித்த ரஷ்யாவுக்கு அமைச்சர் நன்றி தெரிவித்தார். அத்துடன் அந்த விடயத்தில் சீனாவின் இலங்கைக்குச் சார்பான நிலைப் பாட்டையும் அவர் பாராட்டினார்.

ரஷ்யாவில் முஸ்லிம்கள் இஸ்லாத்தைப் பின்பற்றுவதில் காட்டும் ஆர்வம் அதிகரித்துள்ளதாக மனித உரிமைகளுக்கான ரஷ்யத் தூதுவர் கூறிய போது, அங்குள்ள பிரதம முப்தி உட்பட சமயத் தலைவர்களைச் சந்திப்பதில் தாம் அதிக நாட்டம் கொண்டிருப்பதாக அமைச்சர் ஹக்கீம் தெரிவித்தார். அதற்கான தமது விருப்பத்தை இலங்கைக்கான ர'ய்த் தூதுவர் ஊடாக தாம் ஏற்கனவே தெரியப்படுத்தியிருப்பதாகவும் அவர் கூறினார்.

இன்றைய இராசி பலன் (27.09.2012)

நந்தன வருடம் புரட்டாதித் திங்கள் 11ஆம் நாள் வியாழக்கிழமை

நட்சத்திரம் : அவிட்டம் பி.ப. 2.11 வரை அதன் பின் சதயம்
திதி : துவாதசி காலை 9.19 வரை. அதன் பின் திரியோதசி
சுபநேரம் : 7.32 - 9.02
இராகுகாலம் : 1.32 - 3.02
(இந்த நேரங்கள் இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்)

மேடம் : ஏமாற்றம், வீண் பயம், அதிக யோசனை
இடபம் : நற்செய்கை, குடும்ப சுகம், விருப்பம் நிறைவேறல்
மிதுனம் : கடன், மனக்கஷ்டம், சுக நலம் பாதிப்பு
கடகம் : நற்செய்தி, உல்லாசப் பயணம், அந்நியர் உதவி
சிங்கம் : தொழில் பிரச்சினை, வீண் குறைகேட்டல், எதிரிகள் தொல்லை
கன்னி : பொருள் சேர்க்கை, குடும்பம் மகிழ்ச்சி, புத்திரர் நன்மை
துலாம் : வாய்வுத் தொல்லை, பூமி இலாபம், தாய்வழி நன்மை
விருச்சிகம் : வீண் முயற்சி, அலைச்சல், சகோதர சஞ்சலம்
தனுசு : தொழில் விருத்தி, நற்காரிய செய்கை, மனமகிழ்ச்சி
மகரம் : புதிய நட்புறவு, சிந்தனை மிகுதி, தலயாத்திரை
கும்பம் : தொழில் இலாபம், பெரியோர் உதவி, விவாக முயற்சி
மீனம் : கைப்பொருள் இழப்பு, ஆன்மீக ஈடுபாடு, தூக்கக் குறைவு

- ஜோதிடர் பால.இரத்தினசேகர்

யாழ் குடாநாட்டுக்கான மின்விநியோகம் ஜனாதிபதி ஆரம்பித்து வைத்தார்

தேசிய மின் விநியோக வலையமைப்பின் ஊடான வட மாகாணத்திற்கான மின்சார விநியோக இணைப்பினை நேற்று முன்தினம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச கிளிநொச்சியில் ஆரம்பித்து வைத்தார்.

இத்திட்டத்திற்கு ஜப்பான் அரசு 3200 மில்லியன் ரூபா நிதியுதவி வழங்கியிருந்தது. இத் தேசிய மின்நிலையமானது ஓர் உப மின்நிலையமாகும். தேசிய மின் நிலையம் ஊடான மின்சார விநியோகம் 1987ம் ஆண்டிலிருந்து தடைப்பட்டது. இதனால் வட பகுதி மக்கள் மின்சாரத்தை பெற்றுக் கொள்வதற்கு சிரமப்பட்டனர். 25 ஆண்டுகளின் பின்னர் மீண்டும் தேசிய மின் நிலையம் ஊடான மின்சார விநியோகம் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. இந் நிலையம் ஊடான மின்சார விநியோகம் யாழ். குடாநாட்டின் மருதங்கேணி ஊடாகப் பருத்தித்துறை உள்ளிட்ட வடமராட்சி பகுதிக்கு வழங்கப் படவுள்ளது.

தேசிய மின் விநியோகம் தடைப்பட்ட காலங்களில் மக்கள் மின் சாரம் இன்றி பல பிரதேசங்களில் வாழ்ந்து வந்தனர்.

தற்போது மீள் குடியேற்றம் செய்யப்பட்ட பிரதே சங்களில் இலவச மின்சார இணைப்புக்களை அரசாங்கம் வழங்கி வருகின்றது.

இதன் மூலம் மக்களின் தேவைகள் படிப்படியாக பூர்த்தி செய்யப் பட்டு வருகின்றமை குறிப்பிடத் தக்கது.



தேசிய மின்விநியோக வலையமைப்பின் யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கான மின்விநியோகத்தினை கிளிநொச்சியில் அமைந்துள்ள மின்பரிமாற்றத் திட்டத்தினூடாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச இணைத்து வைத்தார். ஜனாதிபதி இந்தத் திட்டத்தினை அங்குரார்ப்பணம் செய்து வைப்பதினைப் படத்தில் காணலாம்.

இ.போ.ச. பஸ்களில் இரண்டு மொழிகளிலும் பெயர்ப் பலகை: மீறினால் சட்ட நடவடிக்கை

தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழிகளிலும் பஸ்களில் பெயர்ப் பலகையை காட்சிப்படுத்தாத நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ள அரச கரும மொழிகள் மற்றும் சமூக நல்லிணக்க அமைச்சு தீர்மானித்துள்ளது.

அரச கரும மொழிக் கொள்கைக்கு அமைய, பஸ்களில் பெயர்ப் பலகையை இரு மொழிகளிலும் காட்சிப்படுத்துமாறு இலங்கை போக்குவரத்து சபை மற்றும் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை என்பவற்றிற்கு ஆலோசனை வழங்கியுள்ளதாக அரச கருமமொழிகள் மற்றும் சமூக நல்லிணக்க அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

ஆயினும், சில குழுவினர் இந்த ஆலோசனைகளை பின்பற்றுவதில்லை எனவும் அமைச்சர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்த நடைமுறை யை செயற்படுத்த போதிய கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இக் கால அவகாசம் முடிவுற்றதும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள் ளது.

இத்தகைய பெயர்ப்பலகைகள் இல்லாத பஸ்களை செலுத்தும் சாரதிகள் தொடர்பிலான தகவல்களை பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஊடாகத் திரட்டுவதற்கு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார நடவடிக்கை எடுத்துள்ளதாக அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நெடுந்தீவில் பெண்களின் செயலமர்வு

நேற்று முன்தினம் 25ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மத்தியஸ்த சபைகளில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கச் செய்வது தொடர்பான ஒரு நாள் செயலமர்வு நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. விழுது ஆற்றல் மேம்பாட்டு நிலையத்தினால் இச் செயலமர்வு ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த செயலமர்வில் முப்பதுக்கு மேற்பட்ட பெண்கள் கலந்து கொண்டனர்.

இங்கு மத்தியஸ்தம் என்பது சுயவிருப்புடன், நடுநிலையானதும் மூன்றாம் தரப்பினரின் உதவியுடன் சகல கட்சிக்காரர்களின் பங்களிப்புடனும் சுமூகமான தீர்வைத் தேடும் கலந்துரையாடற் செயல் வழி எனத் தெரிவிக்கப்பட்டது.

மத்தியஸ்தர்களின் செயற்பாடு, மத்தியஸ்தர் தொடர்பான சட்ட திட்டங்கள், முறைப்பாடு செய்யும் மக்கள் தரப்புகளுக்கிடையில்



முரண்பாடின்றி பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தல்,பிரச்சினைகள் தொடர்பில் மக்களால் எழுப்பப் பட்ட கேள்விகளுக்கும் அங்கு விடை அளிக்கப்பட்டது. இதுமட்டுமன்றி மத்தியஸ்தம் தொடர்பான பல்வேறுபட்ட கருத்துக்களும் கலந்துரையாடப்பட்ட மை குறிப்பிடத்தக்கது. இந் நிகழ்வில் பிரதேச செயலர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவன பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

யாழ். கல்விக் கோட்ட மட்ட திருக்குறள் மனனப் போட்டி முடிவுகள்

(உடுவில்)

யாழ்ப்பாணக் கல்விக் கோட்ட மட்ட திருக்குறள் மனனப் போட்டிகள் நடைபெற்றுள்ளன.

இப்போட்டியில் தரம் ஒன்றில் முதலாமிடத்தினை இ.சங்கவி (புனித டொண் பொஸ்கோ வித்தியாலயம்), இரண்டாமிடத்தினை பி.அபிஷேக் (சென்.ஜோன்ஸ் கல்லூரி), மூன்றாமிடத்தினை ரா.விந்தியா (சென் ஜேம்ஸ் மகளிர் பாடசாலை) ஆகியோரும்

தரம் இரண்டில் முதலாமிடத்தினை அ.நிகாரா (புனித சாள்ஸ் வித்தியாலயம்), இரண்டாமிடத்தினை ஜோ.ரா.அபிஷேக் (புனித டொண் பொஸ்கோ வித்தியாலயம்), மூன்றாமிடத்தினை ம.அட்சயா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரும் பெற்றுக் கொண்டனர்.

தரம் மூன்றில் முதலாமிடத்தினை தே.கிருத்திகா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), இரண்டாமிடத்தினை க.சாம்பவி (புனித டொண் பொஸ்கோ வித்தியாலயம்), மூன்றாமிடத்தினை ஆன் ரூபல் ஜக்சன் (திருக்குடும்ப கன்னியர்மட வித்தியாலயம்) ஆகியோரும் பெற்றுக் கொண்டனர்.

தரம் நான்கில் முதலாமிடத்தினை க.மதுமதி (புனித டொண் பொஸ்கோ வித்தியாலயம்), இரண்டாமிடத்தினை தஸ்பன் அன்ரனி பிறைன்காந் (புனித பற்றிக்ஸ் கல்லூரி), மூன்றாமிடத்தினை ஆன் நவீனா எலிஸ்ரன் (புனித திருக்குடும்ப கன்னியர் மட மகா வித்தியாலயம்) ஆகியோரும்

தரம் ஐந்தில் முதலாமிடத்தினை ஜெனட் ஸ்ரீபன் றெமியூசன் (புனித டொண் பொஸ்கோ வித்தியாலயம்) இரண்டாமிடத்தினை பிளட்டன் மேரி யூலியற் (சென் ஜேம்ஸ் மகளிர் பாடசாலை) மூன்றாமிடத்தினை கொன்சன்ரைன் தனிஸ் அன்ரூஸ் (புனித பற்றிக்ஸ் கல்லூரி) ஆகியோரும் பெற்றுக் கொண்டனர்.

மகாத்மா விளையாட்டுக்கழக போட்டி முடிவுகள்

(சண்டிலிப்பாய்)

சாவல்கட்டு மகாத்மா விளையாட்டுக் கழகமும் சனசமூக நிலையமும் இணைந்து நடாத்தும் வருடாந்த மாபெரும் விளையாட்டு விழாவில் ஆழ்கடல் விளையாட்டு விழா முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

ஆழ்கடல் நீச்சல் போட்டியில், பா.ராசு, பூ.கமல், ந.நதிபன், ம.சிவசுதன், கு.ஆனந்த், ந.விஜயகாந்த், செ.ராயு, செ.செல்வா, சி.பார்த்தீபன், ம.பவிதன், ம.வேல், வ.வஜித், கு.ரஜீவன், வெ.றிசன், ர.ரதிபன் ஆகிய வீரர்களும் கடியூன்றிப் படகு செலுத்துதல் போட்டியில், இ.ராசு, நி.உதயரூசி, ந.விஜயகாந்த், த.விஜயகுமார், த.புவனேஸ்வரன், இ.ரஜீவ்காந்த் ஆகியோரும் வெற்றியீட்டியுள்ளனர்.

உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு பாடசாலை மட்டப் போட்டிகள்

(உடுவில்)

பாடசாலை மாணவர்களிடையே உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு போட்டிகள் நடத்தப்பட வுள்ளன.

மாணவர்களின் திறமைகளை வெளிக்கொண்டுவரும் முகமாகவும் அஞ்சல் தொடர்பில் விழிப் புணர்வினை ஏற்படுத்துவதற்குமாக கட்டுரை மற்றும் சித்திரப் போட்டிகள் என்பன நடைபெற வுள்ளன.

கட்டுரைப் போட்டி, பிரிவு ஒன்றுக்கு "பிள்ளைகள் எமக்கு அஞ்சல்" என்ற தலைப்பிலும், பிரிவு இரண்டிற்கு "நான் அஞ்சல் அதிபரானால்" என்ற தலைப்பிலும் பிரிவு மூன்றிற்கு "துரிதமான முன்னேற்றமடையும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தினால் இலங்கையில் ஏற்படப்போகும் மாற்றம்" என்ற தலைப்பிலும் இடம்பெற வுள்ளது.

சித்திரப் போட்டிகள் பிரிவு ஒன்றுக்கு எனது கனவு அஞ்சல் அலுவலகம்" என்ற தலைப்பிலும் பிரிவு இரண்டிற்கு "தேசிய ஒற்றுமைக்கு அஞ்சல் வழங்கும் ஒத்துழைப்பு" என்ற தலைப்பிலும் பிரிவு மூன்றுக்கு "இலங்கையில் அபிவிருத்திக்கு அஞ்சலின் பங்களிப்பு" என்ற தலைப்பிலும் போட்டிகள் நடைபெறவுள்ளன.

கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை நிர்வாக சபை

(சண்டிலிப்பாய்)

கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையின் 2012, 2013ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டுள்ளது.

அதில் அங்கம் வகிக்கும் உறுப் பினர்களின் விபரங்கள் வருமாறு:

தலைவர் - பாடசாலையின் புதிய அதிபர், செயலாளர் - ச.ஜனார்த் தனன், உப தலைவர் - கே.ரஜீவ குமார், பொருளாளர் - திருமதி தேவதாஸ் ஆகியோருடன் நிர்வாக சபை உறுப்பினர்களாக, திருமதி. எஸ். வரதராசா, திருமதி.ம.விக்னேஸ்வரன், திரு.எஸ்.சிவராசா, தி.ஏ.சத்தியமூர்த்தி, திருமதி.எஸ்.பிரதாபன், திரு.வி.இரத்தினகுமார், எஸ். சிவகாந்தி, எஸ்.மதிவதனா, எஸ். ஜெயக்குமார், எம்.சரிதா, எம். ஜெயகரன், எஸ்.முருகானந்தன், எஸ்.அரிகனகணபதி, எஸ்.சசிகலா, வி.விக்னேஸ்வரன், எஸ்.பிர தீபன், எஸ். திலகேசன், எஸ். அகிலன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

வேலணையில் ஆலயத் திருப்பணி வேலைகள்

(உடுவில்)

வேலணை தெற்கு ஸ்ரீ ஹரி புத்திர ஐயனார் ஆலயத்தில் பல திருப்பணி வேலைகள் இடம் பெற்று வருகின்றன. இவ் ஆலயத்தில் இராஜகோபுரம் அமைக்கும் பணி மற்றும் தேர்த் தரிப்பிடம் அமைக்கும் பணியும் நடைபெற்று வருகின்றன. இத்திருப் பணி வேலைகளில் ஆலயப் பரிபாலன சபையினர் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

520 ஹெரோயின் பொதிகளுடன் தெஹிவளையில் பெண் கைது

ஹெரோயின் போதைப்பொருள் அடங்கிய 520 பக்கற்றுகளுடன் பெண்ணொருவர் தெஹிவளையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

அண்மைக்காலத்தில் ஒரே தடவையில் பெருந்தொகையான போதைப்பொருள் கண்டுபிடிக் கப்பட்ட சம்பவங்களில் இதுவும் ஒன்றாகும் என பொலிஸார் தெரிவித்தனர்.

இப்போதைப்பொருளின் எடை இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை. எனினும், இது சுமார் 300 கிராம் எடையைக் கொண்டிருக்கலாம் எனவும் இதன் பெறுமதி சுமார் 15 லட்சம் ரூபாவாக இருக்கலாம் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

34 வயதான மேற்படி பெண், இம்முற்று கையின்போது ஹெரோயின் பக்கற்றுகளை பொதிசெய்து கொண்டிருந்ததாக தெரிவிக கப்படுகிறது.

இவர் வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி, இரத்மலானை, தெஹிவளை, கொஹுவளை பிரதேசங்களில் ஹெரோயின் போதைப் பொருள் விநியோகித்தவர் என பொலிஸார் கூறுகின்றனர்.

இதே வேளை 27 பெக்கெட் ஹெரோயின் போதைப்பொருளு டன் கைதான இலங்கையைச் சேர்ந்த விமானப் பணிப்பெண் ணொருவரை அடுத்த மாதம் வரை விளக்கமறியலில் வைக்கு மாறு கொழும்பு மேலதிக நீதவான் நஷாந்த பீரிஸ் உத்தர விட்டார்.

அத்துடன், அப்பணிப்பெண் ணுக்கு எதிரான வழக்கின் பொலிஸ் அறிக்கையை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு வெள்ள வத்தை பொலிஸாருக்கு நீதவான் உத்தர விட்டார்.

அத்துடன், குறித்த பெண்ணை பிணையில் விடுதலை செய்யுமாறு அவர் சார்பில் மன்றில் ஆஜரான சட்டத்தரணி கோரிக்கை விடுத்த போதிலும் அதற்கான அனுமதி யை வழங்க தனக்கு அதிகாரமில்லை என நீதவான் குறிப்பிட்டார்.

சந்தேகநபராக குறித்த விமானப் பணிப் பெண்ணையும் சம்பவத்துடன் தொடர் புடையதான மற்றொரு நபரையும் எதிர் வரும் ஒக்டோபர் மாதம் 9ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீத வான் உத்தரவிட்டார்.

யாழ்.குடாநாட்டுக்கு தேசிய மின்சாரம்

தேசிய மின்சாரத்தை யாழ்.குடாநாட் டிற்கு வழங்கும் திட்டம் கிளிநொச்சியில் ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷவினால் ஆரம் பித்து வைக் கப்பட்டது.

ஜப்பான் நாட்டின் கடன் உத வியுடன் இத்திட்டம் செயற்படுத் தப்பட்டுள்ளது.

இதன்பிரகாரம் 3200 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட் டுள்ள இத்திட்டத்தின் மூலம் யாழ்.குடாநாட்டுக்கு 132 கிலோ வோட் தேசிய மின்சாரம் விநியோ கிக்கப்படுகின்றது.

இம்மின்சாரம் 238 மின்கம்பங் கள் மூலம் வவுனியாவில் இருந்து கிளிநொச்சிக்குப் பரிமாற்றம் செய் யப்பட்டே விநியோகிக்கப் படுகின்றது.

ஆரம்ப வைபவத்தில் ஜனாதிபதியுடன் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ பாரம்பரிய கைத்தொழில் கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபி விருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ சந்திரசிறி, ஈ.பி.டி.பியின் பாராளுமன்ற உறுப்பினரும், பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலை வருமான முருகேசு சந் திரகுமார், பாராளு மன்ற உறுப் பினர் சில்வேஸ்திரி அலென் ரின் (உதயன்), பாராளுமன்ற உறுப்பி னர் நாமல் ராஜபக்ச ஆகியோரும் மின்சார மற்றும் எரிசக்தி அமைச் ளசின் அதிகாரி களும், வடக்கு மாகாண அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

மொனராகலையில் சுழல் காற்று 52 வீடுகள் சேதம்

மொனராகலை நகர் வழியாக வீசிய சுழல் காற்று காரணமாக 52 வீடுகள் சேத மடைந்துள்ளன.

நேற்றுமுன்தினம் பிற்பகல் 2.30 மணியள வில் இந்த சுழல் காற்று வீசியதாக அனர்த்த முகாமைத் துவ மத்திய நிலை யத்தின் மொன ராகலை மாவட்ட பிரதிப் பணிப் பாளர் தெரிவித்தார். இந்த சுழல் காற்றினால் எவருக்கும் காயங்களோ உயிர்சேதமோ ஏற்படவில்லை.

முஸ்லிம் காங்கிரஸ் பிரமுகர்களின் வீடுகள் மீது குண்டுத் தாக்குதல்!

கல்முனையில் ஸ்ரீலங்கா முஸ் லிம் காங்கிரஸின் பிரமுகர்கள் இருவரின் வீடுகளில் நேற்று அதி காலை இனந்தெரியாத குழுவின ரால் குண்டு தாக்குதல்கள் மேற் கொள்ளப்பட்டுள்ளதாக பொலி ஸார் தெரிவித்தனர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிர ஸின் பிரதி தலைவரும் கலைக் கப்பட்ட வட கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினரு மான ஏ.எல்.அப்துல் மஜீட்டின் சாய்ந்தமருது இல்லத்திற்கும், கல்முனை மாநகர சபை உறுப் பினரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங் கிரஸின் சாய்ந்தமருது அமைப்பா ளருமான எம்.ஐ.எம்.பிர்தௌஸின் சாய்ந்தமருது இல்லத்திற்குமே இவ்வாறு குண்டு தாக்குதல்கள் மேற் கொள் ளப் பட் டுள் ளதாக கல்முனை பொலிஸார் தெரிவித் தனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேல திக விசாரணைகளை கல்முனை பொலிஸார் மேற்கொண்டு வரு கின்றனர்.





இலங்கை தம்பதியை தாக்கிய இலங்கையர் மீது துபாயில் வழக்கு

படுக்கை அறைக் கதவை உடைத்துக்கொண்டு உள்ளே வந்து இலங்கை தம்பதியை தாக்கியதாகக் கூறப்படும் இலங் கையர் ஒருவர் மீது டுபாய் குற்ற வியல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

10 நாட்களுக்கு முன்னரே டுபாய் வந்த இலங்கையரான சந தேக நபர், தாக்கப்பட்ட தம்பதி யின் வீட்டின் ஒருபகுதியில் வசிப பதற்கு தன்னை அனுமதிக்குமாறு கேட்டதாக பாதிக்கப்பட்ட இலங் கைப் பெண் கூறினார்.

ஜூன் மாதம் 30ஆம் திகதி 2011ஆம் ஆண்டு சந்தேக நபர் வேறு இருவருடன் வந்து தனது கணவருடன் சேர்ந்து மது அருந் தியதாகவும் அவர் கூறினார்.

காலை 5.30 மணிக்கு கதவை உடைத்துக்கொண்டு படுக்கை அறைக்குள் நுழைந்த சந்தேக நபர், தனது கணவனின் தலை யிலும் உடம்பிலும் தாக்கியதாக வும் தடுக்கப் போன தன்னை கத் தியால் குத்துவதற்கு துரத்திக் கொண்டு வந்ததாகவும் அந்தப் பெண் தெரிவித்துள்ளார்.

தன்னை வீதிவரை துரத்திவந்த சந்தேக நபரை 4 அரேபியர்கள் மடக்கிப்பிடித்து பொலிஸில் ஒப் படைத்ததாகவும் அவர் கூறினார்.

சந்தேக நபர்குற்றச்சாட்டுக்கள ளஒப்புக்கொண்டுள்ளார்.

தாக்கப் பட்டவர் தான் சந்தேக நபருடன் சேர்ந்து மது அருந்திய குற்றச் சாட்டை ஒப்புக்கொண்டுள்ளார்.

இதேவேளை, அரபு நாடுகளில் தொழில் புரியச் செல்லும் இலங் கையர்கள் முறையற்ற விதத்தில் நடந்துகொள்ளும்போது அவர்கள் அந்நாட்டு சட்டதிட்டத்தின்படி கடு மையாக தண்டிக்கப்படுவது குறிப் பிடத்தக்கது

ஐ.நா.மனித உரிமைப் பேரவையில் நாடுகளின் நிலவரங்கள் ஆராய்வு

ஜெனீவாவில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பேரவையின் 21 ஆவது கூட்டத் தொடரில் தொடர்ந்து உறுப்பு நாடுகள் மற்றும் உறுப்புரிமையற்ற நாடுகளின் மனித உரிமை நிலைவரங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டுவரு கின்றது.

குறிப்பாக, சிரியாவில் இடம் பெற்று வரும் மோதல்கள் வன் முறைகள் குறித்து விரிவாக உறுப்பு நாடுகளினால் ஆராயப் பட்டு வருகின்றது.

இந்த விவகாரம் தொடர்பில் ஐ.நா. வின் விசேட அறிக்கையாளர்களும் அறிக்கை களை சமர்ப் பித்து வருகின்றனர்.

மேலும் ஆயுத நடவடிக்கைகள் காரண மாகப் பாதிக்கப்படும் சிறு வர்கள் குறித்து பேரவையில் விரி வாக ஆராயப்பட்டுள்ளது.

இந்த அமர்வில் கருத்து வெளியிட்டி ருந்த இலங்கையின் பிரதிநிதி ஆயுத மோதல்களானது சிறுவர்க ளின் உரிமைகளை மட்டுமல்லாது சமூக மற்றும் பொருளாதார உரிமைகளையும் பாதிக்கின் றது என்று குறிப்பிட்டுள்ளார்.

ஐ.நா. மனித உரிமைப் பேர வையின் 21 ஆவது அமர்வில் இலங்கையிலிருந்து உயர்மட்ட அமைச் சர்கள் குழு கலந் துகொள்ளவில்லை. மாறாக அதி காரிகள் மட்டக் குழுவே கூட்டத் தொடரில் கலந்து கொண்டுள்ளது.

இலங்கையின் சார்பில் முதல்நாள் அமர் வில் இலங்கையின் ஜெனிவாவுக் கான தூதுவர் ரவிநாத் ஆரிய சிங்க உரை யாற்றியிருந்தார்.

அவர் தனது உரையில் யுத்தத் தின் பின்னரான நாட்டில் பாரிய அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் முன்னெடுக் கப்பட்டு வருகின்றன என்று கூறியிருந்தார்.

மேலும் தேசிய நல்லிணக்கம் தொடர்பில் உள் நாட்டு ரீதியில் முன்னெடுக்கப்ப டுகின்ற விடயங் கள் குறித்து ஐ.நா. மனித உரிமைப் பேரவை தெளிவுபெற ஐ.நா. அதிகாரிகளின் இலங்கை விஜயம் உதவியாக அமையும் என்று எதிர்பார்க்க ப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இதே வேளை கடந்த 10 ஆம் திகதி ஆரம்பமான ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் கூட்டத்தொடர் எதிர்வரும் 28 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

தமிழ்நாதம்
Thamil Naatham
செப்ரெம்பர் மாதம் 27ஆம் திகதி வியாழக்கிழமை

அந்தரித்து மெனிக்பாம் வந்தவர்கள் இனியும் அநாதரவான நிலையிலா?

இலங்கையின் முப்பது வருடகால யுத்தத்தின் இறுதிக் கட்டம் 2009ஆம் ஆண்டு மே மாதம் 19ஆம் திகதி முள்ளி வாய்க்கால் சேற்றிற்குள் முடிவுக்கு வந்தது. 2006ஆம் ஆண்டு கிழக்கு மாகாணத்தில் மாவிலாறு அணைக்கட்டை புலிகள் மூடியதை அடுத்தே இந்த இறுதிக் கட்ட யுத்தத்தின் முன்னோடித் தாக்குதல்கள் ஆரம்பமாகின. கிழக்கில் வெடித்த யுத்தம் படிப்படியாக நகர்ந்து வடக்கில் மையம் கொண்டது. வடக்கின் வன்னிக்குள் நடந்த யுத்தம் இறுதிக் கட்ட மோதலாக உருவெடுத்தது.

அரசாங்க துருப்புகளுக்கும், ஆயுதமேந்திய தமிழ்க் குழுவுக்கு மிடையில்தான் யுத்தம் கர்ணகடூரமாக இடம்பெற்றது. மண்ணைப் பிடிப்பதற்காகவும், பிடித்த நிலத்தை பாதுகாப்பதற்காகவுமே இரு தரப்பும் மோசமான மோதலில் ஈடுபட்டன. இந்த மோதலில் கொல்லப்பட்ட அல்லது அங்கவீனமடைந்த அல்லது ஆபத்துக்களைச் சந்தித்த இரு ஆயுத தரப்புகளையும் விட, ஆகக்கூடுதலான அழிவுகளை ஆயுதம் ஏந்தாத அப்பாவி மக்களே சந்தித்தார்கள். மக்கள் வாழும் குறுகிய நிலப்பரப்புக்குள் யுத்தம் இழுத்துச் செல்லப்பட்டதால், அப்பாவி மக்களே அதிகம் அவலங்களைச் சந்தித்தார்கள். சிங்களம் மட்டும் பேசக்கூடிய இராணுவத்தினர் ஒருபுறம். தமிழில் மட்டுமே உரையாடக்கூடிய தமிழ் ஆயுதக்குழு மறுபுறம்.தமிழ் பேசும் அப்பாவி மக்களுக்குள் பதுங்கி நின்றுகொண்டு படையினர் மீது தாக்குதல் நடாத்தும் தந்திரோபாயம் தாராளமாகவே கடைப்பிடிக்கப் பட்டதால், பதில் தாக்குதலுக்குப் பலியான அப்பாவித் தமிழர்களின் எண்ணிக்கை அதிகம். இந்த நிலையில்தான் அகதிகளாக யுத்த களத்தில் இருந்து வெளியேறிய மக்களை தங்க வைப்பதற்கு மெனிக்பாம் நலன்புரி நிலையம் உருவாக்கப்பட்டது. பெயர்தான் நலன்புரி நிலையமே ஒழிய ஆரம்பகாலங்களில் மக்கள் சந்தித்த கஷ்டங்கள் அதிகம்.

அந்த அப்பாவித் தமிழ் மக்களில் பலர் உயிரை இழந்து, உடைமைகளைப் பறிகொடுத்து, அவலங்களை மட்டுமே சுமந்து கொண்டு தான் நலன்புரி நிலையமென்று பெயர் சூட்டப்பட்ட இந்த முகாமிற்கு வந்தார்கள். அதற்காக அகதிகளாகத் தஞ்சம் தேடி வந்த இந்த மக்களுக்கு ஒரு நலன்புரி உதவியும் கிட்டவில்லையே என்று சொல்வதற்கில்லை. ஏற்கனவே பத்துக்கு மேற்பட்ட தடவைகள் இடம்பெயர்ந்த மக்களும் இருக்கிறார்கள். அவலங்களின் உச்சக் கட்டமாகவே இறுதி யுத்தம் இடம்பெற்றது என்பதை எவரும் மறுக்க முடியாது. சுமார் இரண்டு இலட்சத்து எண்பதாயிரம் மக்கள் இந்த மெனிக்பாம் நலன்புரி நிலையத்தில் அல்லது அகதி முகாமில் தஞ்சம் அடைந்தார்கள்.

சில குறைபாடுகள் இருந்தாலும் சுமார் இரண்டு இலட்சத்து எண்பதாயிரம் மக்களை எழுபது ஏக்கர் நிலப்பரப்பிற்குள் வைத்துப் பாதுகாத்து அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வதென்பது ஒன்றும் சாதாரண விடயமல்ல. யுத்தம் ஏற்கனவே சிங்கள, தமிழ் மக்களின் உணர்வுகளை சீண்டிவிட்டு இனமுறுகலை ஏற்படுத்திய ஒரு நிலையில் தான், யுத்தமும் முடிவுக்கு வந்தது. வட பகுதித் தமிழ் மக்களோடு தென் பகுதிச் சிங்கள மக்கள் உறவாட முடியாத நிலைமை நிலவியது. தென்பகுதிச் சிங்கள மக்கள் வடபகுதித் தமிழ் மக்களோடு சகஜமாக பழக முடியாத ஒரு நிலைமையும் நிலவியது. நாடு பிரிவினைக்காக போராடியவர்களால் நாட்டைப் பிரிக்க முடியாவிட்டாலும் சிங்கள தமிழ் மக்களின் மனிதாபிமான உணர்வுகளைப் பிரித்து வைப்பதில் வெற்றி கண்டார்கள். இதற்கு மாற்றுத் தரப்பினர்களும் பங்களித்தார்கள் என்பதும் மறுக்க முடியாத ஒன்று.

மெனிக்பாம் முகாம் மூடப்பட்டமை குறித்து இலங்கைக்கான ஐ.நாவின் மனிதாபிமான இணைப்பாளர் எச்சரிக்கையுடன் கூடிய வரவேற்பைத் தெரிவித்தார். "மெனிக்பாம் மூடப்பட்டமை வரவேற்புக்குரியது. இருந்தும் இடம்பெயர்ந்த மக்களின் பிரச்சினைகள், மீள்குடியேற்றம் ஆகியவற்றைப் பொறுத்தவரை இன்னமும் பிரச்சினைகள் இருக்கின்றன" என்று அவர் எச்சரிக்கை செய்துள்ளார். இந்த எச்சரிக்கையும், வரவேற்பும் நியாயமானது மட்டுமல்ல, வரவேற்க கூடியதுமாகும். மெனிக்பாம் மூடப்பட்ட பின்னர் அங்கிருந்து அழைத்துச் செல்லப்பட்ட சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் அநாதரவான நிலையில் கைவிடப்பட்டுள்ளனரென்று சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இந்தச் செய்திகளை வெளியிட்ட குறிப்பிட்ட சில ஊடகங்களுக்குத் தேவையான சில நிகழ்ச்சி நிரல்கள் இருக்கலாம், இல்லாமலும் இருக்கலாம் ஆனாலும் ஒன்றை அரசாங்கம் உணர்ந்து கொள்ள வேண்டும். அந்தரித்து அகதிகளாக வந்த இந்தத் தமிழ் மக்களை மீண்டும் அந்தரநிலையில் அரச அதிகாரிகள் விட்டாலென்ன, அல்லது அரசாங்கந்தான் விட்டாலென்ன, குற்றச்சாட்டு சுமத்தப்படப்போவது அரசாங்கத்தின் மீதுதான் என்பதை பொறுப்புள்ளவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். சர்வதேசத்திற்குப் படம் காட்டுவதற்காக மெனிக்பாம் முகாம் மூடப்பட்டதென்றால் அதைப் போன்ற பெரிய தவறு வேறெதுவும் இருக்கமுடியாது.

தேசிய ஐக்கியம், ஐக்கியப்பட்ட நாடு, இன சௌஜன்யம், சமூகங்களுக்கிடையே நல்லிணக்கம் ஆகியவை ஏற்படுத்தப்பட வேண்டுமென்றால் அதற்கான பொறுப்பு சிங்கள, தமிழ் அரசியல் கட்சிகளிடத்தும் சிவில் சமூகத்திடத்திலும் இருக்க வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலான முக்கிய பொறுப்பு அரசாங்கத்திடமே உண்டு என்பதை ஆளுந்தரப்பினர் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
ஆசிரியர் பீட தொலைபேசி- 021-2219567 / பக்ஸ் 021-2219505,
விளம்பரம்/விநியோகம் : 021-2219506
e-mail: tnaatham@yahoo.com

இருவேறு மனிதர்கள் இருவேறு உலகம்



உ.வே. சுவாமிநாத ஐயர்

– நாகரத்தினம் கிருஷ்ணா

"தம்மின் தம்மக்கள் அறிவுடமையை" மருந்தாளுனர் பையன் மருத்துவர் தாலுக்கா அலுவலக ஊழியர் மகன் மாவட்ட ஆட்சியர் எனப் பொருள்கொள்ளாமல் இரு வேறு காலத்தைச்சேர்ந்த ஒரு சமூகத்தின் சந்ததியினரை ஒப்பீடு செய்து பெருமிதம் கொள்ளுதல் என விளங்கிக்கொள்ளவேண்டும்.

தம்மின் தம்மக்கள் அறிவுடையவர்களாக இருக்கவேண்டும் என்பதற்காகவே முன்னோர்கள் நமக்களித்த பாரம்பரிய ஞானத்தை பட்டைத்தீட்டி, அடுத்த தலைமுறையினருக்கு கையளிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். தகவலை அனுப்புவது அல்லது பரப்புதல் என்பது உடனுக்குடன் நிகழ்வது. தகவலைக் குறைக்கவோ கூட்டவோ செய்யாமற் பெறுநரிடம் சேர்பிக்கவேண்டும். பெறுநர் சமகாலத்தவராக இருப்பார். மாறாக பாரம்பரிய அறிவை அடுத்தசந்ததியினருக்குக் கொண்டுபோக பல ஆண்டுகள் தேவைப்படுகின்றன. அவ்வாறே, தகவல் பரப்புகை அனுப்புநர் பெறுநர் என்ற இரண்டு மனிதர்களின் பங்களிப்பினால் நடைபெறுகிறது. ஆனால் பாரம்பர்ய ஞானத்தைக் கையளிக்க மூவர் தேவைப்படுகின்றனர். முன்னோர்கள் விட்டுச்சென்றதைச் செழுமைப்படுத்தி பின்வரும் சந்ததியினருக்கு அளிக்கவேண்டுமென்பது அதன் வாய்பாடு. ஒகுஸ்த் கோந்த்" (யுரபரளவந ஊழஅிவந) என்ற பிரெஞ்சு தத்துவவாதி "இறந்தவர்கள் உயிருள்ளவர்களை ஆள்கிறார்கள்" என்கிறார். நம்முடைய மரபுகளும், சம்பிரதாயங்களும், அரசியல் சட்டங்களும் பிறவும் இன்று நம்மிடையே இல்லாத, மனிதர்களால் எழுதப்பட்டவை. நேற்றைய தலைமுறைக்கு, அன்றையக் காலக்கட்டத்தில் எது உகந்ததோ அதை வாய் மொழியாகவும், எழுதியும் வைத்தனர். மரபு, வழக்கு, பாரம்பரியப் பெருமைகள், மூத்தோர்வாக்கு என்ற பெயரில் நம்மோடு நமது வாழ்க்கையோடு கலந்தவை அவை. மூதாதையர் சொத்து எனச்சொல்லப்படுவது ஒரு சமூகத்தைபொருத்த வரையில் மேற்கண்டவைகள் தான். நமது கல்வி நிறுவனங்கள், ஆய்வுக்கூடங்கள், தொல்பொருள் இலாக்காக்கள், அருங்காட்சியகங்கள், இலக்கியங்கள், வரலாறுகள் ஆகியவை முன்னோர்கள் கையளித்த சொத்துகளுக்குண்டான ஆவணங்கள்.

மனிதர் வரலாற்றில் தொடக்கக்காலத்தில் "பாரம்பர்ய ஞானத்தை" அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்லும் தார்மீகப்பொறுப்பு ஒரு பக்கம் குருக்களிடமும், இன்னொரு பக்கம் ஆட்சி, அதிகாரம் எனக் கோலோச்சியவர்களிடமும் இருந்தது: மன்னர்கள், குறுநில மன்னர்கள், ஜமீன்கள், நாட்டாமைகள், குடும்பத்தலைவர்கள் அதனைச் செய்தார்கள். பின்னர் அப்பொறுப்பை மதங்களும் அவற்றின் பிரதிநிதிகளும் எடுத்துக்கொண்டனர். அக்காலங்களில் மரபுகளும் நெறிகளும் கடவுளின்பேரால் திருத்தி எழுதப்பட்டன. மேற்கத்திய நாடுகளில் தொழிற்புரட்சியும் அறிவியல் புரட்சியும் உள்ளேபுகுந்த பின் சமூகத்தின் மரபுகளையும் நெறிகளையும் சீர்தூக்கி எது சரி எது தப்பு என சொல்வதற்குண்டான அதிகாரத்தை ஜனநாயகத்தின் பேரால் மக்கள் எடுத்துக் கொண்டனர்..

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக நிர்வாணமாக காட்டில் தனது தேவைபொருட்டு ஒற்றையாக அலைந்த நேற்றைய மனிதனின் இன்றைய பரிணாம வளர்ச்சியில் முன்னோர் கையளித்த அறிவுக்கும் அனுபவத்திற்கும் பெரும் பங்குண்டு. இத் தொடரோட்டத்தை நடத்துபவர்கள் யார்? கல்வியாளர்கள், அறிவாளிகளென்று மொக்கையாக பதில் சொல்லலாமா? வெறும் கல்விமட்டுமே இந்த மாயத்தை நிகழ்த்திடத்தான் முடியுமா? படிப்பு, படிப்பின் முடிவில் ஒரு பட்டம், பின்னர் வேலை என்றக் கல்வி சூத்திரத்தில் நெய்யப்பட்ட இவ்வுலகில் ஒட்டுமொத்த மனிதகுலத்திற்காகவும் உழைப்பவர்கள் மிகவும் சொற்பம். இருந்தும் உ.வே சா. போல இரண்டொருவர் "பாரம்பர்ய ஞானத்தை" அடுத்த தலைமுறைக்கு கையளிக்க பிடிவாதத்துடன் வண்டிபூட்டிக்கொண்டு அலையவே செய்கிறார்கள்.

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)

தீவைக்கப்பட்ட தேவாலயத்தை சீரமைக்க மூன்று கோடி நிதியுதவி

நபிகள் நாயகத்தை இழிவுபடுத்தும் அமெரிக்க படத்துக்கு எதிராக பாகிஸ்தானில் கடந்த வாரம் தொடர் போராட்டங்கள் நடந்தன.

கைபர் பக்துன்வா மாநிலத்தில் பெஷாவர் நகரத்தில் நடந்த போராட்டத்தின்போது அங்குள்ள பழமையான கிறிஸ்தவ தேவாலயத்துக்கு தீ வைக்கப்பட்டது. இதில் தேவாலயம் எரிந்து நாசமானது.

இந்நிலையில் தேவாலயத்தை சீரமைக்க மூன்று கோடி ரூபா நிதி வழங்கப்படும். தவறு செய்தவர்கள் சட்டப்படி தண்டிக்கப்படுவார்கள் என மாநில முதல்வர் அமீர் ஹைதர்கான் தெரிவித்துள்ளார்.

இலங்கையிலிருந்து முதலாவது ஹஜ் குழு புறப்பட்டது

இந்த வருடத்திற்கான புனித ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்காக முதலாவது குழுவினர் நேற்று புறப்பட்டு சென்றனர். இக் குழுவில் 268 பேர் அடங்கியிருந்தனர். இவர்களை வழியனுப்பும் விசேட நிகழ்வு அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி தலைமையில் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் நடைபெற்றது. இலங்கைக்கான சவுதி அரேபிய தூதரக அதிகாரிகள் மற்றும் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள அதிகாரிகள் ஊழியர்கள் கலந்துகொண்டனர்.

செம்பியன்பற்றுப் பாடசாலையில்திருட்டுப்போன மின்கலம் மீட்பு., திருடர்களும் கைது

வல்வெட்டித்துறை

வடமராட்சி, செம்பியன்பற்று அரச தமிழ்க் கலவன் பாடசாலைக்கு நலன்விரும்பிகள் அன்பளிப்பாக வழங்கிய சூரியமின் கலம் கடந்த வருடம் டிசம்பர் மாதம் காணாமல் போய்விட்டது.

கடந்த ஒன்பது மாதங்களுக்கு மேலாக திருட்டுப்போன இந்த மின்கலத்தையும், திருடியவர்களையும் கண்டுபிடிப்பதற்குப் பொலிசார் மேற்கொண்ட பகீரதப் பிரயத்தனம் பலனளிக்கவில்லை. நேற்றுமுன்தினம் இரவு மாவடி என்ற இடத்தில் இந்த மின்கலத்தை மருதங்கேணிப் பொலிஸார் மீட்டனர்.

அத்துடன் மின்கலத்தைத் திருடிய நபர்களையும் அவர்கள் கைது செய்தனர்.

செம்பியன்பற்றுப் பிரதேசத்தில் மீள்குடியேற்றம் இடம்பெற்றபோதும், மின்சார வசதிகள் போதியளவு இல்லாத காரணத்தால் 75ஆயிரம் ரூபா பெறுமதியான இந்த மின்கலத்தை நலன்விரும்பிகள் மேற்படி பாடசாலைக்கு வழங்கியிருந்தனர்.

மருதங்கேணி பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்தே திருட்டுப்போன மின்கலம் மீட்கப்பட்டதோடு திருடர்களும் கைது செய்யப்பட்டனர்.

திருடர்களும், மீட்கப்பட்ட மின்கலமும் மருதங்கேணி பொலிஸாரினால் பருத்தித்துறைப் பொலிசாரிடம் கையளிக்கப்பட்ட னர். மேலதிக விசாரணையில் பருத்தித்துறைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இரத்த அழுத்தம், நாடி துடிப்பு அளக்கும் டாக்டர் ரோபோ!!

இங்கிலாந்து ஆஸ்பத்திரியில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள ரோபோ டாக்டர், நோயாளிகள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. டாக்டரிடம் போகிறோம்.. என்ன செய்கிறார்? ஸ்டெதஸ்கோப் வைத்து பார்ப்பார். இரத்த அழுத்தம் பரிசோதிப்பார். நமது கண்ணை திறந்து பார்ப்பார். வாய்க்குள் டார்ச் அடித்து சோதிப்பார்.

இந்த வேலைகளை எல்லாம் இங்கிலாந்தின் நியூரி நகரில் உள்ள டெய்சி ஹில் ஆஸ்பத்திரியில் ஒரு ரோபோ செய்கிறது.

இந்த ரோபோ டாக்டரின் பெயர் "ஆர்பி7". பஸ், ரயில் நிலையங்களில் இருக்கும் எடை பார்க்கும் மெஷின் சைஸில் இருக்கிறது.

நோயாளியின் இரத்த அழுத்தம், நாடி துடிப்பு, இதய துடிப்பு ஆகியவற்றை அளவிடும் கருவிகள் இதில் இருக்கின்றன. ரோபோ டாக்டரை ஆஸ்பத்திரியில் இருக்கும் ஊழியர்கள் இயக்கலாம். அல்லது, எங்கோ வீட்டிலோ, வெளியூரிலோ இருக்கும் "பெரிய" டாக்டர்கூட ஜாய் ஸ்டிக் உதவியுடன் இயக்க முடியும்.

அவர்கள் உத்தரவிட்டால், டாக்டர் ரோபோ மெல்ல நகர்ந்து நோயாளியின் படுக்கைக்கு அருகில் வருகிறது. பின்னர், அவர்களது கையை நீட்டச் சொல்லி நாடி பார்க்கிறது.

அடுத்து, ஸ்டெதஸ்கோப் உதவியுடன் லப்டப் துடிப்பை பார்க்கிறது.

இரத்த அழுத்தத்தை சோதிக் கிறது. இவை அனைத்தையும் ரோபோவில் இருக் கும் வெப் கமரா உதவியுடன் டாக்டர் பார்ப்பார்.

ரோபோவின் மேல் பகுதியில் இருக்கும் மானிட்டரில் டாக்டரின் முகம் தெரியும்.

தேவைப்பட்டால், நோயா ளியின் கண்ணை அகலமாக விரிக்கச் செய்து சிவந்திருக்கிறதா, வேறு மாற்றங்கள் தெரிகிறதா என்றும் தனது நவீன கமரா உதவியுடன் ரோபோ "கூர்ந்து" கவனிக்கும். இதையும் தன் இருப்பிடத் தில் இருந்தபடியே டாக்டர் பார்வையிடுவார்.

அவசர சிகிச்சை தேவைப்படும் நோயாளிகளுக்கு உடனடியாக தரவேண்டிய முதலுதவிகள், அவசர கால மருந்துகள் ஆகியவற்றை டாக்டர் அங்கிருந்தபடியே வழங்குவார். "ஆர்பி7 ரோபோ டாக்டரின் விலை ரூ.1.75 கோடி.

கூடங்குளம் அணுமின் நிலையம்: இலங்கையருக்குப் பாதிப்பில்லை

இந்தியாவின் தமிழகத்திலுள்ள கூடாங்குளம் அணுமின் நிலையமானது சுற்றாடலுக்கோ அல்லது அண்டை நாடான இலங்கைக்கோ பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் அமைக்கப்படவில்லையென இந்தியா அறிவித்துள்ளது.

சுற்றாடல், பொது மக்கள், அணு மின்நிலையப் பணியாளர்கள் மற்றும் அண்மைநாடான இலங்கைக்கு எவ்விதமான பாதிப்பும் ஏற்படாத வகையிலேயே இதன் செயற்பாடுகள் காணப்படும்.

அனைத்துத் தரப்பினரின் பாதுகாப்புக்கே முன்னுரிமை அளிக்கப்பட்டிருப்பதாக கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளது.

கூடாங்குளம் அணுமின்நிலைய செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் பரீட்சார்த்தப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது சுற்றாடலில் கதிர்வீச்சின் செறிவு உள்ளிட்ட அனைத்து பரிசீலிக்கப்பட்டன.

அணு சக்தி கட்டுப்பாட்டு சபை இதனை அவதானித்து பாதுகாப்பை உறுதிப்படுத்தியுள்ளது என்றும் உயர்ஸ்தானிகராலயம் வெளியிட்டிருக்கும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தியாவில் அமைக்கப்பட்டிருக்கும் அனைத்து அணு மின்உற்பத்தி நிலையங்களும் அணுக் கதிர்கள் விரயமாவதைக் கட்டுப்படுத்தும் வகையில், பாதுகாப்பான முறைகளைக் கொண்டே அமைக்கப் பட்டுள்ளன.

அணு மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து கழிவுகளை அகற்றுவது உள்ளிட்ட அனைத்துப் பணிகளும் சர்வதேச தரத்திலேயே மேற்கொள்ளப் படுவதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதே நேரம், இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான அணு சக்தி ஒத்துழைப்பு, கதிர்வீச்சுத் தாக்கம் தொடர்பான விடயங்கள் குறித்துக் கலந்துரையாடுவதற்கு இலங்கை அதிகாரிகள் குழுவொன்று எதிர்வரும் மாதங்களில் இந்தியா செல்லவுள்ளது.

இக் குழு கதிர்வீச்சுத் தொடர்பிலும் ஆராயும் என்று அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளது.

இருவேறு மனிதர்கள் இரு...

(6 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒருநாளைக்கு 150 பறவைகளுக்கு 22 மனிதர்களுக்கு, பத்து விலங்குகளுக்கு உதவிக் கொண்டிருக்கிறேனென எந்த மரமும் தினசரியில் அறிக்கை விடுவதில்லை. மானுடத்திற்குப் மடிபிச்சை அளித்தவனென்று துதிபாடிகளைக் கொண்டு தனக்குத்தானே விருது வழங்கிக் கொள்வ தில்லை.

காற்றைப் போல, ஒளியைப்போல தமது உயிர்வாழ்க் கையைப் பிறருக் கென்று அளித்து பிரபஞ்சத்தின் தொட ரோட்டத்திற்கு தன் கடமையை ஆற்றிய நிறைவோடு மரம் தனது ஆயுளை ஒரு நாள் முடித்துக் கொள்கிறது.

எதிர்காலத்தில் தம தில்லம் தமிழர்களால் இடிக்கப் படுமென்ற தீர்க்கதரிசனம் அவருக்கிருந்திருக்குமோ என்னவோ, ஆனால் தம்மின் தம்மக்கள் அறிவுடமைக்குறித்த கனவுகள் உ.வே.சா. விற்கு இருந்திருக்கலாம்.

ஆங்கில தினசரியில் இடிபடும் வீட்டைப் பார்த்தபோது அதிர்ச்சியாக இருந்தது.

உ.வே.சா. தமிழ்ச்சமூகத்திற்கு ஆற்றிய பெரும்பணிக்கு நன்றிக் கடனாக நமக்கு எது சாத்தியமோ அதைச் செய்திருக்கிறோம்.

மக்கள் அரங்கம்

சீமையில் அரசியல் தஞ்சம் தேடுவதற்காக

ஆலாய்ப் பறக்கிறார் ஒரு தமிழ் செய்தியாளர்

(யாழ் ஊடக மைய மாணவிகள் மூவர் எமக்கு அனுப்பிவைத்த கடிதமொன்று கீழே பிரசுரமாகிறது. பிரச்சினைகளைத் தவிர்த்துக் கொள்வதற்காக அவர்களின் பெயர் விபரங்கள் இங்கே வெளியிடப் படவில்லை.)

யாழ் பல்கலைக்கழக ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி மையத்தில் இரண்டு வாரங்களுக்கு முன்னர் நடைபெற்ற ஒரு சிறு மோதல் சம் பவத்தைப் பெரிதுபடுத்திக் காட்டச் சிலர் முனைகின்றார்கள்.

சில ஊடகங்களில் வெளிவரும் செய்திகள் ஏதோ பாரிய பிரச்சினையொன்று இடம்பெற்று விட்டது என்ற தோற்றப்பாட்டைக் காண் பிக்க முனைகின்றன.

ஊடகவியலாளர் ஒருவர் தாக்கப்பட்டார் என்பது வேறு. ஊடகவியல் மாணவர்கள் இருவர் தங்களுக்குள் மோதிக் கொண்டார்கள் என்பது வேறு. இரண்டு ஊடகவியலாளர்கள் மோதிக் கொண்டார்கள் என்பதே உண்மை.

தமிழ்ப் பத்திரிகையொன்றில் பணி புரியும் செய்தியாளர் ஒருவர் தன்மீது ஏதோ கண்மூடித்தனமாகத் தாக்குதல் நடத்தப்பட்டது என்பது போலக் கதைவிடுகிறார். தான் மட்டும்தான் ஊடகவியலாளர், ஊடகப் பயிற்சி மையத்தில் படிப்பவர்கள் எல்லோரும் வேறு துறையைச் சேர்ந்தவர்கள் என்பது போலப் பாசாங்கு காட்டப் பார்க்கிறார்.

தன்னைத் தாக்கியவர் என்று அவரால் குற்றஞ்சாட்டப்படுபவர், இராணுவப் புலனாய்வு பிரிவைச் சேர்ந்தவரென்று அவர் குற்றஞ் சாட்டுவதன் உள்நோக்கத்தை எங்களால் புரிந்துகொள்ள முடிகிறது.

"ஊடகவியலாளர் மீது தாக்குதல்., பொலிசார் மேலதிக நடவடிக்கை எடுக்காதது ஏன்?" என்று அவர் பணிபுரியும் ஊடகத்தில் தானே எழுதி தன் சார்பாக அச் செய்தியை வெளியிட்டதன் அயோக்கியத்தனத்தை ஊடகப் பயிற்சி மையத்தைச் சேர்ந்த மாணவிகள் என்ற வகையில் எம்மால் புரிந்துகொள்ள முடிகிறது.

பொலிஸாரும் நடவடிக்கை எடுக்கவில்லையாம், யாழ் பல்கலைக் கழக நிர்வாகமும் நடவடிக்கை எடுக்கவில்லையாம். சம்பந்தப்பட்ட வரின் முறைப்பாட்டுக்கு ஏற்ப் பொலிசார் தமது வரம்புக்குட்பட்ட நட வடிக்கையை எடுத்துள்ளனர்.

பல்கலைக் கழக நிர்வாகமும் இதே விடயத்தில் தலையிட்டுள்ளது.

தனது குற்றப் பத்திரத்தை அறிக்கையாக எழுதி யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் சகல பத்திரிகை அலுவலகங்களுக்கும் அவர் தன்னந் தனியாகக் காவடி எடுத்தார்.

தன்காக 56 பத்திரிகையாளர்களிடம் கையெழுத்து வாங்கியுள்ளாரென்ற தகவலும் எமக்குக் கிட்டியுள்ளது. யாழ்ப்பாணத்தில் 56 பத்திரிகையாளர் உள்ளனரா? என்ற கேள்வி ஒருபுறமிருக்கட்டும். ஒரு முக்கிய பத்திரிகை நிறுவனத்துக்கு கையெழுத்துக் கேட்க இவர் இன்னமும் அன்னக் காவடி எடுக்கவில்லை என்பதும் கவனத்துக் குரியது.

செய்தியாளர் ஒருவர் தனக்குத் தான் வரித்துக்கொண்ட கொள்கை களுக்காக இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த ஒருவரால் தாக்கப்பட்டாரென்று கூறி சுவீடனிலோ, நோர்வேயிலோ அல்லது டென்மார்க்கிலோ அகதியாக தஞ்சம் தேடும் முயற்சிக்காக இந் தளவு பொய்களை அவர் கட்டவிழ்த்து விடத் தேவையில்லை. அவ ரது தஞ்சக் கோரிக்கைக்கான விண்ணப்ப முயற்சியில் கைச் சாத்திட்ட 56 பேரும் பத்திரிகையாளர்கள் அல்லர். இரண்டு அலு வலகச் சிற்றூழியர்கள் மற்றும் கணினித் தட்டச் சாளர்கள், பக்க வடிவமைப்பாளர்களும் உள்ளனர் என்பது அவருக்கு மட்டுமல்ல எமக்கும் தெரிந்த உண்மை.

அரச விரோத இணையத் தளங்களில் இந்தப் பிரச்சினை தொடர்பாக உடனுக்குடன் செய்திகளை வெளியிடும் இவரின் உள்நோக்கங்கமும் தெளிவாகத் தெரிகிறதல்லவா?

பிரச்சினைக்கான மூல காரணமே இதுதான். ஊடக வளங்கள் பயிற்சி மைய மாணவிகள் சிலரின் புகைப்படங்களை இணையத் தளம் ஒன்றில் வெளியிட்டு குறிப்பிட்ட சிலரின் படங்களை வட்டம் போட்டுக் காட்டிக் கேவலப்படுத்தியதுதான் பிரச்சினையின் மூல காரணம். அக்கா, தங்கைகளுடன் பிறக்காத ஈனப்பிறவிகள் இனிமேலாவது இந்தச் செயலை நிறுத்துமா?

இப்படிக்கு

ஊடக மாணவிகள்

மரம் வளர்ப்போம் தழைத்தோங்கச் செ



உங்களை ஒரு மா மரக் கன்றை நட்டு வளர்க்கச் சென்னால் என்ன செய்வீர்கள்? நீங்கள் எப்படியே? தெரியாது பெரும்பாலானவர்களின் சிந்தனை, "இந்த கன்னு எப்போது வளர்ந்து, எப்போது மரமாகி, எப்போது காய்த்து, எப்போது பழம் சாப்பிடுவது? அதற்குள் நம் காலமே முடிந்துவிடும்" என்றுதான் போகும். ஆனால், தனக்கு மாம்பழம் கிடைக்குமா என எதிர்பார்க்காமல், தொடர்ந்து மா மரங்களை நடுபவர்களால்தான் இந்த உலகம் உயிர் வாழ்ந்துக் கொண்டிருக்கிறது என்பது காலம் உணர்த்தும் உண்மை. அப்படிப்பட்ட நல்ல உள்ளம் படைத்த மனிதர்களுள் ஒருவர்,

தனது பெயருடன் மரத்தைச் சேர்த்துக் கொண்டிருக்கும் தங்கசாமி, காடு வளர்ப்பில் உலகுக்கே இன்று ஒரு முன்னுதாரணமாக இருக்கிறார். உலகின் பல பகுதி களில் இருந்தும் வேளாண் ஆராய்ச்சியாளர்கள் தங்கசாமியின் தோட்டத்துக்கு வந்து பார்வையிடுகிறார்கள். தனி மனிதனாக அவர் செய்திருக்கும் சாதனைகள் பற்றி புத்தகம் எழுதுகிறார்கள். பத்தாம் வகுப்பு வரை மட்டுமே படித்திருக்கும் தங்கசாமியின் அனுபவங்கள், வேளாண் கல்லூரி மாணவர்களுக்கு பாடமாக இருக்கின்றன. புதுக்கோட்டை மாவட்டத்தில் கொத்த மங்கலத்துக்கு அருகே சேந்தன்குடி என்னும் கிராமத்தில், இருபத்தைந்து ஏக்கர் பரப்பளவில் அடர்ந்த காடு போல் இருக்கும் அவரது தோட்டத்துக்கு மாணவர்கள் பயிற்சிக்காக வருகிறார்கள். மரம் வளர்க்கும் தங்கசாமியின் பணி மற்றும் மக்களிடையே மரம் வளர்ப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் அவரது சேவை ஆகியவற்றைப் பாராட்டி ஜனாதிபதி விருது தங்கசாமிக்கு வழங்கப்பட்டுள்ளது. இன்று பலராலும் மலைப்பாக பார்க்கப்படும், கோடிகளுக்கு அதிபதியாக இருக்கும் மரம் தங்கசாமி, ஒரு காலத்தில் கடன்காரராகி, கடனை அடைக்க சொத்தை விற்றுவிட்டு எதாவது ஹோட்டலில் சர்வர் வேலைக்குப் பே?கலாமா என யோசித்துக் கொண்டிருந்தவர் என்பதுதான் உண்மை. அவர் வெற்றி பெற்றது எப்படி? அவரது கதையை அவரே சொல்கிறார்...

"எந்தக் கெட்டப்பழக்கமும் இல்லாத, உழைப்பில் நம்பிக்கை உள்ள விவசாயி நான். எனக்கு இரண்டு மனைவிகள், இரண்டு குழந்தைகள். எங்கள் குடும்பத்தார் அனைவரும் தினமும் பத்து முதல் பதினைந்து மணி நேரம் உழைத்தோம். ஆனாலும் நான் கடன்காரனானேன். 1975இல் வந்த கடுமையான வறட்சியின் போது, உற்பத்தி செய்த எந்த விவசாயப் பொருளுக்கும் கட்டுப்படியாகிற விலை இல்லை. இதனால் சாகுபடி செலவைக்கூட திரும்பி எடுக்கமுடியாத நிலை. விஞ்ஞான முறைப்படி விவசாயம் செய்ததால், இரசாயண உரங்களுக்குச் செய்த செலவே என்னைப் பெரிய கடன்காரனாக ஆக்கிவிட்டது. என்ன செய்வது என்று சிந்திக்கத் தொடங்கினேன். சொத்தை எல்லாம் விற்று கடன்களை அடைத்துவிட்டு, எதாவது ஹோட்டலில் சர்வர் வேலைக்குச் சேர்ந்து குடும்பத்தையாவது காப்பாற்றுவோம் என்று தோன்றியது. வேறு வழி இல்லை.

அப்போது பேராசிரியர் சீனிவாசன், "மரப்பயிரும் பணப்பயிரே" என்னும் தலைப்பில் அகில இந்திய வானொலியில் பேசியதைக் கேட்டேன். அதுதான் என் வாழ்வின் திருப்புமுனை. அன்றே நான் செய்துவந்த விவசாய முறைகள் அனைத்தையும் மூட்டைக் கட்டி வைத்துவிட்டு, மரம் வளர்ப்பது என்று முடிவு செய்தேன். அப்பே?து எனக்கு நாற்பத்தைந்து வயது. நூறு தேக்கு மரங்களை நட்டேன். இருபது வருடங்களுக்குப் பிறகு, ஒவ்வொன்றாக அவற்றை வெட்டி விற்று வயதான காலத்தை ஓட்டுவதுதான் அப்போதைய என் திட்டம். ஆனால், ஒரு வருடத்திலேயே இருபது அடி உயரம் அவைகள் வளர்ந்தன. அது தந்த உற்சாகத்தில் நூறு மாங்கன்று களை நட்டேன். அப்புறம் அது அப்படியே நூறு முந்திரி, நூறு புளி என்று வளர்ந்துக் கொண்டே போனது.

மர வகைகளைத் தேடி பயணம் செய்தபோது நம்மாழ்வார் பற்றி கேள்விப்பட்டு அவரைச் சந்தித்தேன். அவரைச் சந்தித்தது என் வாழ்வின் இரண்டாவது திருப்புமுனை. அன்றே அவரை என் குருவாக ஏற்றுக்கொண்டேன். தேசிய நிகழ்ச்சிகள், தேர்தல், தலைவர்களின் பிறந்த தினம் உட்பட எல்லா விஷேச நாட்களிலும் மரங்கள் நடுவேன். வீரப்பன் சுடப்பட்ட அன்று ஒரு சந்தன மரத்தை எங்கள் தோட்டத்தில் நட்டேன். எனக்கு மரம் நட ஒரு காரணம் தேவைப்படுகிறது. அதற்கு நான் சம்பவங்களையும் பண்டிகைகளையும் பயன்படுத்திக் கொள்கிறேன். அவ்வளவுதான். இப்போது என் தோட்டத்தில் நூற்றி தொன்னூறு சாதிகளைச் சேர்ந்த ஐயாயிரம் மரங்கள் இருக்கின்றன.

ஏன் ஒரே வகை மரங்களை வைக்காமல் பல்வேறு மரங்களை கலந்து நடுகிறேன் என்ற கேள்வி உங்களுக்கு எழலாம். ஒரு மரம் பூமியிலிருந்து ஒரு சத்தை எடுத்து, இன்னொரு சத்தை பூமிக்கு கொடுக்கும். இந்த மரம் கொடுக்கும் சத்தை உண்டு செழிக்கும் இன்னொரு மரம் வேறொரு சத்தை பூமிக்கு கொடுக்கும். இப்படியே இந்த சங்கிலி பலவேறு ஜாதி மரங்களுக்கும் தொடரும். காடு செழித்திருப்பதன் தத்துவம் இதுதான். எல்லா மர வகைகளும் ஒரே இடத்தில் இருக்கும் போது எல்லா மரங்களுக்கும் சரிசதமாக சத்து பகிர்ந்து கொடுக்கப்படுகிறது. இதனால், நானும் ஒரே வகையாக இல்லாமல், காடு போல் பல்வேறு வகை மரங்களை கலந்து வைத்திருக்கிறேன். வேம்பு, சந்தனம், ரோஸ்வுட், செஞ்சந்தனம், மகோகனி, நெல்லி, புளி என்று பல்வேறு மர வகைகளுடன் இப்போது என் பண்ணை ஒரு மாதிரி பண்ணையாக இருக்கிறது. கலப்பு பண்ணையின் மூலமே தன்னிறவு அடைய முடியும் என்பதுதான் என் அனுபவம். கடன் இல்லாத விவசாயம், நோய் இல்லாத வாழ்க்கை, நஞ்சில்லா உணவு இதன் மூலம்தான் சாத்தியம்.

திருமண வைபவங்களுக்கு செல்லும் பே?து மணமக்களுக்கு மரக் கன்றுகளைப் பரிசாகத் தருவேன். தலைவர்களை அழைத்து என் தோட்டத்திலும் எங்கள் கிராமத்திலும் மரம் நடும் விழாக்களை நடத்துகிறேன். என் வீட்டுக்கு வரும் ஒவ்வொரு விருந்தினர்களுக்கும் மரக்கன்றுகளை பரிசாக கொடுத்து அனுப்புவேன். பள்ளிக்கூடங்களுக்குச் சென்று குழந்தைகள் மத்தியில் மரம் நடுவதன் தேவையை வலியுறுத்திப் பேசுவேன். பள்ளிக்கூட வளாகத்திலேயே மரங்கள் நடுவேன். இன்று புதுக்கோட்டை மாவட்டத்தில் நான் மரம் நடாத பள்ளிக்கூடமே இல்லை எனலாம். மேலும் தமிழ்நாடு முழுக்கப் பயணம் செய்து பத்தாயிரம் வேப்பம் விதைகளை விதைத்திருக்கிறேன். அதில் ஆயிரமாவது மரமாகியிருக்கும். மரங்கள் என்னுடன் பேசுகின்றன, நான் அவைகளுடன் பேசுகிறேன். மரம் நடக்கும் என்பதையும் என் அனுபவத்தில் நான் கண்டிருக்கிறேன்.

இதையெல்லாம் சொன்ன போதும், ஆரம்பத்தில் நான் ஊர் ஊராகச் சென்று மரம் நடுவதைப் பார்த்து விட்டும் எங்கள் கிராமத்தவர்களும் சுற்று வட்டாரத்தைச் சேர்ந்த வர்களும் என்னைக் கிண்டலும் கேலியும் செய்தார்கள். "தங்க சாமிக்கு கிறுக்குப் பிடித்து விட்டது", "கிறுக்குப் போகிறது பார்" என்று என் காது படவே பேசினார்கள். அப்போது, "யார் கிறுக்கன் என்பதை காலம் தீர்மானிக்கும்" என்று மட்டும் அவர்களுக்குப் பதில் சொன்னேன். இப்போது அவர்களே ஒப்புக்கொள்கிறார்கள், "உங்களைக் கிறுக்கன் என்று சொல்லி, கடைசி யில் நாங்கள்தான் கிறுக்கன் ஆகிவிட்டோம்" என்று சொல்லுவதுடன், என்னைப் பின்பற்றவும் செய்கிறார்கள்.

நான் இரசாயண உரங்களை உபயோகிப்பதில்லை. விவசாயிகளுக்குத் தங்கம் குப்பைதான். "எருக்குழி இல்லாம ஏர் கட்டாதே. குப்பை உயர்ந்தால் குடி உயரம்" என்று அந்த காலத்திலேயே சொல்லியிருக்கிறார்கள். என் தோட்டத்தில் நூறுக்கும் மேற்பட்ட கம்போஸ்ட் குழிகளைப் பராமரித்து வருகிறேன். பண்ணைக் கழிவுகளை அதில் நிரப்பி விடுவேன். என் தோட்டத்தில் நிறைய ஆடு, மாடுகள் இருக்கின்றன. சூபா புல், என்.பி.21 கொழுக்கட்டைப் புல், கிளேரி செரியா போன்றவற்றைப் பண்ணையில் பயிரிட்டிருக்கிறேன். எனவே ஆடு, மாடுகளுக்குத் தீவனப் பிரச்சினை இல்லை. ஆடு, மாடுகள் போடும் சாணத்தை கம்போஸ்ட் குழிகளில் போட்டு நிரப்புவேன். மரங்களுக்கு இடையே வரிசை வரிசையாக குழிகளை வெட்டி, பண்ணைக் கழிவுகளை அதில் போடுகிறேன். மரங்களுக்கும் பயிர்களுக்கும்

நாட்டை சய்வோம்

அடியுரமாக வேப்பம் புண்ணாக்கைப் போடுகிறேன். மண் வளம் பிரச்சினையே இல்லை. எங்கள் தோட்டத்தில் களை எடுப்பதில்லை, உழுவதில்லை. கழிவுகளை அப்படியே விட்டுவிடுவோம். அவைகள் மக்கி உரமாகிவிடுகின்றன. மேலும் இந்தக் கழிவுகள் ஈரப்பதத்தைத் தக்கவைக்கவும் உதவுகின்றன. இப்படி கழிவுகளை அப்படியே விடும்போது, அதில் பல நுண்ணியிர்கள் உருவாகும். இந்த நுண்ணியிர்கள் மண்வளத்தைப் பாதுகாப்பதுடன், மண்ணைக் கிளறி உழ வேண்டிய தேவை இல்லாமல் செய்கின்றன. இப்போது என் தோட்டத்துக்கு மயில்கள் உட்பட பல்வேறு வகை பறவைகள் வருகின்றன. அவற்றில் பல நமது ஊர்களுக்கு முற்றிலும் புதியவை என்பது குறிப்பிடத்தக்கது. பூச்சிகளுக்கு வேப்பம் புண்ணாக்கு, வேப்பம் எண்ணெய், பீஞ்சுருவி இலை எல்லாம் போட்டு இடிச்சி ஊறவைச்சு தெளிக்கிறேன். பூச்சி கட்டுப்படுகிறது.

விதைகளைப் பொறுத்தவரைக்கும் உயர் விளைச்சல் தரும் சில விதைகளைத் தவிர வேறந்த வெளியிடு பொருள்களையும் நான் வாங்குவதில்லை. என்னைக் கேட்டால் விவசாயிகள், விஞ்ஞானிகளிடமும் ஆராய்ச்சியாளர்களிடமும் முனைவர்களிடமும் கொஞ்சம் எச்சரிக் கையாக இருக்க வேண்டும் என்றுதான் செ?ல்வேன். அவங்க ஆராய்ச்சியில் நல்லதும் வரலாம், கெட்டதும் வரலாம். சில வருடங்களுக்கு முன்னால் "ராஜ ராஜ"ன்னு ஒரு நெல் ரகத்தை ஆராய்ச்சியாளர்கள் அறிமுகம் செய்தார்கள். அதனைப் பயிரிட்ட எங்கள் கிராமம் மொத்தமும் நஷ்டமடைந்தது. மரங்களுக்கு இடையே காய்கறிச் செடிகளைப் பயிரிட்டிருக்கிறேன். இதிலிருந்து வீட்டுக்குத் தேவையான காய்கறிகள் கிடைக்கின்றன. அன்றாட பால் தேவைக்கு வீட்டிலுள்ள மாடு கறக்கிறது. திடீரென்று பணம் தேவைப்பட்டால், நாலைந்து ஆட் டை பிடித்து விற்றுவிடுவேன். என் னிடமுள்ள ஆடுகளையெல்லாம் நடமாடும் வங்கி என்றுதான் நான் சொல்வது.

நான் பத்தாம் வகுப்பு வரை மட்டும்தான் படித்திருக்கிறேன். ஆனால், இப்போது என்னால் ஆங்கிலத்தில் வாசிக்க முடியும். அறிவியல் மற்றும் விவசாயம் சம்பந்தப்பட்ட புத்தகங்கள் படிப்பது எனக்குப் பிடிக்கும். இப் பொழும் தொடர்ந்து வாசிக்கிறேன். உலகில் பெருகிவரும் மக்கள் தொகை காரணமாக தேவைகளும் பெருகிவிட்டன. இதற்காக எந்த வரை முறையும் இல்லாமல் இயற்கை ஆதாரங்கள் அழிக்கப்படுகின்றன. இப்படி யேத் தொடர்ந்தால் வரும் நமது சந்ததிகளுக்கு நாம் எதை விட்டு விட்டுப் போகப் போகிறோம் என்னும் கேள்வி எழுகிறது. நமது சந்ததியினர், "ஏன் சுவாசிக்கும் காற்று நஞ்சாக இருக்கிறது, ஏன் குடிக்கத் தண் ணீர் இல்லை, ஏன் மழை இல்லை" என்று நிச்சயம் கேட்பார்கள். இதற் குப் பதில் சொல்ல வேண்டிய பொறுப்பு நமக்கு இருக்கிறது. இப்போதே நாம் சுவாசிக்கும் காற்று, உண்ணும் உணவு, குடிக்கும் தண்ணீர் உட்பட அனைத்தும் மாசுபட்டுள்ளன. மாசுபட்டுவரும் சுற்றுச்சூழலைப் பாதுகாக்க மரங்கள் வளர்ப்பதுதான் இன்றைக்கு நம் முன்னுள்ள ஒரே வழி.

செஞ்சந்தன மரத்துக்கு அணு உலை கதிர் வீச்சைத் தடுக்கும் சக்தி இருக்கிறது. எனவே, ஜப்பானில் செஞ்சந்தனத்துக்கு தனி மவுசு. ஒரு டன் மூன்று இலட்சம் ரூபாய் மதிப்புக்குப் போகிறது. எந்த வறட்சியையும் தாங்கி வளரக்கூடியது செஞ்சந்தனம். எனவே எல்லோரும் செஞ்சந்தனம் வளர்க்கலாம். முக்கியமாக கதிர் வீச்சு பாதிப்பு உள்ள பகுதிகளில் செஞ்சந்தனம் வளர்ப்பது மிக நல்லது."

விடைபெறும் பே?து தங்கசாமி சொன்னார். "நான் எதுவும் புதியதாக செய்யவில்லை. நமது முன்னோர்களின் வழிமுறைக்கு, நமது பாரியம்பரியத்தை நோக்கித் திரும்பியிருக்கிறேன், அவ்வளவுதான். நாடெங்கும் மரம் வளர்ப்போம். சுற்றுச் சூழலை அழகுபடுத்துவோம். அதை விடாது பாதுகாப்போம்.

உபயோகமற்ற சின்னச்சின்ன பாத்திரங்களில் செடி வளர்க்க மன அழுத்தம் மறையும்.நம் மனது எப்போதும் ஈரமாக, கோபமற்று குளுமையாக இருக்கும். அதோடு நம்மால் ஒரு காட்டை உருவாக்க முடியாது. குறைந்தது ஒரு மரம் கண்டிப்பாக வளர்க்க முடியும். அப்படி வளர்ப்பதால் நம் வீட்டிற்குத்தேவையான நிழல், குளுமை கிடைப்பதோடு, ஆரோக்கியத்திற்கும் நல்லது. கொஞ்சம் நேசம், கொஞ்சம் மெனக்கெடல், கொஞ்சம் நேரம் ஒதுக்கினால் போதும், எல்லோரும் பசுமையைப் பயிரிடலாம்.உடலுக்கும் பயிற்சி. அழகுக்கு அழகு. குழந்தைகளுக்கும் தொலைக்காட்சியிலிருந்து விடுதலை. (நமக்கும் தான்)மனமிருந்தால் மார்க்கமுண்டு. உபயோகித்துத் தூக்கி எறியும் பெரிய அளவு கோப்பைகளில், குளிர்பானப்பாட்டில்களில், எண்ணெய்க் கொள்கலன் களில் தற்போது செடி வளர்க்கிறார்கள். உங்களின் சாளரங்களும் பசுமையால் நிறைய செடி வளருங்கள். குருவிகள், காக்கைகளையும் நண்பர்களாக்க வேண்டுமா? மரம் வளருங்கள்.

1990ஆம் வருடம் கிட்டத்தட்ட 80 மில்லியன் ஹெக்டேர் நிலப்பகுதி, 20 வருடத்தில் 130 மில்லியன் ஹெக்டேர் நிலப்பகுதியாகிவிட்டது. காடுகளை அழித்து வெற்று நிலங்களை அதிகமாக்கி விட்டோம். காடுகளை அழித்தலாலும்,தங்கம்,கனிமம்,நிலக்கரிச்சுரங்கம் தோண்டுவதாலும்,மற்றும் முறையற்ற வேளாண்மையாலும் தான் வெற்று நிலம் பெருகிவிட்டது என்கிறார்கள். நண்பர்களே! பூமியை அகழ்பவர்கள் அகழ்ந்து காயப்படுத்தட்டும். அவர்களைத் திருத்த நாம் யார்? ஆனால் நாம் மரம் வளர்ப்போம். நமது ஆரோக்கியம் காப்போம்.





கூட்டமைப்புக்கு இந்தியா விடுத்துள்ள அழைப்பு நாட்டின் இறைமைக்கு சவால்

தடுக்க வேண்டும் என்கிறது தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம்

தமிழ்த் தேசியக் கூட்டமை இந்தியாவுக்கு வருமாறு மத்திய அரசாங்கம் அழைப்பு விடுத்திருப்பது எமது நாட்டின் இறைமைக்கு விடுக்கப்பட்ட சவாலாகும் என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் டாக்டர் குணதாச அமரசேகர தெரிவித்தார். எனவே அரசாங்கம் கூட்டமைப்பின் விஜயத்தை தடை செய்ய வேண்டுமென்றும் அவர் கோரிக்கை விடுத்தார்.

இது தொடர்பாக டாக்டர் குணதாச அமரசேகர மேலும் தெரிவிக்கையில், இலங்கையின் பிரச்சினையை தீர்ப்பதற்கு இந்தியாவின் பங்களிப்பு அவசியமில்லை. எமது பிரச்சினைகளை அரசாங்கம் தீர்த்துக் கொள்ளும். அத்தோடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பது இலங்கையில் பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சியாகும்.

அவ்வாறானதோர் நிலையில் மன்மோகன்சிங் அக்கட்சிக்கு இந்தியாவுக்கு வருமாறு அழைப்பு விடுப்பது எமது நாட்டின் இறைமைக்கும், சுயாதிபத்தியத்திற்கும் விடுக்கும் சவாலாகும். அரசாங்கத்தின் அங்கீகாரம் இல்லாது கூட்டமைப்பிற்கு இங்குள்ள பிரச்சினைகள் தொடர்பில் இந்தியாவுடன் பேசுவதற்கு எந்தவிதமான அதிகாரமும் கிடையாது. எனவே கூட்டமைப்பின் இந்திய விஜயத்தை அரசாங்கம் தடை செய்ய வேண்டும்.

13 ஆவது திருத்தம் 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்தி அதிகாரப்பரவலாக்கலை மேற்கொண்டு நாட்டைப் பிரிக்கும் நிகழ்ச்சி நிரலை இந்தியா முனெடுக்கின்றது. இதற்கமைய பல்வேறு முனைகளில் எமக்கெதிராக அம்புகளை தொடுக்கின்றது. ஐ.நா. மனித உரிமை ஆணைக் குழுவில் இலங்கைக்கு எதிரான அமெரிக்காவின் பிரேரணையை இந்தியா ஆதரித்தது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துமாறு பல்வேறு விதமான அழுத்தங்களை பிரயோகித்தது. வடக்கில் மாகாண சபை தேர்தலை நடத்துமாறும், அதிகாரத்தை பரவலாக்குமாறும் அமெரிக்கா மேற்குலக நாடுகளை உசுப்பேற்றி இலங்கை அரசாங்கம் மீது கடுமையான அழுத்தங்களை இந்தியா பிரயோகித்து வருகிறது. அதற்காக கூட்டமைப்பை இந்தியாவுக்கு வருமாறு அழைப்பு விடுத்துள்ளது. இதற்கு அரசாங்கம் கட்டுப்படாது கூட்டமைப்பின் விஜயத்திற்குத் தடை விதிக்க வேண்டும் என்றார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பதிவுசெய்து கொள்வது அவசியம்

குறிக்கோளை அடைவது இதன் மூலமே சாத்தியம் - சுரேஷ் எம்.பி.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை பதிவுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இதன் மூலமே குறிக்கோளை அடைய முடியும் என்று கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ்.மாவட்ட எம்.பி. யுமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, கூட்டமைப்பைச் சிதைக்கும் ஆணையை தமிழர்கள் யாருக்கும் வழங்கவில்லை என தமிழரசுக் கட்சியின் தலைவர் இரா.சம்பந்தன் அவர்கள் வவுனியாவில் கடந்த 22.09.2012 அன்று நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் மத்தியக் குழுக் கூட்டத்தில் தெரிவித்ததாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. கூட்டமைப்பு பதிவு செய்யப்படுமா என்று கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

மேற்கண்ட கருத்தை யாரை நோக்கி சம்பந்தன் அவர்கள் வைக்கின்றார் என்பதை அவர் முதலில் தெளிவுபடுத்த வேண்டும். கூட்டமைப்பைச் சிதைக்கும் நடவடிக்கையை தமிழரசுக் கட்சியும் அதனை வழிநடத்தும் தலைவர்களும்தான் மேற்கொண்டு வருகின்றனர் என்பது இன்று உலகறிந்த உண்மை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஒரு பதிவு செய்த கட்சியாக மாற்றிக் கொள்வதை தமிழரசுக் கட்சியே கடந்த மூன்றாண்டுகளாகத் தடை செய்து வருகின்றது என்பது எல்லோரும் அறிந்ததே.

கூட்டமைப்பை யாரோ சிதைக்கப் போவதாக சம்பந்தன் கூறுகின்றார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரைத் தவிர கூட்டமைப்பிற்கு என்ன வடிவம் இருக்கின்றது? அதற்கென்று ஒரு செயலாளர், பொருளாளர் என யாராவது இருக்கின்றார்களா? முடிவுகளை எடுப்பதற்கு வல்லமை கொண்ட கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளை உள்ளடக்கிய உயர்மட்டக் குழு ஏதாவது இருக்கின்றதா? கீழிருந்து மேல் வரை தலைமையுடன் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளக் கூடிய வகையில் கிராமிய நகர மட்டக் கிளைகள் ஏதாவது இருக்கின்றதா? 2001 ஆம் ஆண்டிலிருந்து இயங்கி வரும் இவ்வமைப்பிற்கு குறைந்த பட்சம் நிதிக் குழுவென்று ஏதாவது இருக்கின்றதா? இவை எதுவுமே இல்லையென்பதுதான் நிதர்சனமான உண்மை.

இவையனைத்தையும் உருவாக்கத் தடையாக இருப்பது தமிழரசுக் கட்சியும் அதன் தலைமையுமே என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதுடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பதிவு செய்வது அவசியம் என்றும் கூறியுள்ளார்.

இலஞ்சம் பெற்ற வன இலாக்கா உதவி அதிகாரி கைது

10,000 ரூபா இலஞ்சம் பெற்ற சிரேஷ்ட வன இலாக்கா உதவியாளர் கைது செய்யப்பட்டுள்ளதாக இலஞ்ச, ஊழல் ஒழிப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

தொம்பகஹவெல - நீலபெத்த பிரதேசத்தில் அரச காணியில் விவசாயம் செய்த விவசாயிக்கு அது குறித்து எடுத்துகூறி சட்ட நடவடிக்கை எடுக்காமல் இருக்க வென குறித்த விவசாயியிடம் இருந்து வன இலாக்கா உதவி அதிகாரி 10,000 ரூபா லஞ்சம் பெற்றுள்ளார். தொம்பகஹவெல நகர் ஹோட்டல் ஒன்றில் வைத்து குறித்த லஞ்சத் தொகையை பெற்றுக் கொண்ட வேளை, குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஸ்ரீஜெயவர்த்தனபுர வைத்தியசாலை முகாமைத்துவத்தை மீளமைக்க வேண்டும்

கோப் குழு

தனியார் துறையுடன் போட்டியிடும் வகையில் ஸ்ரீஜயவர்தனபுர வைத்தியசாலையில் முகாமைத்துவம் பூரணமாக மீளமைக்கப்பட வேண்டுமென அரசாங்க நிறுவனங்களுக்கான நாடாளுமன்ற குழு (கோப்) பணித்துள்ளது.

இந்த வைத்தியசாலையின் கணக்காய்வு அறிக்கைகள் கடந்த வாரம் பரிசீலனை செய்யப்பட்டன. இந்நிலையில், அடுத்த மூன்று மாதங்களுக்குள் ஒரு புதிய கம்பனிக்கான திட்டமொன்றை தயாரிக்கும்படி முகாமைத்துவத் திடம் கூறப்பட்டுள்ளதாக "கோப்" தலைவர் அமைச்சர் டியூ.குணசேகர தெரிவித்தார்.

கீழ் மத்தியத்தர நோயாளர்களுக்கு சேவை செய்யும் வகையில் இந்த வைத்தியசாலையில் முகாமைத்துவம் மீளமைக்கப்பட வேண்டும் என அமைச்சர் டியூ குணசேகர கூறினார்.

கீழ் மத்தியதர வகுப்பினரால் தனியார் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறமுடியாது. ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலை இந்த வெற்றிடத்தை நிரப்ப வேண்டும். இப்போது இந்த வைத்தியசாலையில் தங்கியிருப்போர் வீதம் மிகவும் குறைவு. இந்த நிலைமை மாற்றப்பட வேண்டும் என அவர் கூறினார்.

இன்று அரசாங்க ஊழியர்களுக்கென மருத்துவ காப்புறுதி உள்ளது. இவர்களை இலக்கு வைத்து இந்த வைத்தியசாலை தொழிற்பட வேண்டும்.

கிழக்கு முதலமைச்சர் பதவி மு.கா.வுக்குக் கிடைக்காது

ஐ.தே.க.சொல்கிறது

கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சர் பதவி இனி ஒருபோதும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு கிடைக்கப்போவதில்லை. வெறும் பணத்திற்காகவும் பதவிக்காகவும் தமது இனத்தையே காட்டிக் கொடுத்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைமைப்பீடம் இன்று இலங்கை வாழ் முஸ்லிம்களின் முன்னிலையில் வெட்கித் தலைகுனிந்துள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று செவ்வாய்க் கிழமை நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

இங்கு உரையாற்றிய ஐ.தே.க.வின் பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசிம் கூறுகையில்,

கொள்கைகளுக்காவும் மக்கள் நலன்களுக்காகவும் எத்தனையோ தலைவர்கள் ஆட்சியை தூக்கி வீசிறிந்துள்ளனர். அண்மையில் இந்தியாவின் மேற்கு வங்க முதல்வரான மமதா பானர்ஜி தனது பிராந்திய மக்களின் நலன்களுக்காக அனைத்து பதவிகளையும் துறந்து மத்தியரசுடன் முரண்பட்டுள்ளார். இவ்வாறு முஸ்லிம் காங்கிரஸ் ஒரு போதும் செய்யாது. இருப்பினும் கிழக்கு மாகாண மக்களின் பிரச்சினைகளை மையப் படுத்தியே மு.கா. அரசுடன் இணைந்து இருக்கலாம்.

வெறும் பதவிக்காக விலை போன நிலையிலேயே மு.கா. தற்போதுள்ளது என்றார். முஸ்லிம் மக்களை காட்டிக் கொடுத்த முஸ்லிம் காங்கிரஸ் பசுத்தோல் போர்த்திய புலி என்பதும் தெரிய வந்துள்ளது.

13ஆம் திருத்தத்திற்கே முழு அளவில் சமாதிகட்ட முஸ்லிம் காங்கிரஸ் இணைந்துள்ளது. முதலமைச்சர் பதவியொன்றினை அக்கட்சி இனி எதிர்பார்ப்பது முட்டாள் தனம் என்பதனை மு.கா. புரிந்துகொள்ள வேண்டும் எனக் கூறினர்.

தந்தையின் வாகனம் மோதியதில் நான்கு வயதுச் சிறுவன் பலி

புத்தளம், தப்போவ பகுதியில் நான்கு வயதான சிறுவனொருவன் தனது தந்தையினால் செலுத்தப்பட்ட பஸ்ஸில் தற்செயலாக மோதுண்டு பலியாகியுள்ளான்.

இந்நபருக்கு மதியவேளை உணவு வழங்குவதற்காக இச்சிறுவனும் தாயாரும் வீதியோரத்தில் நின்றுகொண்டிருந்தபோது, இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பத்தினால் அதிர்ச்சியடைந்த தந்தை ஆபத்தான நிலையில் புத்தளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஆடை அவிழ்ந்தது கூட தெரியாமல் நின்ற சிறந்த குடிமகன் கைதானார்

யாழ்.நகரப் பகுதியில் குடிபோதையில் பொதுமக்களுக்கு அவதூறான வார்த்தைகளை பிரயோகத்து நிர்வாண கோலத்தில் நின்ற நபர் ஒருவர் நேற்று (26) புதன் கிழமை கைது செய்யப்பட்டுள்ளதாக யாழ்.பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த நபர் யாழ்.பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன் அவருக்கான ஆடையையும் யாழ்.பொலிஸாரே வாங்கிக் கொடுத்துள்ளதாக தெரியவருகின்றது.

இந்த நிலையில் குறித்த நபர் மதுபோதை மயக்கத்தில் யாழ்.பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன் இன்று (27) யாழ். நீதவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்படவுள்ளதாக யாழ்.பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

அண்மைக் காலமாக யாழ். குடாநாட்டில் பல பாகங்களிலும் மதுப் பிரியர்களின் தொல்லைகள் அதிகரித்து வருகின்றது.



சிறுப்பிட்டி கிழக்கு கிராம சேவையாளர் சமூக ஜோதி ஸ்ரீ லயன் கந்தையா ஸ்ரீகந்தராசாவின் பணி நயப்பு விழாவுக்கு பாரியார் சகிதம் விருந்தினர்கள் அழைத்துச் செல்லப்படுவதையும், வலி.கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன், பேராசிரியர் வேல்நம்பி ஆகியோர் பணப்பரிசில் வழங்கிக் கௌரவிப்பதையும், அகில இலங்கை சைவப்புலர் சங்கத்தின் செயலாளர் சைவப்புலவர் செ.கந்தசத்தியதாசன் பொன்னாடை போர்த்தி, மலர் மாலை அணிவித்து கௌரவிப்பதையும் படங்களில் காணலாம். (படம்: மருதனார்மடம் நிருபர்)

வானொலி அறிவிப்பாளரின் சிறுப்பியல்புகள்

தரப்பட்ட அறிவித்தலை வாங்கி ஒரு தடவை அல்ல, பல தடவைகள் நீங்கள் படித் துப் பார்த்தல் மிக அவசியம். மனதில் சில தடவைகளும் பின் வாய்விட்டு உரத்துப் பல தடவைகளும் படித்து ஒத்திகை பார்த்துக் கொள்ளுதல் மிக அவசியம்.

மேடையில் பேசி உங்களுக்கு அநுபவமிருக்கலாம். ஆனால் மேடையில் பேசுவது வேறு. வானொலிக் கலையகத்தில் அறிவிப்பாளராகப் பேசுவது வேறு. கலையகத்தில் (வானொலியில்), ஒலி வாங்கியின் முன், நீங்கள் கத்திப் பேசக்கூடாது. உரிய ஏற்ற இறக்கங்களை அளவோடு குரலில் காட்டித் தெளிவாகப் பேச வேண்டும். கத்திப் பேசினால், தெளிவு மறைந்துவிடும். அதற்காக ஒலிவாங்கியில் மிக மெதுவாக 'மைக்' சாதனத்தைக் கொஞ்சிப் பேச வேண்டும் என்பது கருத்தல்ல.

கத்திப் பேசுவதற்கும் கொஞ் சிப் பேசுவதற்கும் வானொலியில் சந்தர்ப்பங்கள் வேறு இருக்கின் றன. உதாரணமாக, ஒரு விளையாட்டை நேர்முக வர்ணனை செய்யும் போது, உரத்த குரலில்தான் செய்ய வேண்டும். நம் நாட்டு வீரர் வெற்றி ஈட்டியதை நேர்முக வர்ணனையில் 'கத்தித்தான்' சொல்ல வேண்டும்.

பெண்களின் சருமத்திற்குப் பாவிக்கும் கிறீம் விளம்பரத்தை அல்லது, ஒரு பஞ்சு மெத்தை விளம்பரத்தை, ரப்பர் செருப்பு விளம்பரத்தை, இசையுடன் பாடிக் கொஞ்சித்தான் செய்ய வேண்டும்.

"காற்றில் பறப்பது போன்ற மென்மை,
நீரில் மிதப்பது போன்ற சுகம்..."

"உங்கள் சருமத்தின் மென்மையைப் பாதுகாப்பது... சோப்!"

கொஞ்சலான விளம்பரத்துக்கு உதாரணம்.

சில இளைஞர்களுக்குச் சாதாரண இளமைக்குரல். சிலருக்கு மென்மையாக இருக்கும். சிலருக்கு மிகவும் ஆழமாக இருக்கும். யுவதிகளுக்கும் இப்படியே வேறுபட்ட 'குரல் அளவுகள்' இருக்கும்.

கலையகத்தில் ஒலிவாங்கியின் முன் நீங்கள் அமர்ந்து பேச ஆரம்பித்தும் உங்கள் குரல் அளவை (ஆங்கிலத்தில் Level என்று சொல்வதுண்டு) உங்கள் முன்னால் உள்ள கருவி காட்டும். அதற்கேற்றபடி உங்கள் ஆசனத்தையும் உங்கள் முகத்தையும் ஒலிவாங்கிக்கு அருகாகவோ தொலைவாகவோ மாற்றிக் கொள்ள வேண்டும். காரணம் சாதாரண மேடை ஒலி வாங்கிகள் போல ஒலிபரப்பு நிலைய ஒலிவாங்கிகளை உங்கள் அருகில் இழுக்க முடியாது.

அறிவிப்பாளரின் ஒலிவாங்கிகள் பெரும்பாலும் நிரந்தரமாகப் பொருத்தப்பட்டிருக்கும். சில ஒலிபரப்பு நிலையங்களில் அறிவிப்பாளருடன் ஒலிபரப்பு தொழில்நுட்ப ஊழியர் ஒருவரும் கூடவே கடமையில் இருப்பார். அப்படி இருக்கும் பட்சத்தில் அறிவிப்பாளரின் குரல் அளவைக் கவனித்து உரிய விதத்தில் அவர்களை அமரச் செய்தல் மட்டுமல்ல, இசைத்தட்டுகளை, குறுந்தகடுகளை (C.D) ஒலி நாடாக்களை (Tape) இயக்குதல் ஆகியனவும் இவரது பொறுப்பாக இருக்கும். தொழில் நுட்ப ஊழியர் என்று ஒருவர் உங்கள் நிலையத்தில் இருக்கிறாரோ இல்லையோ உங்கள் கலையகத்தில் உங்கள் முகத்திற்கும் கலையக ஒலிவாங்கிக்கும் இடையில் ஏற்ற தூரம் எவ்வளவு இருந்தால் சிறப்பாக இருக்கும் என்பதை நினைவில் வைத்திருக்க வேண்டிய பொறுப்பு உங்களுடையது. நீங்கள் ஒலிபரப்பு ஆசனத்தில் அமரும் எல்லா நேரங்களிலும் எல்லா வேளைகளிலும் இதனை மறக்காமல் அதே தூரத்தை கடைப்பிடிக்க வேண்டிய கடமையும் உங்களுடையது தான்.

Link தொடர்பு அறிவிப்புகள் மூன்று வரிகளுடன் தான் உங்கள் வானலை ஒலிபரப்புப் பயணம் ஆரம்பிக்கக்கூடும் என்று முன்னர் கூறியிருந்தேன். மூன்று வரிகள் தானே? இதைப்போய் எழுதிப்படிக்க வேண்டுமா? நான் எழுத்துப் பிரதி இல்லாமலே ஒலிவாங்கியில் பேசிவிடுவேன்... என்று பொறுமையற்ற சிலர் சலிப்படையலாம்.

வானொலியில் ஆணிவேராக இருக்க வேண்ய முதற் பாடம்: வானொலி நேரடி ஒலிபரப்பின்போது (ஒலிப்பதி வின்போது விஷயம் வேறு) பிரதி இல்லாமல், எழுதாமல்,



எதனையும் சிந்தித்துப் பேசக்கூடாது.

சிறு கூட்டங்களில் பொது மேடைகளில் பிரதி இல்லாமல் நீங்கள் பேசலாம். உங்கள் சறுக்கல்களை அவையோர் சகித்துக் கொள்ளலாம்.

"கோட்டைப் பல்கலைக்கழக துணைவேந்தர் பத்மநாதன் இப்போது பேசுவார். (திரும்பிப் பார்த்து யாரோடோ பேசிவிட்டு) ....ம் ..... மன்னிக்கவும் முன்னாள் துணை வேந்தர் பத்மநாதன் இப்போது பேசுவார்"

"இனி வீணை வாசிக்கிறார் தர்ஷினி செல்வநாதன்" (சற்று தாமதித்து) மன்னிக்கவும் வீணை அல்ல கோட்டு வாத்தியம் வாசிப்பார் - பிரிய தர்ஷினி செல்வகுணநாதன்.

மேடையில் இந்தத் தவறுகள்... "மன்னிக்கவும்" என்று சொன்னதும் மன்னிக்கப்படக்கூடும். ஆனால் வானொலி மரபில் இப்படியான தவறுகள் மன்னிக்க முடியாதவை பல குறைகளை இவை வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன.

வானொலி அறிவிப்பாளர் போதிய அளவு தயார் செய்ய வில்லை. கையில் தரப்பட்ட பிரதியைச் சரிபார்க்கவில்லை. படித்துப் பார்க்கவில்லை. தனக்குத்தானே உரத்து ஒத்திகை பார்க்கவில்லை. ஒலிபரப்புக்கு ஒரு சில நிமிடங்களுக்கு முன்னர் மட்டுமே கலையகத்திற்கு அவர் வந்து சேர்ந்ததால் முன் சொன்ன விஷயங்களைச் செய்ய அவருக்கு நேரமிருக்கவில்லை. ஒலிபரப்பு ஆரம்பிக்கும்போது வருடம், மாதம் கிழமை கூறி, நேரம் கூறி ஒலிபரப்பை ஆரம்பிப்பது மிக நல்லது. போயும் போயும் இதனை எழுதவேண்டுமா? இந்தச் சில்லறை விஷயத்தை நான் ஞாபகத்திலிருந்தே சொல்லி விடுவேனே!"

என்ற துணியும் சில அறிவிப்பாளர்கள் வெள்ளிக்கிழமை என்று கூறவேண்டிய இடத்தில் இன்று வியாழக்கிழமை என்று அறிவிப்பதும் - சில சமயங்களில் மாதம் வருடம் போன்றவற்றையே தப்புத் தப்பாகச் சொல்வதும் சகிக்க முடியாத தவறுகள்.

- ***விமல் சொக்கநாதன்.***
(வானொலிக் கலை நூலிலிருந்து)

வானலை நாதம்

சமூக வானொலியின் பணிகளும் செயற்பாடுகளும்

உள்ளூர் செய்திகளும் அபிவிருத்திக்கான நிகழ்ச்சிகளும்

எல்லாவற்றையும் விட அபிவிருத்திக்கான ஒரு சூழ்நிலையை சமூகவானொலி தனது நிகழ்ச்சிகள் வாயிலாக உறுதிப்படுத்த வேண்டும். தகவல்களை வழங்குதல், மனப்பாங்குகளில் தாக்கம் செலுத்தி அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு மக்களை இயைபடையச் செய்தல், அபிவிருத்தியின் சமூக அறுவடைகளை மக்களுடன் பகிர்ந்து கொள்ளுதல், அபிவிருத்தி தொடர்பான மக்களின் குரல்களுக்கு இடமளித்தல் என்பன சமூகவானொலியின் நிகழ்ச்சிகளில் முக்கிய இடம்பெற வேண்டும். அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பாக மக்களின் அபிப்பிராயங்கள், அபிவிருத்தி தொடர்பில் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் என்பனவும் இதில் முக்கிய இடம்வகிக்க வேண்டும். மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக மக்களிடமிருந்து கருத்துக்களைப் பெறுவது மக்களின் உண்மையான நிலைப் பாட்டை அறிந்து கொள்வதற்கு வழிவகுக்கும். அபிவிருத்தி தொடர்பில் - தனியார் நிறுவனங்கள், நிதியளிப்பு நிறுவனங்கள், மற்றும் அரசாங்கம் என்பனவற்றுக்கும் மக்களுக்குமான தொடர் பாடலை விருத்தி செய்யும் பணியினையும் சமூகவானொலி தனது நிகழ்ச்சிகளின் வாயிலாக மேற்கொள்ளலாம்.

சிறு சமூகக் குழுக்களுக்கு இடமளித்தல் சிறுபான்மையினரையும், ஓரங்கட்டப்பட்ட சமூகக் குழுக்களையும் தகவல் பரிமாறல் செயற்பாட்டில் பங்கேற்கச் செய்வதன் வாயிலாக, சமூக வானொலி ஒருமைப்பாட்டுக்கான கருவியாகவும் செயற்படமுடியும். சமூக வானொலி சமூகத்தின் உறுப்பி னர்களிடையே உரித்துடைமை உணர்வினை ஏற்படுத்துவதுடன் அவர்களுக்கிடையில் நெருக்கத்தையும் தோற்றுவிக்கும்.

ஒரு நாட்டின் பிரஜைகள் என்ற வகையில் ஒவ்வொரு வருக்கும் உள்ள சமுதாயக் கடப்பாடுகள் சமூக வானொலியின் நிகழ்ச்சிகளில் தெளிவுபடுத்தப்படல் வேண்டும். குறிப்பிட்ட பிரதேசத்தில் இடம்பெறும் சமய மற்றும் கலாசார நிகழ்ச்சிகளுக்கும் இடமளிக்கலாம். பல்லின மக்கள் வாழும் சமூகத்தில், வானொலி வித்தியாசமான சமயக் குழுக்கள் சகலவற்றுக்கும் சிறு சமய நிறுவனங்களுக்கும் நியாயமான முறையில் இடமளிக்க வேண்டும். சமூக வானொலியின் முகாமைத்துவத்துடனும், நிருவாகத்துடனும் தொடர்பான குழுக்களில் சிறுபான்மையினருக்கான பிரதிநிதித்துவத்தினை ஏற்படுத்துவதன் வாயிலாக இத்தகைய நிகழ்ச்சிகளை தங்குதடையின்றி சமூக வானொலி நடாத்தலாம். சிறுபான்மையினரின் மொழி, அவர்களுடைய கலாசாரம், சமூக நிகழ்வுகள் மற்றும் அவர்களுக்குத் தேவையான அம்சங்களைப் பெற்றுக்கொடுக்க வேண்டும். இலங்கையில் இந்நிலை ஊவா, கொத்மலை போன்ற சமூக வானொலிகளில் ஓரளவுக்கு உண்டு. ஒரு காத்திரமான சிவில் சமூக நிலைமையை உருவாக்கும் நிகழ்ச்சிகளும் சமூக வானொலியில் இடம்பெறவேண்டும். மக்கள் பங்களிப்பின்றி இவை இடம்பெறுமானால் சமூக மட்டத்தில் எந்தப் பலனும் ஏற்படப்போவதில்லை.

-எம்.சி. ரஸ்மின்
(சமூக வானொலி மனித வலுவாக்கத்திற்கான ஊடகம்)

லண்டனில் அமைந்துள்ள BBC உலக சேவையின் ஒலிபரப்பு நிலையம்



வானொலி, தொலைக்காட்சி நேயர்களுக்கு...

வானலைகளில் தவழ்ந்துவந்து வானொலி, தொலைக்காட்சிப் பெட்டிகளின் ஊடாக செவிகளுக்கு வந்துசேரும் நிகழ்ச்சிகளை கேட்டு ரசிக்கும் வடபகுதி நேயர்களின் கருத்துகளுக்கு 'வானலை நாதம்' பகுதி களம் அமைத்துக் கொடுக்கத் தயாராகவிருக்கிறது.

உள்நாட்டு வானொலி, தொலைக்காட்சி நிலையங்கள் வழங்கும் நிகழ்ச்சிகளைப் பற்றிய கருத்துக்களையும், அபிப்பிராயங்களையும் இந்தப் பகுதியில் பகிர்ந்துகொள்ளலாம்.

இலங்கை வானொலி மற்றும் தனியார் வானொலி நிலையங்களினதும், கொழும்பு மற்றும் யாழ்ப்பாணத்திலிருந்து ஒலிபரப்பாகும் தொலைக்காட்சி சேவைகளினதும் நிகழ்ச்சிகளை வடபகுதி நேயர்கள் தங்கள் பகுதிகளில் எந்தெந்த அலை-வரிசைகள் ஊடாகக் கேட்கக் கூடியதாக இருக்கிறது. ஒலி, ஒளிபரப்பாகும் நிகழ்ச்சிகளின் தெளிவு எவ்வகையில் அமைந்துள்ளது, அலை-வரிசைகளில் ஏதாவது குறுக்கீடுகள் உள்ளனவா, தங்கள் பகுதி களில் எந்தெந்த அலைவரிசைகள் ஒலிக்கவில்லை, அலைவரிசைகளில் காணப்படும் குறைபாடுகள் என்ன? அவற் றை எவ்வாறு நிவர்த்தி செய்யலாம் போன்ற தகவல்களை இந்தப் பகுதிக்கு எழுதியனுப்பலாம்.

வானொலி அல்லது தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பற்றிய விமர்சனங்கள், அபிப்பிராயங்கள் என்பன சுருக்கமான வகையில் அமைவது விரும்பத் தக்கது. உங்களுக்குப் பிடித்த மான நிகழ்ச்சிகள் பற்றியும், அவை சிறப்பான வகையில் அமைவதற்குரிய ஆலோசனை களையும் கூட இப்பகுதிக்கு எழுதியனுப்பலாம்.

உங்கள் கடிதங்களை பின்வரும் முகவரிக்கு அனுப்பிவையுங்கள். உங்கள் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் போன்ற விபரங்களையும் தவறாது குறிப்பிடுங்கள்.

"வானலை நாதம்"
தமிழ்நாதம்
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.


59
விலங்குப் பண்ணை

ஏற்கனவே காற்றாடி யந்திரக் கட்டிடம் சரிந்ததால் தெம்பூட்டப் பட்டவர்களாக, மனிதர்கள் விலங்குப் பண்ணையைப் பற்றி ஏராளமாக சரடுகளைத் திரித்துக் கொண்டிருந்தார்கள். இந்த நிலையில் பஞ்சம் என்கின்ற உண்மையும் அவர்களுக்குத் தெரிய வந்தால் என்னதான் சொல்வார்களோ? மிருகங்கள் தின்பதற்கு உணவு கிடைக்காமல் பட்டினி கிடக்கின்றன என்றும், தீராத வியாதியால் அவதியுறுகின்றன என்றும், ஓயாமல் ஒன்றொடொன்று சண்டை போட்டுக்கொண்டிருக்கின்றன என்றும். ஒன்றையொன்று அடித்துத் தின்கின்றன என்றும் மனிதர்கள் தங்கள் சுயநலம் கருதி, விலங்குப் பண்ணையைப் பற்றி ஏராளமான அவதூறுகளைக் கிளப்பிக் கொண்டிருந்தார்கள். உணவுப் பற்றாக்குறை வந்து விட்டது என்று அறிந்தால், அவர்கள் இன்னும் என்னென்ன சொல்வார்களோ? நெப்போலியன் இதற்கும் ஏற்பாடு செய்தது. உண்மை நிலை வெளியே தெரியாதிருப்பதற்காக விம்பரைப் பிரசாரத்திற்கு உபயோகித்துக் கொள்வது என்று தீர்மானித்தது. நாட்டிலே விலங்குப் பண்ணை பற்றி நல்ல அபிப்பிராயத்தைப் பரப்பிவிட அந்த வக்கீலை உபயோகித்துக் கொள்ளத் தீர்மானித்தது நெப்போலியன். வாரா வாரம், திங்கட்கிழமை அன்று விம்பர் வரும்போது, மிருகங்கள் அந்த மனிதர் கண்ணிலேயே படாமல் ஒதுங்கிக் போய்க் கொண்டிருந்தன. இப்போது சில விலங்குகள், முக்கியமாக ஆடுகள் மட்டும், விம்பர் முன் எதிர்ப்பட்டன. உணவு அதிகமான அளவு தரப்படுவதாக விம்பர் காதில் விழும் படியாக, ஆனால் தங்களுக்குள்ளாகவே அந்த ஆடுகள் பேசிக்கொள்ள வேண்டும் என்று நெப்போலியன் உத்தரவிட்டது. அதைத் தவிர பண்ணையில் இருந்த களஞ்சியங்களில் உச்சி வரையில் மண்ணைப் போட்டு மேலே இரண்டு அங்குலம் தானியம் பரப்பி வைக்கப்பட்டது. ஏதாவது ஒரு தகுதியான சாக்கை வைத்துக்கொண்டு விம்பர் அந்தக் களஞ்சியங்கள் இருந்த பக்கம் அழைத்துச் செல்லப்பட்டால், களஞ்சியங்களிலெல்லாம் தானியம் நிரம்பியிருப்பதாக எண்ணி ஊரில் சொல்லட்டுமே என்று திட்டமிட்டது நெப்போலியன். விம்பர் ஏமாளிதான். விலங்குப் பண்ணையில் உணவுக்குப் பஞ்சமில்லை என்கிற செய்தி நாளடைவில் ஊரில் வக்கீல் மூலம் நன்கு பரவிவிட்டது என்றுதான் சொல்ல வேண்டும். அப்படியிருந்தும் ஜனவரி மாதக் கடைசிக்குள் மிருகங்கள் உயிர் வாழ்வதற்கே ஏதாவது கொஞ்சம் தானியமாவது, வேறு எந்த உணவாவது வெளியே வாங்கித் தானாக வேண்டும் என்கின்ற நிலைமை ஏற்பட்டுவிட்டது. இந்த நாட்களில் அநேகமாக நெப்போலியன் வெளியே காணப்படுவதே கிடையாது. பண்ணை வீட்டுக்குள்ளேயே இருந்துவிட்டது அது. **(நாளை)**

வரைவோம் வாருங்கள்!



விடுகதைகள்



1.சித்திரையில் சிறுபிள்ளை, வைகாசியில் வளரும் பிள்ளை, ஆனியில் அழகுப் பிள்ளை, ஆடியில் விழும் பிள்ளை. அது என்ன?
2.சிவப்பு மொச்சைக் கொட்டை பகட்டுப் பட்டுச் சட்டை. அது என்ன?
3.சுற்றிச் சுற்றிவேலி நட்டு, சூரியனார்பட்டு உடுத்தி ஐயோ அவள் கையேந்நி நிற்கிறாள். அவள் யார்?
4.தண்ணியில்லாக் குட்டையிலே தத்தளிக்குது கெண்டை மீன். அது என்ன?
5.சேற்றுக்குள்ளே செங்கோழி முட்டை. அது என்ன?

விடைகள்:
1. பனம்பழம் 2. பட்டுப்பூச்சி
3. வாழைப்பழம் 4. தாக்கு
5. வெங்காயம்

நா காக்க

அந்த அலுவலகத்தில் வேலை செய்யும் நபர்களில் அரவிந்த் மிகக் கடுமையாகவும், திறமையாகவும் உழைப்பவன். பலரும் புகழும் படியாக தன் அலுவல்களைத் திறம்படச் செய்தான். மேலாளர் துரைசாமியே மனதிற்குள் அரவிந்தை பலமுறை வியந்து பாராட்டியிருக்கிறார். அவரது பேச்சு, வார்த்தைகள் கடுமையாக இருக்குமே தவிர, இயல்பாகவே துரைசாமி நல்ல மனிதர். அரவிந்தின் திறமை, உழைப்பு ஆகியவற்றால் கவரப்பட்டு, அந்த ஆண்டு அவரே அவனுக்கு பதவி உயர்வு தருவதாகத் திட்டம் போட்டிருந்தார். அவர் மனதில் இருந்ததைப் பற்றி அறியாத அரவிந்த் ஒருநாள் அலுவலகத்தில் அவரைத் தனியே சந்தித்துப் பேசினான்.

"சார், உங்களிடம் ஒரு விஷயம் பேச அனுமதிப்பீர்களா?" "சொல் அரவிந்த், என்ன வேண்டும்?" என்று கேட்டார் மேலாளர். "நான் வேலைக்குச் சேர்ந்து இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டன..." "ஆகட்டும். அதற்கென்ன இப்போது?" "நான்..... எனக்கு..... பதவி உயர்வு பற்றி...." தான் நினைத்துக் கொண்டிருந்ததை அரவிந்த் கேட்டிருந்தாலும், தனது சுபாவப்படி அரவிந்திடம் கடுமையாகப் பேச ஆரம்பித்தார். "பதவி உயர்வு தரும் அளவுக்கு நீ என்ன சாதித்து விட்டாய்?" என்று கேட்டார். அரவிந்திற்கு கோபம் வந்தது. "என்னுடைய திறமையும் உழைப்பும் உங்களுக்கே தெரியும்" என்று கூறினான் அரவிந்த். "அவற்றைக் குப்பையிலே போடு. அவற்றால் அலுவலகத்திற்கு என்ன லாபம்?" என்றார் துரைசாமி. இதைக் கேட்டதும் அரவிந்துக்கு "சுர்" எனக் கோபம் வந்தது. "ஏன் லாபமில்லை? என்னுடைய உழைப்பை நன்றாக உறிஞ்சிவிட்டு ஏன் இப்போது இப்படிப் பேசுகிறீர்கள்?" என்று கோபத்தில் கத்தினான் அரவிந்த். தன்னைப் பற்றி அரவிந்த் இவ்வாறு நிதானம் தவறிக் கூறியதைக் கேட்டு துரைசாமியும் கோபம் அடைந்தார்.

"உன்னைப் போன்ற ஆள் என் அலுவலகத்திற்குத் தேவையில்லை.உனக்கு பதவி உயர்வும் தர முடியாது, வேலையும் கிடையாது. போ, வெளியே" என்று சீறி வெடித்தார்.

பாவம், அரவிந்த்! கோபத்தில் நிதானம் இழந்து, தான் பேசிய சில வார்த்தைகளால் தனக்கு வரவிருந்த அரிய வாய்ப்பைத் தானே கெடுத்துக் கொண்டு தன் வேலையையும் இழந்து விட்டான்.

தனிமம் என்பது...



பிரபஞ்சத்தில் 90க்கு மேற்பட்ட தனிமங்கள் உள்ளன. எல்லாப் பொருடகளுமே இவற்றால் ஆனவைதான். ஒரு தனிமத்தில் குறிப்பிட்ட ஒரு வகை அணுக்கள்தான் இருக்கும். தனியாகவும் மற்றவற்றுடன் சேர்ந்த கூட்டுப் பொருளாகவும் தனிமங்கள் இருக்கும்.

உதாரணமாக ஹைட்ரஜன், ஒட்சிசன் என்ற இரண்டும் சேர்ந்த கூட்டுப் பொருள் நீர். சோடியம், குளோரின் என்ற இரு தனிமங்களைக் கொண்டது உப்பு.

கூட்டுப் பொருளாக மாற்றமடையாமல் கலந்திருப்பதும் உண்டு. உலோகத் தனிமங்கள் உலோகமல்லாத தனிமங்கள் என்று இரு வகையாகக் கூறப்படுகின்றன. முக்கால் பங்கு உலோகத் தனிமங்கள்தான். வாயு, திரவம், திடப்பொருள் என்ற மூன்று நிலைகளிலும் அவை உள்ளன. பெரும்பாலானவை திடப் பொருள்களே

பிரபஞ்சத்தில் அதிக அளவில் உள்ளது ஹைட்ரஜன். சூரியனும் நட்சத்திரங்களும் பெரும் பகுதி இதனால் ஆனவை தாம். பூமியில் ஒட்சிசனுக்கு அடுத்தபடியாகவுள்ளது சிலிகான். சுண்ணாம்புக்கல் தவிர இதர எல்லாப் பாறைகளிலுமே இது உள்ளது. மிக அரிதாக உள்ளவற்றில் ஒன்று ரேடியம். இது கதிரியக்கம் கொண்டது. இயற்கைத் தனிமங்களிலிருந்து செயற்கையாகவும் சிலவற்றைத் தயாரிக்கலாம். புளுட்டோனியம் இவற்றில் ஒன்று.

சுடோக்கு எண் 60 விடை

8	6	7	3	2	4	1	9	5
3	5	4	1	7	9	8	2	6
2	9	1	6	5	8	4	3	7
9	4	2	8	6	3	7	5	1
7	3	6	2	1	5	9	8	4
5	1	8	9	4	7	3	6	2
6	2	9	4	8	1	5	7	3
1	8	5	7	3	2	6	4	9
4	7	3	5	9	6	2	1	8

சுடோக்கு எண் 61

	2		4					8
4	8		2		6	5		
	6		9					
1	5	2						6
3						7	8	1
					9		1	
		4	1		3		2	9
9					2		4	

சிறுவர் அமுதம்

குழந்தைகளே!

3 முதல் 12 வயது வரையான பிள்ளைகளின் பிறந்தநாள் வாழ்த்து தமிழ்நாதத்தில் பிரசுரமாகும். நீங்கள் செய்யவேண்டியது இதுதான்:

ஏதாவதொரு விடயத்தைப் பூர்த்தி செய்தல். அத்துடன் பெயர், ஊர் பிறந்ததினம் என்பவற்றை மாத்திரம் எழுதி உங்கள் புகைப்படத்தையும் இணைத்து எமக்கு தபாலில் அனுப்பிவைக்க வேண்டும்.

சிறுவர் அமுதம், தமிழ்நாதம், 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

சரணடைந்த முன்னாள் புலிப் போராளிகளில் சுமார் 180 பேர் மீது வழக்கு



அரசாங்கம் காவலில் இருந்த 12ஆயிரம் முன்னாள் புலி உறுப் பினர்களில் 11ஆயிரத்து 500 பேர் மீண்டும் தமது குடும்பத்தவருடன் இணைவதற்கு அனுமதிக்கப்பட் டுள்ளனர் என இராணுவப் பேச் சாளர் பிரிகேடியர் ரூவன் வனிக சூரிய தெரிவித்தார்.

கைது செய் யப்பட்ட அல்லது சரணடைந்த இவர்கள் புனர்வாழ்வு அளிக்கப்பட்ட பின்னரே விடுவிக் கப்பட்டனரென்றும் அவர் கூறி னார்.

பாரதூரமான குற்றச் செயல் களில் நேரடியாகச் சம்பந்தப்பட்ட சுமார் 180 புலி உறுப்பினர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப் படுமெனவும் அவர் கூறினார்.

இன்னமும் விடுவிக்கப்படாமல் சுமார் 500 பேர் மட்டுமே உள்ள னர். இவர்களில் சுமார் 320 பேர் விரைவில் தத்தமது குடும்பத்தவ ருடன் மீள இணைய அனுமதிக் கப்படுவரென்றும் அவர் கூறினார். இவர்களுக்கு வழங்கப்பட்டுவரும் தொழிற்பயிற்சி முடிவதற்கு இன் னும் காலம் இருப்பதாலேயே அவர்களின் விடுதலை தாமதம் அடைவதாகவும் அவர் கூறினார்.

முன்னாள் புலி உறுப்பினர்க ளுக்கு அவரவர்கள் விரும்பியவாறே தொழிற்பயிற்சிகள் அளிக்கப்பட்டு வந்தன.

கணினிப் பயிற்சி, அழகுக்கலை, தையல் வேலை, மோட்டார் வாக னம் திருத்துதல் போன்ற பயிற்சி கள் இவர்களுக்கு வழங்கப்பட்டு வந்தன. சில பயிற்சிகளுக்கு நீண்ட காலம் தேவை.

சுமார் 320 பேர் இவ்வாறான நீண்ட காலப் பயிற்சி நெறிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

பாரதூர மான குற்றச் செயல் களில் நேரடி யாகவே சம்பந் தப்பட்ட சுமார் 180 புலி உறுப்பி னர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் இராணுவப் பேச்சாளர் கூறினார்.

வடமராட்சி கிழக்கில் மணல் வீதிகளுக்கு கிரவல் இடப்படுகிறது

வல்வெட்டித்துறை

வடமராட்சி கிழக்கில் சுவிஸ் அபிவிருத்தி நிறுவனத்தினால் வீட்டுத்திட்டம் நிர்மாணிக்கப்பட வுள்ளது. எனினும் அப்பகுதியில் காணப் படும் வீதிகளின் சீர்கேட் டினால் வீட்டு நிர்மாணப் பொருட் களை எடுத்துச் செல்வதில் சிர மங்கள் ஏற்பட்டுள்ளன.

வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ள ஆழியவளை, கொடுக்குளாய் போன்ற கிராமங்களில் மணல் வீதிகளே காணப்படுகின்றன. இவற்றை கிரவல் வீதிகளாக மாற்றியமைப் பதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. பருத்தித் துறை பிரதேச சபை, உடுத் துறை மீள் எழுச்சித் திட்ட அங் கத்தவர்கள், ஆழியவளை கிராம அபிவிருத்தி சங்கம் மற்றும் மக் கள் பங்களிப்புடன் இப் பணிகள் இடம்பெறவுள்ளன.

சுமார் ஒரு கிலோ மீற்றர் நீள மான இவ் வீதி உடுத்துறை 9ஆம் வட்டாரத்திலுள்ள முத்துப் பிள் ளையார் வீதி, ஆழியவளை சுனாமி திட்ட குடியிருப்பு வீதி, கொடுக் குளாய் சுனாமி திட்ட குடியிருப்பு வீதி ஆகியவற்றை உள்ளடக்கி யிருக்கின்றது.

இவ் வீதி அமைக்கப்படுவத னால் வத்திராஜன் பகுதியிலுள்ள 125 குடும்பங்களும் உடுத்துறை யிலுள்ள 280 குடும்பங்களும் ஆழியவளையில் 125 குடும்பங்க ளும் பயனடையர் என தெரிவிக் கப்படுகிறது.

புங்குடுதீவுப் பாடசாலைக்குப் புதிய பெயர் வளைவு

உடுவில்

புங்குடுதீவு மேற்கு அமெரிக்க மிஷன் தமிழ் கலவன் பாடசாலைக்கு புதிய பெயர் வளைவு அண்மையில் அமைக்கப்பட்டுள்ளது.

இப்பாடசாலையின் நுழைவாயிலில் இப்புதிய பெயர் அமைக்கப் பட்டுள்ளது.

ஆசிரியர்களுக்கான போஷாக்குக் கருத்தரங்கு

உடுவில்

தெல்லிப்பழை சுகாதார வைத் திய அதிகாரி பணிமனையினால் நடாத்தப்படும் பாடசாலை ஆசிரி யர்களுக்கான போஷாக்கு மற் றும் பருவ வயது பால்நிலை சுகாதாரம் தொடர்பான கருத் தரங்கு அண்மையில் நடைபெற் றது.

இரண்டு நாட்களாக நடைபெற்ற இக் கருத்தரங்கு தினமும் 1.00 மணி முதல் பிற்பகல் 5.00 மணி வரையும் நடைபெற்றது.

தெல்லிப்பழை கோட்டப் பாட சாலை ஆசிரியர்களுக்கான இக் கருத்தரங்கு தெல்லிப்பழை சுகா தார வைத்திய அதிகாரி பணி- மனை கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

சுகாதார திணைக்கள அதிகாரி கள் வளவாளர்களாகக் கலந்து கொண்டு கருத்தரைகளை வழங் கினார்கள்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் நாளை அடையாள அட்டை விநியோகம்

சண்டிலிப்பாய்

சண்டிலிப்பாய் பிரதேச செயல கத்தினால் நாளை 28ஆம் திகதி நடாத்தப்படும் விசேட நடமாடும் சேவையில் அடையாள அட்டை தொடர்பான சேவைகள் இடம்பெறும். சண்டிலிப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இந்த நிகழ்வு இடம்பெறும்.

இந்த நடமாடும் சேவையில் தேசிய அடையாள அட்டை புதி தாகப் பெறுபவர்கள், தொலைந்த அடையாள அட்டை, பழுதடைந்த மற்றும் பெயர் மாற்றம் செய்யப் பட வேண்டிய அடையாள அட் டைகள் மற்றும் முதியவர் அடை யாள அட்டை என்பவற்றிற்கான சேவைகளைப் பெற முடியும்.

அடையாள அட்டை, விசேட நடமாடும் சேவையில் பொலிஸ் முறைப்பாடுகள் மற்றும் புகைப் படம் எடுத்தல் என்பனவும் செயல கத்தினால் இலவசமாக மேற்கொள் ளப்படவுள்ளது. விண்ணப்பம் செய் தவர்கள் அனைவரும் தவறாது உரிய நேரத்திற்கு சமூகம் தரு மாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

கொத்தியாலடி மயானம் புனரமைப்பு

உடுவில்

சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயான அபிவிருத்திப் பணி ஆரம் பிக்கப்பட்டுள்ளது. புலம்பெயர் நாடுகளில் வாழும் சுன்னாகம் பகுதி மக்களின் உதவியுடன் இந்த இந்து மயான அபிவிருத் திச் சங்கத்தினால் அபிவிருத்திப் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வலி தெற்குப் பிரதேசசபையின் மேற்பார்வையில் இந்த இந்து மயான அபிவிருத்திப் பணியின் முதற்கட்டமாக மயானத்தைச் சுற்றி மதில் அமைக்கும் பணி நடைபெற்று வருகின்றது.

நாரந்தனையில் வீதி புனரமைப்பு

உடுவில்

ஊர்காவற்றுறைப் பிரதேச சபைக் குட்பட்ட நாரந்தனை செட்டியா தோட்ட வீதி புனரமைப்புச் செய் யப்பட்டுள்ளது. நெல்சிப் திட்டத் தின் கீழ் "ஊர்காவற்றுறைப் பிர தேச சபையினால் இவ் வீதி பல லட்ச ரூபா செலவில் புனரமைக் கப்பட்டுள்ளது.

இவ் வீதியைப் புனரமைப்பு செய் வதற்கு உதவிய அனைவருக்கும் இக் கிராம மக்கள் நன்றியினைத் தெரிவித்துள்ளனர்.

சரத் பொன்சேகா கொலை முயற்சி: மூவர் மீது வழக்கு

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை கொலை செய்வதற்கு முயற்சித்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் மூன்று புலி இயக்க உறுப்பினர் கள் மீது கொழும்பு மேல் நீதி மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எல்லாமாக 23 குற்றச்சாட்டு கள் இவர்கள் மீது முன்வைக் கப்பட்டுள்ளது.

தற்கொலைத் தாக் குதலை நடாத்துவதற்கு முன்ன தாக தற்கொலைதாரிகள் ஜென ரல் சரத் பொன்சேகாவை சில கால மாகப் பின்தொடர்ந்து வந்த னர் என்று சட்டமா அதிபர் தாக் கல் செய்த குற்றப் பத்திரத்தில் தெரி விக்கப்பட்டுள்ளது.

முகமாலை பொந்தர் குடியிருப்பில், மீள்குடியேற்றம் தொடர்பில் ஆராய்வு



கண்ணிவெடிகள் அகற்றப்பட்ட முகமாலை பிரதேசத்தின் பொந் தர் குடியிருப்பு பிரதேசத்தின் மீள் குடியேற்றம் எதிர்வரும் முதலாம் திகதி மேற்கொள்வதற்கு தீர்மா னிக்கப்பட்ட நிலையில் அது தொடர்பான முன் ஏற்பாடுகளை ஆராயும் கலந்துரையாடல் பச்சி லைப்பள்ளி பிரதேச செயலகத் தில் ஈ.பி.டி.பி பாராளுமன்ற உறுப் பினரும் பாராளுமன்றக் குழுக்க ளின் பிரதித் தலைவருமான முரு கேசு சந்திரகுமார் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

பொந்தர் குடியிருப்பைச் சேர்ந்த அறுபது வரையான குடும்பங்களை எதிர்வரும் முதலாம் திகதி அந்த பிரதேசத்தில் மீள்குடியேற்றம் செய்வது தொடர்பாகவும், அவர்க ளுக்கு தேவையான முதற்கட்ட அடிப்படை வசதிகளான தற்கா லிக வீடு, குடிநீர் உள்ளிட்ட பொது வசதிகளை ஏற்படுத்துவதற்கும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்ட தோடு முகமாலையின் ஏனைய பிரதேசங்களான வேம்பொடுகேணி, இத்தாவில்மேற்கு, முகமாலை தெற்கு, அம்பலவளை போன்ற பிரதேசங்களிலும் விரைவில் மீள் குடியேற்றம் செய்வது தொடர்பி லும் ஆராயப்பட்டது.

இந்த கலந்துரையாடலில் கிளி- நொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர், பிரதேச செயலர் மற்றும் அதிகாரிகளுடன் பிரதேச இரா ணுவ அதிகாரிகள் லெப் கேணல் துசித சில்வா, மேஜர் சமிந்த, பிர தேச செயலகத்தின் உதவித் திட்டப் பணிப்பாளர் ஜெயகுமார், கிராம அலுவலர் சுதர்சன் மக்கள் அமைப்பு பிரிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஆயிரக்கணக்கான பாக்ஸ்கான் தொழிலாளர்கள் சீனாவில் பாதுகாப்புப் பிரிவினருடன் மோதல்

தைவானை தளமாகக் கொண்ட பாக்ஸ்கான், வெளிநாடுகளில் உற்பத்தியைக் கொண்டிருக்கும் உலகின் மிகப் பெரிய மின் னணுக் கருவிகள் நிறுவனம் அதன் முக்கிய நிலையங்களில் ஒன்றான வட சீனாவின் ராய்யு வான் நகரத்தில் உற்பத்தியைத் தற்காலிகமாக நிறுத்த வேண்டிய தாயிற்று.

அங்கு 2,000 இணைப்புமுறைத் தொழிலாளர்கள் 1,500 பாதுகாப் புப் பிரிவினருடன் மோதினர்.

இந்த அமைதியின்மை சீனா வில் சமூக அழுத்தங்களுக்கு மற்றொரு அடையாளம் ஆகும் இங்கு பொருளாதாரம் முக்கிய மேலைச் சந்தைகளில் ஏற்பட்டுள்ள ஆழ்ந்த சரிவினால் தீவிரமாகச் சரிந்து விட்டது இது சீனக் கம்யூ னிஸ்ட் கட்சியின் ஆட்சியுடன் பெரும் தொழிலாள வர்க்கத்தை மோதல்களில் ஈடுபட வைத்துள் ளது என கருத் துகள் தெரிவிக்கப்படுகிறது.

10,000 தொழிலாளர்களுக்கு அரபு எமிரேட்ஸில் வேலைவாய்ப்பு

பயிற்சி பெற்ற பத்தாயிரம் தொழிலாளர்களுக்கு ஐக்கிய அரபு எமிரேட்ஸில் வேலைவாய்ப்பு பெறுவதற்கான சந்தர்ப்பங்கள் இருப்பதாக இலங்கை வெளி நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத் தின் தலைவரான சேனக அபய குணசேகர தெரிவித்தார்.

ஏற்கனவே பயிற்சி பெற்ற ஆயி ரம் தொழிலாளர்களை ஐக்கிய அரபு எமிரேட்சுக்கு அனுப்புவதற் கான வேலைகள் முன்னெடுக்கப் பட்டுள்ளதாகவும் அவர் கூறி னார்.

நிபந்தனையுடன் கூடிய பிணையில் சஞ்சீவ பண்டார

பல்கலைக்கழக மாணவர் சம் மேளனத் தலைவர் சஞ்சீவ பண் டார நேற்று முன்தினம் கொழும்பு கோட்டை மாஜிஸ்திரேட் கனிஷ்க விஜயரத்னவினால் நிபந்தனை யுடன் கூடிய பிணையில் விடுவிக் கப்பட்டார்.

திங்கள், புதன், சனி ஆகிய தினங்களில் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவில் ஆஜராகுமாறும், சட்ட விரோத அமைப்புகள் மேற் கொள்ளும் நடவடிக்கைகளில் சம்பந்தப்பட வேண்டாமென்றும் மாஜிஸ்திரேட் எச்சரிக்கை செய்து அவரைப் பிணையில் விடுவித் தார்.

உலக பார்வை

பயங்கரவாதமே முஸ்லிம்களின் வளர்ச்சியை தடுக்கிறது: ஒபாமா



பயங்கரவாதத்தால் அதிகம் பாதிக்கப்பட்டிருப்பது முஸ்லிம் கள் தான். இதனால் தான் அவர்களின் வாழ்க்கை தரம் வளர்ச்சியடையாமல் உள்ளது என அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவித்துள்ளார்.

ஐ.நா பொது சபை தொடக்க நிகழ்ச்சியில் கலந்து கொண்ட ஒபாமா பேசுகையில், முதன் முத லாக துனிஷியாவில் ஜனாதிப திக்கு எதிராக நடந்த போராட் டம், அரசை மாற்றியது.

இது எங்களுக்கு மிகுந்த ஆர் வத்தை ஏற்படுத்தியதால் தான், எகிப்து, ஏமன் மற்றும் லிபியா வில் நடந்த போராட்டங்களை ஆதரித்தோம். சர்வாதிகார ஆட் சியை விட மக்கள் வலிமையான- வர்கள் என்பதால் தான், சிரியா ஜனாதிபதி அசாத்தை பதவி விலக வற்புறுத்துகிறோம்.

ஈரான் நாடு பொறுப்பற்ற, வன் முறைக் கொள்கைகளை கடை-பிடிக்கிறது. பழம்பெருமை வாய் ந்த ஈரான் நாட்டு மக்கள், அண்டை நாடுகளை போல அமை தியான வாழ்க்கையை வாழ விரும்புகின்றனர்.

அணுசக்தியை அமைதி பணி க்கு பயன்படுத்தும் நாடுகளை மதிக்கிறோம். ஈரான் நாடு அணு ஆயுதத்தை தயாரித்தால், அது இஸ்ரேலுக்கு அச்சுறுத்தலை ஏற் படுத்தும். இதனால் வளைகுடா பகுதியில் அணு ஆயுத போட்டி ஏற்படும். கடந்த 2 வாரங்களுக்கு முன் வெளியான வீடியோ படம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது. இப்படம் முஸ்லிம்களை மட்டுமல்ல, அமெரிக்காவையும் அவ மானப்படுத்தியுள்ளது.

இந்த வீடியோ வெளியானதில் அமெரிக்காவுக்கு எந்த சம்பந் தமும் இல்லை. மத சுதந்திர த்தை நாங்கள் மதிக்கிறோம்.

அதே நேரத்தில் தனி மனித சுதந்திரத்தை பாதுகாக்கும் சட்ட மும் எங்களிடம் உள்ளது. இதனால் தான் இந்த வீடியோவை எங்களால் தடை செய்ய முடியவில்லை.

பயங்கரவாதத்தால் அதிகம் பாதிக்கப்பட்டிருப்பது முஸ்லிம் கள் தான். இதனால் மக்களின் வாழ்க்கைத்தரம் வளர்ச்சியடை யாமல் உள்ளது என்று தெரிவி த்துள்ளார்.

முன்னாள் மனைவி மீது கணவன் வினோத புகார்

தன்னுடைய உயிரணுக்களை திருடிச் சென்று விட்டதாக முன் னாள் மனைவி மீது கணவர் வழக்கு தொடர்ந்துள்ளார்.

ஐக்கிய அரபு நாடுகளில் ஒன் றான அபுதாபியை சேர்ந்த நபர் ஒருவர், ரஷ்ய பெண்ணை திரு மணம் செய்து கொண்டார்.

திருமணமாகி நான்கு ஆண்டு கள் ஆகியும் குழந்தை பிறக்க வில்லை. இதனால் அபுதாபியில் உள்ள மருத்துவமனையில், கண வன்- மனைவி இருவரும் குழந் தைப் பேறுக்காக சிகிச்சை பெற் றனர்.

ஆனால் சிகிச்சையில் வெற்றி கிடைக்காததால், அடுத்த மூன்று வாரங்களில் தம்பதியர் இருவரும் விவாகரத்து பெற்றனர்.

இந்த பெண் தனது சொந்த நாடான ரஷ்யாவுக்குச் சென்று விட்டார். அங்கு அவர் தனது முன்னாள் கணவரிடம் சொல்லிக் கொள்ளாமல் மகப்பேறு சிகிச்சை பெற்று, ஒரு மாதத்தில் கர்ப்பமா னார்.

4 மாதங்கள் கழித்து தனது வயிற்றில் வளரும் குழந்தைக ளுக்கு முன்னாள் கணவர் தான் தந்தை எனத் தெரிவித்தார்.

விசாரணையில், செயற்கை கரு வூட்டலுக்காக அபுதாபி மருத்துவ மனையில் வைத்திருந்த உயிர ணுக்களை போலி கையெழுத்து போட்டு பெற்றது தெரியவந்தது.

அதன்மூலம் ரஷ்யா மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று கருத் தரித்துள்ளார். இதை அறிந்த அந்த நபர் மிகவும் அதிர்ச்சி அடைந்தார்.

தற்போது தான் ஒரு குழந் தைக்கு தந்தை என்ற மகிழ்ச்சி இருந்தாலும், விவாகரத்துக்கு பிறகு உயிரணுவை திருடி குழந்தை பெறுவதை ஏற்றுக்கொள்ள முடி யாது எனத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அபுதாபி நீதிமன் றத்தில் தனது முன்னாள் மனைவி மீது வழக்குத் தொடர்ந் துள்ளார்.

சிரியாவின் உள்நாட்டுப் போர் உலக அமைதிக்கு களங்கத்தை ஏற்படுத்தும்

ஐ.நா தூதர்



சிரியாவில் உள்நாட்டு போர் தீவிரமடைந்து வரும் நிலையில், அமைதியை கொண்டு வரும் முயற்சிக்கு ஜனாதிபதி அசாத் ஆதரவளிக்கவில்லை என அந்நாட்டுக்கான ஐ.நா- அரபு லீக் அமைப்பின் தூதர் லக்தார் பிர ஹிமி தெரிவித்துள்ளார்.

சிரியா ஜனாதிபதியை சந்தித்து சமீபத்தில் பேச்சு நடத்திய லக் தார் பிரஹிமி, இது குறித்து ஜக் கிய நாடுகள் சபையின் பாது காப்பு கவுன்சிலில் உரையாற்றி னார்.

அப்போது அவர் கூறுகையில், சிரியாவில் நிகழும் வன்முறை யால் அந்நாட்டில் பாதுகாப்பான பகுதி என்றும் எதுவும் இல்லை. நாடு முழுவதும் கொந்தளிப்பான சூழ்நிலை நிலவுகிறது. 30,000 பேர் சிறையில் அடைத்து வைக் கப்பட்டுள்ளனர்.

இரகசிய முகாம்களில் அடை த்து வைக்கப்பட்டுள்ளோர் கடு மையான சித்திரவதைகளை அனுபவித்து வருகின்றனர். சித் திரவதையால் பாதிக்கப்பட்டு இது வரை 1,000 பேர் உயிரிழந்துள் ளனர்.

லெபனான், ஜோர்டான், துருக்கி, ஈராக் ஆகிய நாடுகளில் சிரி யாவைச் சேர்ந்த 2,80,000 பேர் அகதிகளாக தஞ்சம் புகுந்துள்ள னர்.

ஆட்சி அதிகாரத்தில் மாற்றம் கொண்டு வருவது தொடர்பாக பேச்சு நடத்துவதற்கு ஜனாதிபதி பஷர் அல் அசாத் தயாராக இல்லை. முன்பு தனது முழு மையான கட்டுப்பாட்டில் சிரியா இருந்த நிலையை மீண்டும் கட்ட மைப்பதற்கே அவர் விரும்புகிறார்.

இப்போதைய போராட்டத்தை வெளிநாடுகளின் சதிச்செயல் என்றே அவர் பார்க்கிறார் என்று தெரிவித்துள்ளார்.

பின்னர் அவர் செய்தியாளர்களி டம் கூறுகையில், சிரியா அரசு மக்கள் மீது அடக்குமுறைகளை கட்டவிழ்த்துவிட்டுள்ளது, இரக சிய சிறைச்சாலைகளை அமைத்து பொதுமக்களை துன்புறுத்தி வரு கிறது, அரசியல் மாற்றம் வேண் டும் என்ற மக்களின் கோரிக் கைக்கு செவிசாய்க்க மறுக்கிறது.

இப்போதைக்கு சிரியாவில் அமைதியை ஏற்படுத்துவதற்கான வாய்ப்பு இல்லை. அங்கு நாளுக்கு நாள் நிலைமை மோசமாகி வரு கிறது. போதிய உணவு, மருத் துவ வசதியின்றி அனைவரும் அவதிப்படுகின்றனர்.

இது அந்தப் பிராந்தியத்தில் மட்டு மல்ல, உலக அளவில் அமைதி மற்றும் பாதுகாப்பில் நிச்சயமற்ற தன்மையை ஏற்படுத்திவிடும் என்றார்.



அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நடைபெற்ற கிளின்டன் குளோபல் இனிசியேட்டிவ் குறித்த நிகழ்ச்சியில், ஜனாதிபதி பராக் ஒபாமாவை அறி முகப்படுத்தி பேசும் இனிசியேட்டிவின் தலைவரும் முன்னாள் ஜனா திபதியுமான பில் கிளிண்டன்.

சோமாலியா எம்.பி.க்கள் அனைவரையும் படுகொலை செய்வோம்: ஷெபாப் எச்சரிக்கை



சோமாலியா நாட்டை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒருவர் பின் ஒருவராக கொல்லப் படுவார்கள் என ஷெபாப் இயக கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

சமீபத்தில் நாடாளுமன்ற உறுப் பினர் முஸ்தப் ஹாஜி முகமத் மர்ம நபர்களால் சுட்டுக் கொல் லப்பட்டார்.

இவரது படுகொலைக்கு ஷெபாப் இயக்கம் பொறுப்பேற்றுள்ளது டன், நாடாளுமன்ற உறுப்பினர் களை இலக்கு வைத்து நடத் தப்படும் தாக்குதலின் முதற் கட்ட நடவடிக்கையே இது என்று அறிவித்துள்ளது.

இது குறித்து ஷெபாப் இயக் கத்தை சேர்ந்த நபர் ஒருவர் கூறுகையில், சோமாலியாவில் நாடளுமன்ற உறுப்பினர்கள் ஒரு வர் பின் ஒருவராக கொல்லப்படுவர். அவர்கள் முஸ்லிம்களுக்கு எதிராக உருவாக்கப்பட்டுள்ள அமைப்பிலிருந்து (அரசாங்கத் திலிருந்து) வெளியேறாவிட்டால் கொல்லப்படுவார்கள் என்று எச்ச ரிக்கை விடுத்துள்ளார்.

இளவரசி கேத் மிடில்டனின் படங்களை வெளியிட்ட ஆசிரியருக்கு கொலை மிரட்டல்

பிரிட்டன் இளவரசி கேத் மிடில் டனின் அரை நிர்வாண படங்கள், சமீபத்தில் பத்திரிக்கைகளில் வெளி யாகி பரபரப்பை ஏற்படுத்தின.

பிரிட்டன் இளவரசர் வில்லியம்- கேத் மிடில்டன் தம்பதியர் பல் வேறு நாடுகளுக்கு சுற்றுப் பய ணம் மேற்கொண்டனர்.

இவர்கள் பிரான்சின் தெற்கு பகுதியில் தங்கியிருந்த போது, இளவரசி கேத் மிடில்டன் அரை நிர்வாணமாக இருந்த போது, இர கசியமாக எடுக்கப்பட்ட படங்கள் பத்திரிக்கைகளில் வெளியாகின.

இப்படங்களை முதன் முதலாக பிரான்சின் க்ளோசர் பத்திரிக்கை வெளியிட்டது.

இது குறித்து அப்பத்திரிக்கை வெளியிட்டுள்ள அறிக்கையில், கேத் மிடில்டனின் படங்களை வெளியி ட்ட பின், எங்களுக்கு 300க்கும் மேற் பட்ட எதிர்ப்பு மின்னஞ்சல்கள் வந் தன. அதில் பல மின்னஞ்சலில் ஆசிரியருக்கு கொலை மிரட்டல் கள் விடுக்கப்பட்டிருந்தன. இது குறி த்து பொலிசில் புகார் தெரிவிக்கப் பட்டுள்ளது என்று கூறப்பட்டுள்ளது.

இளவரசர் ஹரியைக் கொலை செய்வதே எங்களது நோக்கம்

தலிபான்கள் மீண்டும் எச்சரிக்கை



பிரிட்டன் இளவரசர் ஹரியை கொலை செய்வதே எங்களது நோக்கம் என தலிபான்கள் மீண் டும் அறிவித்துள்ளனர்.

பிரிட்டன் இளவரசர் சார்லஸ்- டயானாவின் இளைய மகன் ஹரி. இவர் அந்நாட்டு இராணு வத்தின் விமான படையில் அதி காரியாக உள்ளார்.

தற்போது ஆப்கானிஸ்தானில் உள்ள நேட்டோ படையில் பணி புரியும் ஹரியை கொல்வதே எங் களது நோக்கம் என தலிபான்கள் இரண்டாவது முறையாக அறிவி த்துள்ளனர்.

இதற்காக நூற்றுக்கணக்கான இளைஞர்களுக்கு பயிற்சி அளி த்து வருவதாகவும் தலிபான்க ளின் செய்தி தொடர்பாளர் குவளி பூசுப் அகமதி அறிவித்துள்ளார்.

இவர் மேலும் கூறுகையில், முக மது நபியை இழிவுபடுத்தும் வித மாக அமெரிக்காவில் வெளியான படத்தை ஏற்றுக் கொள்ள முடி யாது. இதற்காக உலகம் முழுவ திலும் உள்ள இளைஞர்கள் தங் களது உயிரை இழக்க தயாராக உள்ளனர்.

குறிப்பாக பிரிட்டன் இளைஞர் கள் தீவிரமாக உள்ளனர். அதற் காக தங்களின் அன்பான குடும் பத்தினரை பிரிந்து ஆப்கானிஸ் தான் வந்துள்ளனர்.

இங்கு அவர்களுக்கு தீவிர பயிற்சி அளித்து வருகிறோம். முகமது நபியை இழிவுப்படுத்தி சினிமா தயாரித்ததற்கு பழிதீர்க் கும் வகையில் இளவரசர் ஹரியை கொலை செய்வார்கள். அதுவே எங்களது முக்கிய நோக்கமாகும்.

அமெரிக்கர்களும், பிரிட்டனை சேர்ந்தவர்களும் ஆப்கானிஸ்தான் மண்ணில் இருக்கக் கூடாது. அவர் கள் இங்கிருந்து உடனே வெளி யேற வேண்டும் என்று தெரிவித் தார்.

தொடர் உண்ணாவிரதம்:

தற்கொலை வழக்கில் செந்தூரன் புழலில் சிறையடைப்பு



உரிய ஆவணங்கள் இன்றி கடல்வழியாக தமிழகத்திற்கு வந்த இலங்கை அகதிகளை பொலி ஸார் கைது செய்து செங்கல்பட் டில் உள்ள சிறப்பு அகதிகள் முகாமில் வைத்திருந்தனர்.

அங்கு ஏற்பட்ட பிரச்சினையால் பூந்தமல்லியை அடுத்த கரை யான்சாவடியில் உள்ள சிறப்பு அகதிகள் முகாமிற்கு சிலர் மாற் றப்பட்டனர்.

ஓகஸ்ட் மாதம் செங்கல்பட்டு சிறப்பு முகாமிலிருந்து பூந்தமல்லி சிறப்பு முகாமிற்கு மாற்றப்பட்ட செந்தூரன் (வயது 34), சிறப்பு முகாம்களில் உள்ள அகதிகளை விடுதலை செய்து திறந்தவெளி முகாமிற்கு மாற்ற வேண்டும், தங்கள் மீதுள்ள வழக்குகளை முடிக்க வேண்டும் என்பது உள் ளிட்ட கோரிக்கைகளை வலி யுறுத்தி ஓகஸ்ட் மாதம் 6-ந் திகதி முதல் தொடர் உண்ணாவிரதம் மேற்கொண்டு வந்தார்.

செந்தூரனின் உடல்நிலை மோசமானதால் சென்னையில் உள்ள அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு சென்று அனுமதித்தனர். அங்கு சிகிச்சை முடிந்து மீண்டும் முகாமில் கொண்டு வந்து அடைக்கப்பட்டார்.

இந்நிலையில் தொடர்ந்து உண் ணாவிரதம் இருந்து வந்ததால் ஓகஸ்ட் மாதம் 31ம் திகதி பொலிஸார் செந்தூரனை தற் கொலை முயற்சி வழக்கில் கைது செய்து புழல் சிறையில் அடைத் தனர்.

பின் செப்டம்பர் 18ம் திகதி பினையில் வந்த செந்தூரனை பொலி ஸார் சிறப்பு முகாமில் அடைத்த னர்.

அன்று முதல் தொடர்ந்து 8வது நாளாக செந்தூரன் மீண்டும் உண்ணாவிரதம் இருந்து வந்தார். எனவே செந்தூரன் மீது பூந்த மல்லி பொலிசார் மீண்டும் தற் கொலை முயற்சி வழக்கில் கைது செய்து பூந்தமல்லி மாஜிஸ்தி ரேட்டு முன்னிலையில் ஆஜர் படுத்தினர்.

பின்னர் அவர் புழல் சிறையில் அடைக்கப்பட்டார்.

அடுத்த கட்டமாக மணல் சமாதி போராட்டம் நடத்தும் கூடங்குளம் மக்கள்



கூடங்குளம் போராட்டக் குழுவி னர் அடுத்த கட்ட போராட்டமாக இடிந்தகரையில் மணல் சமாதி போராட்டத்தைத் தொடங்குகின்றனர்.

மணல் சமாதி போராட்டம் என் பது, கடல் மணலில் தங்களது கழுத்து வரை உடலை புதைத் துக் கொண்டு போராட்டம் நடத்து வதாகும்.

காலை தொடங்கி மாலை 4 மணி வரை இந்தப் போராட்டம் நடைபெறுகிறது.

நேற்று கிராம மக்கள் சார்பில் மத்திய அரசு அலுவலகங்களை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர்.

மேலும் கல்லறைத் தோட்டத்தி லும் குழுமி நூதனப் போராட்டங் களை நடத்தினர். இந்த நிலை யில் இன்று கடல் மணலில் உட லைப் புதைத்துப் போராட்டம் நடத்துகின்றனர்.

2 வாரங்களுக்கு முன்பு கூடங் குளம் அணு மின் நிலையம் அருகே ஆயிரக்கணக்கான கிராம மக்கள் கூடி முற்றுகைப் போராட் டம் நடத்தினர். அவர்களைப் பொலிசார் கலைத்து விரட்டிய தைத் தொடர்ந்து பதட்டம் சற்று தணிந்தது.

இருப்பினும் பல்வேறு வகை யான போராட்டங்களை கிராமத்தி னர் தொடர்ந்து நடத்தி வருகின் றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னுக்கு பின் முரண் அறிக்கை வேண்டாம்: கருணாநிதிக்கு முதல்வர் ஜெ., ஆலோசனை

மக்களின் நலனை கருத்தில் கொண்டு, முன்னுக்குப் பின் முரணான அறிக்கைகளை வெளி யிடுவதை, கருணாநிதி நிறுத்திக் கொள்ள வேண்டும், என்று, முதல்வர் ஜெயலலிதா வலிறுத்தி யுள்ளார்.

இதுகுறித்து, அவர் வெளியிட் டுள்ள அறிக்கை: டீசல் விலை உயர்வு, சில்லறை வர்த்தகத்தில் அன்னிய முதலீடு ஆகியவற்றி லும் கருணாநிதியின் இரட்டை வேடம் தொடர்கிறது. மத்திய அரசின் அரசியல் விவகாரங் களுக்கான அமைச்சரவை குழு தான், டீசல் விலைக்கு ஒப்புதல் அளிக்கிறது. இக் குழுவில் தி.மு.க., சார்பில், கருணாநிதியின் மகன் அழகிரியும் உறுப்பினர். இக்கூட் டத்தில் அவர் கலந்து கொண்டு தன் எதிர்ப்பை தெரிவித்தாரர் ஒப் புதல் அளித்தாரா? என்பதை கரு ணாநிதி தெளிவு படுத்த வேண் டும்.

மத்திய கூட்டணியில் இருந்து



மம்தா பானர்ஜி வெளியேறியது போல், நீங்களும் வெளியேறுவீர் களா என்று,கருணாநிதியிடம் பத்திரிகையாளர்கள் கேட்ட போது, " ஆத்திரப்பட்டோ, அவசரப்பட்டோ உடனடியாக விலகிக் கொள் வதை விரும்புவதில்லை கொள்கை மாறுபாடுகள் ஏற்பட்டாலொழிய விலகுவதில்லை" என்று கருண நிதி பதிலளித்துள்ளார்.அதே சம யம், டீசல் விலை உயர்வு, சில் லறை வர்த்தகத்தில் அன்னிய முதலீடு அனுமதி ஆகியவற் றிற்கு எதிரான நாடு தழுவிய," பந்த் திற்கு தி.மு.க., ஆதரவளிக் கும் என்று அறிவித்து, அன்று தி.மு.க., அமைதி காத்தது.

பத்திரிகை செய்திகளை சுட் டிக்காட்டி, தி.மு.க., பந்தில் கலந்துகொண்டது போன்ற தோற் றத்தை, தன் அறிக்கையின் மூலம் ஏற்படுத்த கருணாநிதி முனைந் திருக்கிறார்.

இது ,அவரின் இரட்டை வேடத் திற்கு எடுத்துக் காட்டு.தமிழகத் தின் நன்மைக்காக, தமிழர்களின் உரிமைகளை காக்கும் பொருட்டு. நான் எந்த நடவடிக்கை எடுத்தா லும், அதற்கு எதிராக, முன்னுக் குப் பின் முரணான அறிக்கை களை வெளியிட்டு, குழம்பிய குட்டையில் மின் பிடிக்கிறார் கரு ணாநிதி. தமிழர்கள் நலனை கருத்தில் கொண்டு, முரண்பா டான அறிக்கைகளை வெளியிடு வதை, அவர் நிறுத்திக் கொள்ள வேண்டும்.இவ்வாறு அறிக்கை யில் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய செய்திகள்

கூடங்குளத்தில் அடுத்த ஆண்டு மின் உற்பத்தி துவங்கும்: ஆர்.கே. சின்கா

கூடங்குளம் அணுமின் நிலை யத்தின் முதல் பிரிவில், அடுத்த ஆண்டு மின் உற்பத்தி துவங்கும் என அணுசக்தித் துறை தலைவர் ஆர்.கே. சின்கா கூறியுள்ளார்.

இந்திய அணுசக்தி மாநாடு டில்லியில் நேற்று நடந்தது. மாநாட்டில் பங்கேற்ற ஆர்.கே.சின்கா கூறுகையில், கூடங்குளம் அணு மின் நிலையத்தில் ஆயிரம் மெகாவாட் திறன் கொண்ட முதல் பிரிவில் அடுத்த ஆண்டு மின் உற்பத்தி துவங்கும் என்றார்.

அணுசக்தி கட்டுப்பாடு கழகத் தின் நிபந்தனைகளாலும், உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகளாலும், மின் உற்பத்தி துவக்கும் திகதியை சரியாக கூற முடியாது.

கூடங்குளம் அணுமின் நிலை யத்தில், எரிபொருள் நிரப்பும் பணி நடந்து வருகிறது. இன்னும் சில மாதங்களில் இப்பணி நிறை வடையும்.

மின் உற்பத்தி ஆரம்பித்தால், தமிழகத்தின் மின் பற்றாக்குறை ஓரளவுக்கு குறையும்.

அதே நேரத்தில், இரண்டாவது மின் உற்பத்தி பிரிவு குறிப்பிட்ட காலத்துக்குள் செயல்படத் துவங் கும்.

இன்றைய சூழ்நிலையில், தொழில் நுட்பம் மூலப்பொருள் போன்றவை பற்றி கவலைப்படத் தேவையில்லை.

மக்களின் ஒப்புதலை பெறும் வகையில், நம்மை தயார் படுத் திக் கொள்ள வேண்டும். அணுக் கதிர் வீச்சால் ஏற்படும், அபாயம் பற்றிய விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டும். மகாராஷ்டிரா மாநிலம், ஜெய்தாபூ ரில் 9,000 மெகாவாட் மின் உற் பத்தி திறன் கொண்ட அணு மின் நிலையம் அமைப்பது தொடர் பாக, இறுதிக்கட்ட பரிசீலனை நடந்து வருவதாக சின்கா கூறி யுள்ளார்.

மத்திய இரயில்வே துறையில் கை வைக்க காத்திருக்கும் தி.மு.க



மத்திய அரசு கொண்டு வந்த டீசல் விலை உயர்வு, நேரடி அந் நிய முதலீடு போன்றவற்றிற்கு எதிர்ப்பு தெரிவித்து ஆளும் ஐக் கிய முற்போக்கு கூட்டணியி லிருந்து திரிணாமூல் காங்கிரஸ் விலகியது.

மத்திய அமைச்சரவையிலி ருந்து திரிணாமூல் அமைச்சர் முகுல் ராய்(இரயில்வே துறை) உட்பட 6 பேர் பதவி விலகினர்.

தற்போது காலியாக உள்ள இரயில்வே துறைக்கு தற்காலிக மாக நெடுஞ்சாலைத்துறை அமைச் சர் ஜோஷி நியமிக்கப்பட்டுள் ளார்.

இந்நிலையில் ஐக்கிய முற் போக்கு கூட்டணியின் நெருங்கிய தோழமைக்கட்சியான திமுக, இரயில்வே துறையை கேட்டு வருவதாக தகவல் வெளியாகி யுள்ளன.

மத்திய அரசில் 3 கேபினட் அமைச்சர்களையும் 4 இணை அமைச்சர்களையும் திமுக பெற்றி ருந்தது. அக்கட்சியைச் சேர்ந்த ஆ.ராசா, தயாநிதி மாறன் ஆகி யோர் 2ஜி முறைகேடுகளில் சிக்கி அடுத்தடுத்து மத்திய அமைச்சர் பதவிகளை ராஜிநாமா செய்தனர்.

ஆனால் தங்கள் கட்சியில் வேறு யாரையும் அமைச்சர்களாக நிய மிக்கும்படி திமுக தலைமை கேட்க வில்லை. இதனால் கேபினட் அமைச்சராக மு.க. அழகிரி மட் டுமே இருந்து வருகிறார்.

தற்போது திரிணாமூல் விலகி யிருக்கும் நிலையில் திமுக, அமைச்சர் பதவிகளைக் கோரக் கூடும் எனத் தெரிகிறது.

டி.ஆர். பாலு, டி.கே.எஸ். இளங் கோவன், ஏ.கே.எஸ். விஜயன், ஹெலன் டேவிட்சன், வசந்தி ஸ்டான்லி ஆகியோரில் ஒருவருக்கு அமைச்சர் பதவி கிடைக்கலாம் என்று திமுகவின் அறிவாலய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

திமுகவைப் போல தேசியவாத காங்கிரஸ் கட்சியும் கூடுதல் அமைச் சர் பதவிகளை எதிர்பார்த்து காத் திருக்கிறது.

அதே நேரத்தில் ராகுல்காந்தியோ தமிழக காங்கிரஸை சேர்ந்த மேலும் ஒருவருக்கு அமைச்சர் பதவி கொடுக்க நெருக்கடி கொடுத்து வருவதாகவும் கூறப்படுகிறது.



மோதிலால் நேருவின் 150 பிறந்தநாள் கொண்டாட்டத்தின் பொருட்டு, தலைநகர் டில்லியில் அவரது நினைவு தபால்தலையை, ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி வெளியிட்டார். அருகில் சோனியா உள்ளிட்ட காங்கிரஸ் பிர முகர்கள்.



அண்மையில் நல்லூர் ஞானோதய வித்தியாலயம் மற்றும் நவற்கிரி உதய நிலா முன்பள்ளி ஆகியவற்றிற்கு விஜயம் மேற்கொண்ட UR Friend Foundation நிறுவனத்தின் தலைவர் க. செவ்வேள் மற்றும் இயக்குனர் சுபாசினி வீரசிங்கம் ஆகியோர் முன்பள்ளி மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் பாடசாலை பாதணிகளை வழங்கிய போது எடுத்த படம் .

நரைனால் மேலும் தரமடைகிறது அணி- சமி

மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு அவ்வணியின் சுழற்பந்து வீச்சாளர் சுனில் நரைன் அதிக தரத்தை உட்கொண்டு வருவதாக அவ்வணியின் தலைவர் டெரன் சமி தெரிவித்துள்ளார்.

அத்தோடு சுனில் நரைன் அணிக்கு ஏராளமான நன்மைகளை வழங்குவதாகவும் டெரன் சமி புகழ்மாலை சூட்டினார்.

மேற்கிந்தியத்தீவுகள் அணியின் புதிய மாயச் சுழற்பந்து வீச்சாளரான சுனில் நரைன் அண்மைக் காலமாக மேற்கிந்தியத்தீவுகளின் அனைத்து வகையான போட்டிகளிலும் அவ்வணிக்கு அதிகளவிலான விக்கெட்டுக்களைக் கைப் பற்றி வருவதோடு, எதிரணிக்கு அதிக சவாலையும் வழங்கி வருகிறார்.

இந்நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள டெரன் சமி, மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு அதிக தரத்தைக் கொண்டுவருவதாகத் தெரிவித்ததோடு, சுனில் நரைனை எந்த விதத்திலும் பயன்படுத்தக் கூடியதாக உள்ளதாகத் தெரிவித்தார்.

ஆரம்ப பவர் பிளே ஓவர்களில், மத்திய ஓவர்களில், இறுதி நேரத்தில் எங்கு வேண்டு மென்றாலும் சுனில் நரைனைப் பயன் படுத்தக் கூடியதாக உள்ளமை அணிக்கு மிகவும் உதவியாக உள்ளதாக அவர் தெரிவித்தார்.

மேற் கிந் தி யத் தீவுகள் அணி தங்களுடைய முதலாவது சுப்பர் 8 போட்டியில் இங்கிலாந்து அணியைச் சந்திக் கவுள்ள நிலையில் இங்கிலாந்து அணியை வெற்றி கொள்ளலாம் என டெரன் சமி நம்பிக்கை வெளியிட்டார்.



குறிப்பாக இந்திய அணிக்கெதிராக இங்கி லாந்து அணி சுழற் பந்துவீச்சில் தடுமாறியதை அடுத்து இங்கிலாந் திற்கெதிரான போட்டியிலும் சுனில் நரைன் தனது ஆதிக் கத்தை வெளிப்படுத்த முடியும் என டெரன் சமி நம்பிக்கை வெளி யிட்டார்.

மேற்கிந்தியத் தீவுகள் அணி தங்கள் குழுநிலைப் போட்டியில் அவுஸ்திரேலிய அணிக்கெதிராக தோல்வியைச் சந்தித்ததோடு, அயர்லாந்திற்கெதிரான நேற்றைய போட்டி மழை காரணமாகக் கைவிடப்பட,

நிகர ஓட்ட சராசரி யின் அடிப் படையில் மேற்கிந்தி யத்தீவுகள் அணி சுப்பர் 8 சுற் றுக்குத் தகுதிபெற்றது.



யாழ் மாவட்ட ஹொக்கிச் சங்கம் மாவட்ட ஹொக்கி விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே கடந்த ஞாயிற்றுக்கிழமை நடத்திய ஹொக்கி இறுதிப் போட்டியில் போட்டி நாயகனாக தெரிவு செய்யப்பட யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வீரன் எஸ்.பிரதீபனுக்கு ஆட்டநாயகனுக்கான விருதினை பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மானிப்பாய் இந்துக் கல்லூரி இதிபர் எஸ்.சிவனேசன் வழங்குவதைப்படத்தில் காணலாம். (வலிகாமம் நிருபர்)

வீரர்களின் உடல்நலக் குறைவுக்கு எங்களின் தண்ணீர் காரணமல்ல

கிரிக்கெட் வீரர்களின் உடல் நலக் குறைவுக்கு எங்களின் குடி நீர் காரணமல்ல என்று குடிநீரை விநியோகித்த இலங்கையின் "லாப்ஸ்" நிறுவனம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் நடைபெற்று வரும் ருவென்ரி-20 உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் பங்கேற்றுள்ள நியூஸிலாந்து, அயர்லாந்து, தென்னாபிரிக்கா, அவுஸ்திரேலிய அணி வீரர்கள் சிலருக்கு வாந்தி, வயிற்றுப்போக்கு ஏற்பட்டது.

இதையடுத்து சுத்தமற்ற தண்ணீரைப் பருகியதாலேயே வீரர்களுக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டதாகவும், தண்ணீர் விநியோகித்த நிறுவனம் மாற்றப்பட்டு விட்டதாகவும் ஐ.சி.சி தெரிவித்திருந்தது.

ஐசிசியின் இந்தப் புகாரை மறுத்துள்ள "லாப்ஸ்" நிறுவனத்தின் முகாமையாளர் சமிந்தா விஜியசிங்கே, "நாங்கள் தண்ணீரை சோதனை செய்ததில் அதில் எவ்வித பிரச்சினையும் இல்லை என்பதை உறுதி செய்துள்ளோம்.

சந்தேகப்படும் படியான குடிநீர் போத்தல்களின் மாதிரிகளை எங்களுக்கு அனுப்புமாறு ஐ.சி.சியிடம் கேட்டோம்.

ஆனால் அவர்களிடமிருந்து எவ்வித பதிலும் இல்லை.வீரர்கள் மற்றும் அதிகாரிகள் தாங்கள் தங்கியிருக்கும் ஹோட்டல்களில் வேறு நிறுவனங்களின் குடிநீரையும் வாங்கி பருகியிருக்கலாம். அவர்களுக்கு பிரச்னை ஏற்பட்டதற்கு என்ன காரணம் என்று தெரியாது. ஆனால் எங்களின் குடிநீர் காரணம் கிடையாது. அதைத் தான் நான் எப்போதும் குடிக்கி றேன்" என்று கூறியுள்ளார்.

எவரெஸ்ற் விளையாட்டுக் கழகம்
URFF நிறுவனத்திற்கு நன்றி தெரிவிப்பு

புத்தூர் கிழக்கு புத்தூரில் அமைந்துள்ள எமது பிரதேசத்தின் முன்னணி விளையாட்டுக் கழகமான எவரெஸ்ற் விளையாட்டுக் கழகம் பிரதேசத்தின் விளையாட்டுத் துறையை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் இயங்கி வரும் ஒரு அமைப்பாகும். தேசிய சர்வதேச மட்டங்களிலான விளையாட்டுத் தரத்திற்கு எமது வீரர்களின் தகைமையை உயர்த்தும் குறிக்கோளுடன் இயங்கி வரும் எமது கழகத்துக்கு எமது வீரர்களின் தகைமையை உயர்த்தும் குறிக்கோளுடன் இயங்கி வரும் எமது கழகத்துக்கு எமது விளையாட்டு மைதானம் உரிய தரத்துடன் காணப்படாமை பெரும் இடையூறாகவே இருந்து வந்தது.

எமது நிலையறிந்து மைதானத்தை நேரடியாகப் பார்வையிட்ட UR Friend Foundatuin நிறுவனத்தின் தலைவரும் நிறுவனருமான திரு.கதிரவேல் செவ்வேள் அதை அபிவிருத்தி செய்வதற்கான உதவிகளைச் செய்து தருவதாக உறுதியளித்திருந்தார்.

அவரது அயராத செயற்பாட்டினாலும் வலிகாமம் கிழக்குப் பிரதேச செயலர் திரு.எம்.பிரதீபனின் முயற்சியாலும் எவரெஸ்ற் விளையாட்டுக் கழக மைதானம் அபிவிருத்தி செய்வதற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக பிரதேசச் செயலாளரால் கடிதம் மூலம் எமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆதரவு எமது பிரதேசத்தின் விளையாட்டுத்துறைக்குபெரும் உந்துசக்தியை அளிப்பதுடன் விளையாட்டு வீரர்கள் மத்தியில் தன்னம்பிக்கையையும் அதிகரிக்கும்.

இந்த நல்ல மாற்றங்களுக்கு வழவகுத்துத் தந்த திரு.க.செவ்வேள் அவர்கட்கும் பிரதேசச் செயலர் திரு.எம்.பிரதீபன் அவர்கட்கும் எவரெஸ்ற் விளையாட்டுக் கழகம் தனது இதயத்தின் ஆழத்திலிருந்து நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறது.

சுப்பர் 8 போட்டிகளில் ஷேஷவாக் ஆடுவாரா?



ருவென்ரி-20 உலகக் கிண்ணத் தொடரின் லீக் போட்டியில் வெற்றி பெற்ற இந்திய அணி சுப்பர்-8 சுற்றுக்கு தயாராகி வருகிறது. இதில், 7 துடுப்பாட்ட வீரர்கள் போர்முலாவை தொடர்வதா? அல்லது 5 பந்துவீச்சாளர்களுடன் களமிறங்குவதா? என்ற குழப்பம் ஏற்பட்டுள்ளது. ஷேவாக் கிற்கு ஏற்பட்டுள்ள காயமும் சிக்கலை அதிகரித்துள்ளது.

இலங்கையில் நடைபெற்று வரும் ருவென்ரி-20 உலகக் கிண்ணத் தொடரின் லீக் போட்டிகள் முடிந்து இன்று ஓய்வு நாள். நாளை முதல் சுப்பர்-8 சுற்று போட்டிகள் தொடங்குகின்றன. இந்திய அணி தனது முதல் போட்டியில் வரும் 28ஆம் திகதி அவுஸ்திரேலியாவை சந்திக்கிறது. அவுஸ்திரேலியாவுக்கெதிரான போட்டியில், விளையாடும் 11 வீரர்களை தெரிவு செய்வதில் பெரும் குழப்பம் நிலவுகிறது.விரல் பகுதியில் காயம் அடைந்த ஷேவாக்கிற்கு இங்கிலாந்துக்கெதிரான லீக் போட்டியில் ஓய்வு அளிக்கப்பட்டது. நேற்று மூன்று மணி நேரம் நடந்த பயிற்சியிலும் இவர் பங்கேற்கவில்லை. அதே நேரத்தில் இர்பான் பதான் துடுப்பாட்ட பயிற்சி மேற்கொண்டார்.

இது அடுத்த போட்டியில் ஷேவாக் இடம் பெறுவாரா? என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. இவருக்கு பதிலாக மீண்டும் இர்பான், தொடக்க வீரராக களமிறக்கப்படலாம்.இது குறித்து இந்திய அணியின் நிர்வாகி ஒருவர் கூறுகையில், ஷேவாக் நல்ல உடற்தகுதியுடன் தான் உள்ளார். அவுஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டிக்கு முன் இவரது காயத்தின் தன்மை அதிகரித்து விடக்கூடாது என்பதற்காகவே ஓய்வு அளிக்கப்பட்டது என்றார்.

இங்கிலாந்துக்கெதிரான லீக் போட்டியில் ஹர்பஜன், 4 விக்கெட் வீழ்த்தினர். இதையடுத்து 7 துடுப்பாட்ட வீரர்கள் போர்முலாவை கைவிட்டு 5 பந்து வீச்சாளர்களுடன் களமிறங்கலாம் என்ற கருத்து இந்திய அணியில் எழுந்துள்ளது.அவுஸ்திரேலிய அணியை எப்போதும் அச்சுறுத்தும் ஹர்பஜனை தவிர்க்க இயலாது. வார்னர், மைக்கேல் ஹஸ்சி போன்ற இடது கை துடுப்பாட்ட வீரர்களை சமாளிக்க இவர் கட்டாயம் இடம் பெற வேண்டும். தமிழக சுழற்பந்து வீச்சாளர் அஷ்வின் வாய்ப்பு பெறுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையில், பியுஸ் சாவ்லா இடம் கேள்விக் குறியாகிறது.

ஊக்கமருந்து சோதனை

இந்திய வீரர்கள் அஷ்வின், சேவாக், ஹர்பஜனிடம் ஊக்கமருந்து சோதனை நடத்தப்பட்டது. இதுகுறித்து அணி முகாமையாளர் ஆர்.என்.பாபா கூறுகையில், ஐ.சி.சி., நடத்தும் தொடர்களில், பயிற்சியின் போது அனைத்து அணி வீரர்களிடமும் ஊக்கமருந்து சோதனை நடத்தப்படும். இது வழக்கமான ஒன்று தான் என்றார்.

இப்பத்திரிகை இன்ஃபோமீடியா பிரைவேட் லிமிட்டட் நிறுவனத்தினால் இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள தமது அச்சகத்தில் 27.09.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது